# ரூபாவதி

அல்லது

# காணாமற் போன மகள்

ஒரு புதிய தமிழ் நாடகம்

இது

சென்னைக் கிறித்தவ கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

இயற்றியது



மதுரை
வி. சு. சுவாமிநாதன்
வெளியிட்டது

[பதிப்புரிமை]

THE B. N. PRESS,
Educational Printers,
Mount Road, Madras.

WUTC—Third Edition—1000 Copies

*To*

THE HONORABLE JUSTICE

**SIR S. SUBRAHMANYA AIYAR AVL., K.C.I.E.**

THIS DRAMA

**IS DEDICATED**

*As a token of respect and esteem*

**By the Author**

# உரிமையுரை

## எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சொல்வளர் மதுரைத் தொன்னகர் மணியே
தோமிலந் தணர்குல விளக்கே
நலவளஞ் சான்ற சுப்பிரமணிய
நம்பியே நியாயவான் மதியே
கல்விசேர் ரூபா வதியெனு நூலைக்
களிப்புடன் கையுறை கொடுத்து
மொல்வகை யுணர்தந் துட்பொரு ளொடி
யுரிமையிற் கொள்ளுதி யுவந்தே.

# INTRODUCTION

Of the time-honoured trifurcation of Tamil Literature into Verse, Music, and the Drama, the last has few or no representatives while the first and the second have many. The positive want of ancient dramatic literature has been accounted for by the lovers of Tamil in various ways, which seem more or less fabulous to those who have any tincture of English education. That the Tamil-speaking population have included the histrionic art among the degraded arts of life, fit to be pursued by the wandering nomads, or by the dregs of societies, seems to point to the conclusion that the art should in course of time have degenerated and fallen into disrepute or lacked cultivation at the hands of men of genius. In either case, any attempt in that direction in these days of western culture cannot but add to the reputation of one who, with the necessary intellectual equipment, energy, and zeal, devotes his nights and days to it.

In Madras, as in the Mofussil, we often come across travelling troupes of actors amusing audience with a variety of plays based on the three great magazines of poetic fiction, Ramayanam, Bharatam, and Kandapuranam. They are for the most part comical, and abound in vulgar conceits and voluptuous songs, gratifying to the vicious, but bearing no literary value.

If any drama has seen the light, that mingles interest with instruction, it is the excellent *Manonmaniyam*, by the late lamented Professor Sundaram Pillai, M.A., published a few years ago. Eminently classical as it is in diction, metre, and matter, it is simply excellent in characterisation and plot-evolution, and will do well on the boards.

As a drama, what *Manonmaniyam* is in verse, *Rupavati* is in prose. Though it is no praise to say that both are free from the Pigeon-Tamil which obtains so much even among the Scholars of Southern India, who however imbued with western knowledge and stirred up by western example from their wonted lethargy to a sense of national literature, only pander to the tastes of the low and the vulgar, the choice and chaste diction of these two dramas our new-fledged writers would do well to consult, if they would provide for their earnest readers opportunities of knowing what the classical Tamil is, and what great purposes it can be made to serve. Our Sastriar has in *Rupavati* pressed into his service, whenever necessary, the felicities of Tamil diction, pure and unmixed, and given the reading public not only an intellectual feast but so vivid a portraiture of the ways and manners of princes and people of the age of the literary Witenagemot in Madura that their imagination cannot but be quickened, exalted, and ennobled. If he has succeeded in this, as I verily believe he has, *Rupavati* fulfils the mission it was intended to fulfil.

The plot of the drama is as follows:—*Satguna*, king of Pandya, worsted in the battle of *Tiruppparanguntram*, was taken captive with his wife and son, and all were shut in the royal gaol in Madura by the victorious *Surasena*, king of Chera. Believing that the presence of the royal prisoners in his capital might be a source of frequent troubles to him and his sovereignty, Surasena banished Satguna and his Queen *Sundari* and retained their son in durance. Advised by *Suchila*, his wise minister, who had been the minister of Satguna ere his exile, Surasena allowed the prince *Sundarananda* freedom of movement, and companions to mitigate the keenness of his misery. One evening, when the Zephyr played gently, Sundarananda

with his two associates, *Sukumara* and *Chandramukha*, visited the park adjoining the palace, fell a-brooding upon the ills that might have overtaken his parents after their expulsion from the kingdom, sighed, sobbed, and fell into a swoon. At this moment of despair to the associates of the prince, there appeared in another part of the same garden the Princess *Rupavati*, only daughter of the victorious Surasena in company with *Ambujakshi* and *Kanakamalai* and heard some cries of distress. The Princess, looking wistfully about for a time, discovered, through a jasmine covert, the handsome Prince with his head on the lap of Sukumara, who was seated under a *Madavi-tree*, the trysting place of whispering lovers. A few minutes after, the Prince recovered from his swoon and would hasten to the gaol as it was late in the evening. But the Princess, having eyed the Prince in his faint, was so charmed by his person that she fell over head and ears in love with him, and let none of her companions know of this passion raging in her swelling bosom. She suppressed it, but it grew and grew till at last she neither ate nor dressed well. She repaired now and then to the park, the scene of their first love, and indulged in her reveries. Equally smitten was the Prince, but his thoughts of love had frequent interruptions at the thought of his dear parents in exile.

His parents, unaccustomed to travel on foot, went their way slowly and with fatigue, and his mother fainted. At this crisis a hunter appeared with a pail of water and helped Satguna to bring her back to her senses. When the Queen recovered, her lord and herself, escorted by the hunter, proceeded to the hermitage of *Jnanadipa*, where they were given bed and board by his disciple *A'tmanatha*. Soon as day broke, he recluse instructed his disciple to take his guests to the

court of Chola and ask *Virendra* to give them accomodation and protection in his palace, and offered Satguna a rosary with the blessing that no ills would happen to them thereafter. With a due sense of gratitude for his kindness as well as for his hospitality, the guests bade a hearty farewell to the hermit, and followed the cicerone of a disciple. He led them to the palace of Chola, where he delivered the message to Virendra and returned. The Chola king took the instructions as *ipse dixit*, opened his palace to them, and entertained them suitably to their rank.

The news of their safe arrival and entertainment at the court of Chola reached the ears of Surasena and excited in his mind many a doubt and fear of a future invasion. These fears and doubts were aggravated by the thought of his own tyranny and by the knowledge he had of the conspiracy of his friend *Nayavachana* with some of the lords of the locality to undermine his sovereignty. Surasena now resolved that, should Satguna and Virendra invade his conquered dominion, he would cause the Prince in durance to be murdered.

Happily, of this his secret resolve, his dear daughter Rupavati had an inkling, and she at once hastened to the rescue of her lover from the impending doom. She wrote to her lover Sundarananda acquainting him with her father's murderous resolution and with the possible means of effecting his escape and, enclosing the key of the *secret way* in it, threw it at midnight into her lover's cell. Sundarananda, busy with the thoughts of his dear parents in exile and giddy with the new-sprung love that had kept him sleepless, heard a rustle about the balcony and hastened to it. He picked up the letter and lighted a lamp,and read it over and over, but he could not make out from whom it had come.

[Here is a string of very fine arguments and conjectures as to the source of the letter.] At last, by a process of intellectual elimination, he discovered that it had come from Rupavati and prepared himself to meet her the ensuing night at the time and place mentioned in the letter. When the iron hand of Time tolled twelve, Sundarananda came out of his cell and stood waiting on tip-toe for Rupavati. The latter, true to her appointment, stole from her bed-chamber and appeared in male attire before her lover and argued with him as to the expediency of their instant escape. Her arguments had the desired effect. The Prince yielded, and the lovers left the metropolis. Ere day-break, they arrived at the hermitage of Jnanadipa, which had given shelter to the Prince's parents on their way to Chola's court. Here the lovers assumed the names *Sundara* and *Surupa*, and were comfortably accommodated. Their weary journey gave them sound sleep, and the incognitos, waking, quit the hermitage under the escort of the disciple for the palace of Chola, which was the asylum of Sundarananda's parents.

At the dawn of day, the gaolers opened the gaol, but Sundarananda was not there. His absence non-plussed them, and they were afraid of Surasena's punishment. They, therefore, concocted a story that they murdered the Prince in the act of self-defence, when he leaped over the prison-walls, and begged of the king pardon for their act without his sanction. Surasena easily swallowed the bait and forgave them. Inwardly glad of their wicked deed, the tyrant repaired to the harem to communicate the glad tidings to his wife, but alas! *honi soit qui mal y pense*, the news of Rupavati's disappearance from her bed-chamber fell on his ears like a knell. At once he despatched messengers to all corners of the earth to

trace out his *Missing Daughter*, but none brought back any news of her life or death. Enraged at this like a bull at the sight of a red rag, Surasena ruled his subjects with the rod of iron, and believing that his subjects had removed his daughter by night and done her to death, he incarcerated Nayavachana, whom he suspected to have had a hand in the imagined crime.

Meanwhile, the dismal tidings of Sundarananda's assassination by the gaolers had embittered the feelings of Satguna and sharpened the rancour of Virendra. The latter sent *Tantradhira* as ambassador to the court of Surasena to ask him to restore to Satguna his kingdom and, in default, to inform him of his readiness to take the field. Before he returned, the intelligence of the sudden disappearance of Rupavati, as if carried away by a goblin, lightened the sorrow-laden hearts of many a comforter of Satguna at Chola's Court. But it could in no degree console Satguna, who was wild with grief. Now Tantradhira returned, severely flogged on his way, an act believed to have been done at the instance of Surasena. This insult to his embassy exasperated Virendra, who with a large force under the command of Sundara and accompanied by Satguna, encamped on the northern bank of the Vaigai.

Now, the long-expected messenger returned from Karuvur, Surasena's capital, with the sad news that, on account of a war raging between *Rajopaya*, his minister, and *Viramartanda*, Satguna's father-in-law and King of Thondai Nadu, no army could be forthcoming. This broke down the hopes of Surasena, and he immediately conferred with Suchila and asked him to negotiate terms of peace with Virendra. Suchila, whose heart was filled to the brim with aversion to the tyrant, and who was desirous of wreaking vengeance on him for his tyranny, be thought himself and proceeded to the camp of Chola and in-

formed Virendra that he had persuaded his monarch to avoid the impending war, as otherwise his already afflicted subjects might fall victims to the engines of war. At this, so strangely surprised was Virendra that he could not believe his own eyes and consulted Satguna about the character of Suchila and the object of his visit. Satguna gave a satisfactory account of his former minister and helped him to express his consent to the peace; but Chola would not agree to it, for in his heart rankled the insult offered to his embassy. As soon as this secret canker in his mind was disclosed to him, the foreseeing Suchila informed him of Surasena's proclamation to give reward to those who would detect the ruffians that had insulted Tantradhira. When this unction was applied to his cankerous heart, he consented and began to settle the terms of peace. Now Suchila introduced Surasena, accompanied by his body-guards, to Virendra who received them with due respect. Then the terms were given out; that Surasena must restore his kingdom to Satguna and that he must revert to his own realm. This amicable settlement brought back to the minds of the aggrieved Satguna and Surasena the loss of their only children and brought tears to their eyes. But these tears of sorrow were in the twinkling of an eye changed into tears of joy, for, now appeared before them Sundara and Surupa stripped of their disguise and clad in their usual apparel. Drunk with joy at the sight of their missing son and daughter, they made haste to unite the hands of those who were already united in their hearts; and Surasena, convinced of the cruelty done to Nayavachana, ordered his release and begged his pardon. Then Surasena invited Satguna, Virendra and others to his metropolis and wished that a day should be fixed for the marriage. An astrologer was consulted, and the marriages of

Ambujakshi, Suchila's daughter, to Sukumara and Kanakamalai to Nayavachana's son, Chandramukha, were proposed. Thus three marriages had to be celebrated. But three is a number of very bad omen, and so they arranged for the celebration of their marriages on the day, Friday, when happily fell the sixtieth-year ceremony of the laureate of the Pandian Court, *Vidhya Sagara*, the guru of Sundarananda and his associates. Thus was the objection obviated and the occasion made jubilant all round.

> " O world, thy slippery turns ;—Fellest foes,
> Whose passions and whose plots have broke their sleep
> To take the one the other, by some chance,
> Some trick not worth on egg, shall grow dear friends
> And interjoin their issues."

*Rupavati*, the first fruit of the author, is excellent in its own way. It contains magnificent speeches which would repay perusal, and the characters in it are almost all poetical or have poetry in them.

*Rupavati*, the heroine, is the only daughter of Surasena. Endowed by nature with the gifts of body and mind, she falls in love with the only son of Satguna. The parents of the lovers live only for their children, and but for them their life and dominion are trifles 'light as air.' The angelic heroine is a perfect dissembler and is well acquainted with the laws of fashion and etiquette. In Act I, Scene 2, her apparently innocent question 'will one swoon when he weeps'to continue the narrative,and the skilway in which she tries to draw out from her companions an unvarnished tale of her lover's character and disposition, and the sound rebuke administered to Kanakamalai for her interference while speaking amply testify to the statement. Further, she is a poetic being and often speaks verses ; she

appreciates music and loves songs: she exhibits the power of her tongue in the scene in which she brings down Sundarananda to agree to their instant escape: she braves all fatigues and hardships, being supported by the strength of her love; she keeps a steady reserve in the court of Chola to avoid detection. Her part in this drama reminds us of the charming group of Shakespeare's women such as Julia, Viola, Portia, Rosalind, and Imogen who, under force of circumstances, assumed the disguise of male attire. What distinguishes Rupavati most is her learning, intelligence and fidelity in love.

*Sundarananda*, her lover, is a man of superior intelligence, well-educated, and well-versed in the arts of war. He is a *Dhirodatta*, to use the expression of the Sanskrit dramatists, and, in the language of Surasena, he is an incarnation of meekness and gentleness, and is a poet as well as a songster. His learning is manifest in his explanation of the name *Thiruvappanur* and in his references to Ahapporul Ilakkanam (Act III, Scene 6). The most remarkable trait in his character, besides his love to God, is his great attachment to his parents, of whom he thinks with pious affection and tearful eyes, when they are doomed to suffer the hardships of exile and when he is himself oppressed by the pangs of love. Another noble trait in him is his gratefulness to his benefactors.

*Satguna*, his father, is an incarnation of virtue. Full of piety and calm in judgment, he is loved by his subjects as well as by his enemies. His wife, *Sundari*, is a good match for him in every respect.

*Suchila*, his dutiful minister, is a subtle psychologist and sees through Surasena. He is convinced that virtue will

triumph independent of extraneous aid. His ministerial tact is manifest in the scene where he negotiates peace between Surasena and Virendra.

*Surasena*, father of the heroine, is rough, rude and revengeful. His conquest has, as his daughter says, made him ambitious and hardened his heart. He would yield to no persuasion but force. It was only when his forces failed that he conferred with his minister. The only redeeming point in his character is that he is capable of remorse, and it is probably due to this fact that he is not murdered, though he richly deserves it, for his tyranny.

*Jnanadipa* is a sage indeed. He is very hospitable to strangers, and his learned lore is manifested in the scenes where his disciple appears. Unmindful of worldly honours, he rebukes prince and peasant alike for their folly.

*Vidya Sagara*, the ocean of learning, is the Guru to the Prince and his associates. All revere him for his wisdom, and quote his verses and sing his songs—most of all, Ambujakshi, a clever songstress. The scene in which he figures before Surasena and thunders forth his highly eulogistic verses commemorating Surasena's late victory followed by his learned interpretation thereof, is comical enough, when viewed in the light of his question 'Am I to be *beaten*?' But this apparent inconsistency illustrates a not uncommon occurrence among human beings, *viz.*, that when fear overtakes a man, his learning quits him and his faculty of argumentation is at a stand.

*Chandramukha* and *Sukumara* are the companions of the Prince to whom they are firmly attached. The former relies upon experience and human effort for success in life while the

latter resigns everything to the will of Providence. Hence these two characters represent two great schools of Philosophy.

*Ambujakshi* and *Kanakamalai* are the two associates of the Princess. The former, a clever songstress, is shy by nature whereas Kanakamalai is petulant and meddlesome. Further, the latter, though slightly superstitious, often hits the nails on the head when she has to judge of character.

The *Lords* appear in three of the scenes; and with Nayavachana, Surasena's friend, they lay their heads together to plot his death. The *first* Lord is calm and collected in his procedure and preaches against precipitancy in matters of great moment. The *second* Lord, rather hasty, is wise on second thoughts, while the *third* is a ruffian ready for immediate action and thirsting for revenge.

*Nayavachana* is a man of policy. He always veneers his thoughts, for which Surasena falls out with him, and he cannot be brow-beaten when he sees that tyranny prevails. When the Lords are for the assassination of Surasena, he exercises his judgment and calmly refers the question to the decision of Sundarananda, of whose superior intelligence he has a high opinion.

*Three Dreams* are introduced in this play—two of them by Surasena and Komalavalli prognosticating evil, and the third by the Nurse giving a ray of hope of the re-appearance of Rupavati.

The *Epilogue* is spoken by Sundarananda. In it he discourses on human nature and human love, and rightly points out that domestic life, if rightly led, is far better and productive of better results than the life of an ascetic who loves seclusion and hates mankind.

To conclude. The plot of ***Rupavati*** is so simple and dexterously constructed, and the characterisation so notable and happy, that they combine to enhance the pleasure of the intellectual feasts given in it. I trust that the learned playwright will continue to amuse and instruct the reading-public, year after year, with some fresh creations of his own, and will reclaim the dramatic art, which is highly educative in its value but much neglected by the Tamil Muse.

COIMBATORE,
*12th March 1902.* } M. S. PURNALINGAM PILLAI.

# முகவுரை

சேரநாட்டரசனாகிய சூரசேனவர்மன், சற்குணவழுதி யென்ற பாண்டியராசனைத் திருப்பரங் குன்றத்திற் கருகே நடந்த போரின் கண் வென்று மதுரையம்பதியைத் தனக்கு இராசதானியாக்கிக்கொண்டு பாண்டியனையும் அவன் மனைவியினையும் காட்டில் துரத்திவிட்டு வழுதிமகன் சுந்தராநந்தனை மாத்திரஞ் சிறைச்சாலையிலிட்டு அரசுபுரிந்து வந்தான். இங்ஙன மிருக்கையில் ஒருநாண் மாலை, சுந்தராநந்தன் தான் வெளியிற் போகும்போது தன்னைக் காக்குமாறு நியமிக்கப் பட்ட தன் றோழராகிய சுகுமார சந்திரமுகர்களோடு அரண் மனைக்கடுத்ததோர் பூங்காவனஞ்சென்று தனது பெற்றோர்க் குற்ற கதியினையெண்ணி ஏங்கினன். அவ்வமயத்துச் சேரன் மகளாகிய ரூபாவதி தன்றோழிமாராகிய அம்புஜாட்சி கநக மாலைகளோடு உலாவிச் செல்பவள் சுந்தராநந்தனைக் கண்ணுற் றுக் காதல்கொண்டாள். இங்ஙனஞ் சுந்தராநந்தன்மீது காதல் கொண்ட ரூபாவதி வீட்டிற்சேகித் தன் உள்ளங்கொள்ளை கொண்ட தலைவனை நினைந்து நினைந்து உருகி ஆற்றாது நாடோ றும் பூஞ்சோலைக்குச் சென்று தன் காதலனைத் தரிசித்துச் சிறிதுசிறிது ஆறு நிற்பாள். இவ்வாறே சுந்தராநந்தனும் ரூபா வதியின்மீது மெய்ந்நேசமுற்று அயர்வானாயினன்.

இதற்கிடையிற் சற்குணவழுதியும் அவன் மனைவியும் காட்டில் ஒருவேடனுதவியான் ஞாநதீபமுநிவரது ஆச்சிரம மடைந்து முனிவராக்கினைப்படி அவ்விடம் விட்டுப் புறப்பட்

டுச்சோணுடு சென்று, தஞ்சைமாநகரில் விரேந்திர சோழன் அரண்மனையில் வதிவாராயினர். சூரசேநவர்மனே வழுதியைத் துரத்தியது முதற் குடிகளிடம் கொடியனெனப் பேர் பெற்று வெறுக்கப்பட்டான். அதுவுமன்றி அவனுக்கு நண்பனுயிருந்த நயவசநனுஞ் சிற்சில கனவான்களோடு வர்மனைத் தொலைக்கும்வழி நாடுவாணுயினன்.

மற்றைப்படி ரூபாவதி சுந்தராநந்தன் ஆகிய இவ்விருவருடைய காதலும் உரையாட்டமில்லையாயினும் வளர்பிறைபோன் முதிராநின்றது. ஆயினுஞ் சுந்தராநந்தன் மட்டும் இடையிடையில் தனது பெற்றோரையெண்ணி வருந்துவான். இப்படியிருந்து வருநாளில், தான் காட்டில் துரத்திய சற்குணவழுதியும் அவன் மனைவியும் சோணுட்டிலிருப்பதைத் தன் ஒற்றரால் உணர்ந்த சூரசேநவர்மன் 'பாண்டியனுஞ் சோழனுந் தன்மீது படையெடுத்து வருவார்களாயின் தான் சிறையிலிட்டிருக்கும் வழுதிமகன் சுந்தராநந்தனைக் கொன்றுவிடுவது' என்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டான். இவ்வண்ணம் இவன் தீர்மானித்ததை உணர்ந்த இவன் மகள் ரூபாவதி தன் காதலனுகிய சுந்தராநந்தனுக்குத் தன் தந்தையின் அந்தரங்க எண்ணத்தையும் சுந்தராநந்தன் தன்னை வந்து மறுநாளிரவிற் காணவேண்டு மென்னுந் தன் விருப்பத்தையும் ஒரு கடிதத்தில் வரைந்து பின்னர்த் தான் தனது நாயகனிருக்குஞ் சிறைச்சாலையின் இரகசிய வழிப் பூட்டின் திறவுகோலையெடுத்து அந்நிருப்பத்தின்கண் வைத்துச் சுருட்டித் தன்றலைவனது சிறைச்சாலைக்குள் எறிந்தாள். அதன் பிறகு சுந்தராநந்தன் கடிதங் கண்டு இவ்வாறு செய்தவள் ரூபாவதியேயென்று தெளிந்து பிற்றைநாளிரவில் வெளியிற் போந்து தன்றலைவியின் ஆணைப்பிரகாரம் அவளைக் காண்பான் விழைந்து நிற்

புழி, ரூபாவதி ஆண்வேடம் பூண்டுவந்து தனது அருமைத் தலைவனைச் சந்தித்து அவனொடு வாதாடிக் கடைசியில் அவனை உடன்போக்கிற்கு இணக்கியபின், இருவருஞ் சேர்ந்து மதுரைமா நகரைவிட்டுப் புறப்பட்டு வைகறைப் போழ்தின் ஞானதீபரது ஆச்சிரமமுற்றுச் சற்றிளைப்பாறிய பின் மீட்டும் புறப்பட்டுச் சோணாடடைந்து சுந்தர சுரூபர் என்னும் வேற்று நாமங்களோடு அவ்விடம் இருப்பாராயினர். இது நிற்க.

பொழுது புலர்ந்தபின் சிறை காவலாளர் சுந்தராநந்தனைக் காணாது கவலைகூர்ந்து, பிறகு 'அவன் சிறைமதிலேறிக் குதித் தோடினன் ஆதலின் கொல்லப்பட்டான்' என்றொரு பொய்க் கதை கற்பித்து வருமனை நம்புமாறு செய்தனர். அதன்பின் வருமன் அந்தப்புரஞ் சென்று ஆண்டு அரற்றுநிற்கும் கோமள வல்லி செவிலிகளின் மூலமாய்த் தன்மகள் ரூபாவதியைக் காணவில்லை என்பதை உணர்ந்து எங்குந் தேடியும் அகப்படாமையால் 'இந்நாட்டாரே தன்மகளை இரவிலெடுத்துச் சென்று கொலைபுரிந்தனர்' என்று துணிந்து ஊரிலுள்ளாரையெல்லாம் ஒறுக்கப் புகுந்தான். தனது நண்பனாகிய நயவசநன் மீதும் ஐயமுற்று அவனைச் சிறைப்படுத்தினன்.

இவ்வாறு வருமன் செய்யும் அநீதங்களைப் பொறுக்க மாட்டாது சனங்கள் வருந்தா நிற்பச் சின்னாட் கழியலும், சோணாட்டிலிருந்து தந்திரதீரனென்னும் ஒரு தூதுவன் போந்து பாண்டி நாட்டை வழுதியினிடம் ஒப்பிக்குமாறு செப்ப, வருமன் அதற்கிணங்காணுப் போர்வேண்டித் தானும் தனது கருவூர்ப் பதியின்கணுள்ள போர்வீரரை அழைத்துக்கொண்டு மதுரை வருமாறு ஆளனுப்பினன். கருவூர் சென்ற சேவகன் வருமுன் வழுதியுஞ் சோழனும் படைகொடு வந்து வையையாற்றின் வடகரைக்கண் தங்கினர்.

சுந்தரனும் ஒரு வியூகத்தலைவனாக வந்திருந்தான். அதன்பிறகு கருவூர்ச்சேவகன் வந்து 'அவ்விடத்திற் சேரன்மந்திரி இராசோபாயருக்கும் வழுதிமாமனார் வீரமார்த்தாண்டத் தொண்டைராசருக்கும் யுத்தம் நடந்துகொண்டிருத்தலிற் படைவீரர் வருதற்கில்லாது போயிற்று' என்றான். இது செவிசாத்திய வருமன் தன்மந்திரியாகிய சுசீலனை விளித்து ஆலோசித்து முடிவிற் சமாதானஞ் செய்யுமாறு தானுஞ் சுசீலனும் மெய்காப்பாளரொடு சோழன் பாசறைக்குச் சென்றார்கள்.

இங்ஙனம் அவர்கள் சென்று சோழன், வழுதி, முதலாயினோரோடெல்லாம் உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் குறித்துப் பேசி முடித்தபின், வழுதியும் வருமனும் தங்களுக்கு நேரிட்ட மக்களிழவென்னும் தௌர்ப்பாக்கியத்தினைப் பற்றி இரங்கிக் கொண்டிருக்கும்பொழுது, இதுகாறும் மாறுவேடம் பூண்டு சுந்தரன் சுரூபன் என்று மாறுபெயருங் கொண்டிருந்த சுந்தரானந்தனும் ரூபாவதியும் தத்தமது மாறுவேடம் நீத்து உண்மையுருவத்தொடு வெளிப்பட்டு முறையே வழுதியையும் வருமனையும் வணங்கி நின்றார்கள்! உடனே ஆண்டுக் குழீஇ யிருந்தோர்களெல்லாம் இக்காட்சியினைக் கண்டு பேரானந்தமுற்று எம் ஆலவாய்ப்பெருமானது அருளை வியந்து துதித்தனர்! அப்பொழுதே யாவரும் நண்பராயினர். வருமனும் தனது காணாமற்போன மகளை மீட்டும் பெற்றமையாற் களிபேருவகைபூத்து அவ்விருவரது மணவினை முடித்தற்குரிய முயற்சிகள் செய்யத் தொடங்கினான். இதனுடன் நாடகம் முடிகின்றது.

முற்பதிப்பிற் போலாது இப்பதிப்பிற் பாத்திரங்களின் இயல்புகட்கேற்ற சொல்வழக்கும் நடைவேறுபாடும் சிற்சில திருத்தங்களும் புதிய செய்யுட்களும் அமைக்கப்பட்டுள

வாமாறு யாவருங் கண்டுபோற்றுதற்குரியது. சிற்சில செய்யுட்களிற் பாடபேதங்களுஞ் செய்திருக்கின்றனம். பலவகையினும் இந்நாடகம் எமது நாடகவியலோடு ஒத்தியங்குமாறு காண்க.

இந்த நாடகமானது மன்மத வருடம் ஆடி மாதம் முப்பத்திரண்டாந்தேதி வியாழக்கிழமையன்றிரவு, சென்னைவித்தியாபிமான சங்கத்தார் மூலமாய் அரங்கேற்றப்பட்டது. இதன்கட் குற்றங் குறைகள் இருக்குமாயிற் பேரறிவுடையோர் பிரியத்தோடும் அவையிற்றினைத் திருத்தி எம்மீது கிருபை புரிவாராக.

வி. கோ. சூ.

# பாயிரம்

---

## விநாயகர் வணக்கம்

### கட்டளைக்கலித்துறை

பொற்புறு ரூபா வதிகாதை தன்னைப் புகழ்மிகுந்த
நற்பய னுடக மாப்பைந் தமிழி னவிலுதற்குச்
சிற்பர வள்ளலெஞ் சிந்தா மணியன சித்திதருங்
கற்பக யானை சரணா ரவிந்தங் கருதுவமே. (௧)

## சுப்பிரமணியர் வணக்கம்

### வஞ்சிவிருத்தம்

உலவுசெ லுயர்திணைக் குரியனைக்
கலவடி யவரருட் கடலினைக்
குலவுறு புலவயிற் குமரனைக்
கலையுணர் புலவனைக் கருதுவாம். (௨)

## நாமகள் வணக்கம்

### கலிவிருத்தம்

கன்னிரு பாவதி காதை சொற்றிடச்
சொன்னயம் பொருணயந் தோன்று நூல்பல
பன்னுறு புலவர்நாப் பயிலும் பாமயில்
பொன்னடித் தாமரை போற்றி வாழ்குவாம். (௩)

## நடராசர் வணக்கம்

### கலிநிலைத்துறை

உலக மென்னுமோர் நாடக சாலையி னுயிரா
மலகி லாநடர் தங்களை யநுதின மாட்டி
யிலகு சூத்திர தாரனா மிறைவனை யெமது
தலைவ னாநட ராசனைத் தாண்மலர் பணிவாம். (௪)

# நாடக பாத்திரங்கள்

1. சற்குணன் : பாண்டிநாட்டுப் பூர்வராசன்.
2. சூரசேநன் : தற்காலத்துப் பாண்டிநாடாளுஞ் சேரன்.
3. வீரேந்திரன் : சோணாட்டரசன்.
4. சுசீலன் : சூரசேநன் மந்திரி.
5. நயவசநன் : ஒருதனவான்; சூரசேநனது நண்பன்.
6. சுந்தராநந்தன் : சற்குணன் மகன்; ரூபாவதி காதலன்.
7. சுகுமாரன் : சுந்தராநந்தனது நேசன்.
8. சந்திரமுகன் : நயவசநன்மகன்; சுந்தராநந்தனது நேசன்.
9. வித்தியாசாகரர் : பாண்டிநாட்டில் ஒரு தமிழ்ப்புலவர்.
10. ஞாநதீபர் : பாண்டிநாடடுத்த வனத்தில் ஒரு முனிவர்.
11. ஆன்மநாதர் : ஞானதீபரது சீடர்.
12. தந்திரதீரன் : சோழன் தூதுவன்.
13. மாகன் : மதுரையில் வையாளி வீதி காப்போன்.

கனவான்கள், வேடன், சேவகர், சேவகர் தலைவன், காவலாளர், மெய்காப்பாளர் முதலாயினோர்.

14. சுந்தரி : சற்குணவழுதியின் மனைவி.
15. கோமளவல்லி : சூரசேநவர்மன் மனைவி.
16. ரூபாவதி : சூரசேநன் மகள்; நாடகத் தலைவி.
17. அம்புஜாட்சி : சுசீலன் மகள்; ரூபாவதியின் தோழி.
18. கநகமாலை : ரூபாவதியின் தோழி.

செவிலி, சேடியர் முதலாயினோர்.

## நாடக நிகழ்விடம்

பெரும்பான்மை பாண்டி நாட்டுத் தலை நகராகிய மதுரையிலும் அதற்கடுத்த காட்டிலும், சிறு பான்மை சோணாட்டுத் தலைநகராகிய தஞ்சையிலுமாம்.

# ரூபாவதி

## அல்லது

# காணாமற் போன மகள்

## அங்கம்—க

### முதற் களம்

இடம்:—ஒரு பூஞ்சோலை

காலம்:—மாலை

பாத்திரம்:—சுந்தராநந்தன்

**சுந்தராநந்தன்:**—(தனக்குள்) பூக்கள் மலர்ந்து வாசனை வீசா நின்ற இச்சோலையின்கண் யான் வந்து உலாவி மந்தமாயடிக்கின்ற இளந் தென்றற்காற்றின் சுகத்தை யநுபவிப்பதற்கு என் மனம் ஒருப்படுகின்றதில்லை.—என் செய்வேன்! ஒரு வாரத்திற்கு முன்வரையிலுங் களிப்புற்றுச் செருக்கித்திரிந்த எனது ஏழை நெஞ்சமே! யான் சந்தோஷப்படுவதை ஏன் தடுக்கின்றாய்? என்மீது சிறிது கருணை கூர்ந்து என் விசனமெல்லாம் நீங்கும்படி செய்வது நினக் கழகேயன்றோ?

[சுகுமாரனுஞ் சந்திரமுகனும் வருகின்றனர்.]

அந்தோ! பாவி மனமே! நீ துயரப்படுவதுமன்றி என்னை யும் ஏன் வருத்துகின்றாய்?

[அவர்கள் பின்னே நிற்கின்றனர்.]

ஆண்டு மயில்க ளாடுவதையும், கிளிகள் பேசிக் குலாவ வதையும், நீ பார்த்தும் உனக்கு இன்பமில்லையோ?— உன்னையே உயிர்த்துணையாய்ப் பெற்ற என்னை நீ இவ் வாறு வருத்துகிற்பது தர்மமாகுமோ? [பாடுகின்றான்]

என்னுடன் பிறந்து மென்னை யிடர்ப்படுப் பதுநன் றேயோ
வென்னசெய் வான்கொல் பார்ப்ப லென்றுநீ வருத்து வாயோ
வின்னல்செய் மனமே யின்னு மிரக்கம்வந் திலதோ வென்ற
னன்னய நண்ப ரேனு நண்ணியிங் காற்றி டாரோ? (ரு)

[மௌனம்]

சுகுமாரன்:—ஏ, சுந்தராநந்தா! இஃதென்னை? மிக வியப்பா யிருக்கின்றதே நின் செயல்!

சுந்தராநந்தன்:—என தருமையான சுகுமாரனே! யான் என் செய்வேன்? என்மீது தவறொன்றுமில்லை. என் மனத் துன்பம் நீங்கிற்றில்லை.

சந்திரமுகன்:—நீ யேழுநாளாக இவ்வாறுதான் சொல்லு கின்றாய்!

சுகுமாரன்:—ஆவது ஆயிற்று. நாம் இனி யென் செய்வது? வருத்தமின்றிக் காலங் கழிப்பதன்றோ நலம்?

சுந்தராநந்தன்:—எனது பிரிய நேசர்காள்! என் மனவருத் தம் நாளுக்குநாள் அதிகப்படுகின்றதே யொழியக் குறை கின்றதில்லை. என்னுடைய ஊக்கமெல்லாம் எங்கேயோ ஓடிவிட்டது. என்னாற் பொறுக்கக்கூடவில்லை.

சந்திரமுகன்:-நீ கல்விகற்றதன் பயன்றானென்னை? எத்தகைய துன்பங்கள் நேரிட்டாலும், அவற்றையெல்லாம் பொறு

மையுடன் சகித்துக் கொண்டிருப்பதன்றோ மேன்மை யானது. எல்லாந் தெரிந்த உனக்கு யான் சொல்லவும் வேண்டுமோ?

சுகுமாரன்:—எல்லாம் வல்ல கடவுள் இன்ப வடிவானவர்; அவர் சகல காரியங்களையும் மனிதரது நன்மைக்காகவே செய்து வருகின்றனர். ஆகையால் அவரது அருளினால் நிகழ்ந்த இச்செயல்களெல்லாம் நமக்கு நன்மையினையே பயக்கும் என்பதை நீ அறியாயோ?

சுந்தரானந்தன்:—அறிவேன், அறிவேன்.

சந்திரமுகன்:—அறிந்திருந்தும் நீ வருந்துவது நேரிதோ? நீயுன் பெற்றோரை விட்டுப் பிரிந்திருப்பதனாற் பாதகம் என்ன? நீயும் அவர்களும் வெவ்வேறிடங்களி லிருந்த போதிலும், ஒரே யூரிலே தாமே யிருக்கின்றீர்கள். அரசனும் நாம் நினைக்கிறபடி அவ்வளவு கொடியவனல்ல னென்றுங் கேள்வி. இந்நாட்களில் ஒரு நாட்டரசன் இன்னொருநாட் டரசனை வென்று அவனைச் சிறையிடு வது வழக்கா றன்றோ?

சுந்தரானந்தன்:—அந்தோ! அந்தோ! நீவிரெல்லாம் இன்று நடந்த சமாசாரஞ் சிறிதுந் தெரியாது இவ்வாறு சொல் லுகின்றீர்களே! ஐயகோ! என்செய்வேன்! என்செய் வேன்! தெய்வமே!

சுகுமாரன்:—வெகு ஆச்சரியமா யிருக்கின்றதே! எங்களுக் குத் தெரியாத செய்தி அப்படி நிகழ்ந்ததென்னை?

சுந்தரானந்தன்:—(பாடுகின்றான்)

புகழ்ந்துநீர் பேசும் புரவலன் றன்னு
னிகழ்ந்த கொடுஞ்செய லினைக்கவொண் ணாதே.
நீரறி யீரோ? நேசர்காள்!
எப்படி யுமக்கியான் செப்புவல்? அந்தோ!

தந்தையையுந் தாயினையுந் தள்ளவொண்ணுப் பருவத்தே
சிந்தையினிற் சிறிதேனு மிரக்கமிலாத் தீக்குணத்தோன்
கந்தமலர்த் தாள்களிலே காட்டிலுள முள்ளேறிக்
குத்தியொரு பாலேங்கத் துரத்தினன் கொடும்பாவி! (எ)

அன்னையெனுஞ் சுந்தரியா ளரியவனத் துற்றனளோ
பன்னரிய பணிமொழியாள் படுத்துயர்வ தெந்தமரத்
தின்னிழலோ வெந்தைபிரிந் தேகியது மெவ்விடமோ
வென்னுடைய வல்வினையோ வித்துயர்ப்பட் டாழ்கின்றேன்! (அ)

மத்தகோ கிலந்தினமும் வந்துபயி லும்மினிய
புத்தமுதத் தேமொழியாள் புலிக்கிரையாய் விட்டனளோ
வித்தையெலாங் குடிகொண்ட விப்பிரர்தாம் பிரியமுறு
மத்தரெஞ்சற் குணவழுதி யரிவாய்ப்பட் டழிந்தனரோ! (கூ)

தந்தையே நின்னுடைய தாமரைத்தா ளேவாவோ
சுந்தரியே யென்றாயே சுகநீங்கிச் சுரத்திடைத்
திந்தவகை வருந்துவதற் கென்ன தீங் கிழைத்தனையோ
வெந்தவித மென்னுயிரை யினித்தாங்கி யிருப்பேனே! (கo)

[சுந்தராநந்தன் மூர்ச்சைபோய் விழுகின்றான்.]

இருவரும் :—இஃதென்னை! இஃதென்னை! இஃதென்னை புதுமை!! (இருவரும் மூர்ச்சை தெளிவிக்கின்றனர்.)

[பூஞ்சோலையின் மற்றொரு சார், ரூபாவதி, கநகமாலை, அம்புஜாட்சி யிவர்கள் வருகின்றனர்.]

ரூபாவதி :—அம்புஜாட்சீ! இங்கே சமீபத்திலே யென்னவோ அழுகைக்குரல் கேட்டதே! அஃதென்னென்று போய்ப் பார்த்துவிட்டு வருவமே?

அம்புஜாட்சி :—ஏன், கநகமாலை! ரூபாவதிதான் பார்க்கலாம் வாவென்று கூப்பிடுகிறாளே! எல்லாருமாய்ப் போய்த் தாம் பார்ப்பமே?

கநகமாலை:—ஆனாற் சரி. நீங்கள் இரண்டு பேருங் கூப்பிடுகிற போது நான் மாட்டேன் என்பேனோ, நான் மாட்டே னென்றாலுந்தான் விடுவீர்களோ ?

ரூபாவதியும் அம்புஜாட்சியும்:—சரி, போகலாம் வா.

[இவர்கள் போகின்றனர்.]

சுகுமாரன்:—அப்பா! சுந்தராநந்தா! இப்படி என்மேற் சாய்ந்துகொள். ஏ சந்திரமுகா! இப்புறம் வா, சற்றுக் குளிர்ச்சியாய்க் காற்று மேலே யடிக்கட்டும்.

சந்திரமுகன்:—ஏன், சுந்தராநந்தா! உனக்கு உடம்பு என்ன செய்கிறது ?

[ரூபாவதி முதலானவர் வருகின்றனர்.]

சுந்தராநந்தன்:—அம்மா! அப்பா! அம்மா!! அப்பா!! கொஞ்சம் பொறுங்கள்.

ரூபாவதி:—இரு, இரு. இங்கேதான், இங்கேதான்.

அம்புஜாட்சி:—அதோ, அந்த மாதவி மரத்தின்கீழ் மூன்று பேர் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒருவன் மடியிற் பேரழகு வாய்ந்த மற்றொருவன் சாய்ந்துகொண்டிருக்கிறான்! பார்.

கநகமாலை:—ஆமாம். நாம் இரைந்து பேசக் கூடாது.

ரூபாவதி:—மெள்ளச் சத்தப்படாமல் நாமிந்த மல்லிகைப் பந்தரிலேயே யொளித்துக் கொண்டிருந்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்—நில், நில். என்னவோ, பேசுகிறார்கள். கேட்போம்.

[இவர்கள் ஒளித்துப் பார்க்கின்றனர்.]

சந்திரமுகன்:—என்னை இது ? ஒரு நாளு மில்லாமல் இன்றைக்கு மாத்திரம் இப்படி நீ மூர்ச்சை யடைந்து எங்களை யெல்லாம் வருத்தப்படும்படி வைத்துவிட்டாய்! ஏனப்பா, சுந்தராநந்தா !

சுந்தரானந்தன்:— (சுகுமாரன் மடியை விட்டு விலகிக்கொண்டு) இதைக் குறித்து ஞாபகமூட்டாதே; என்னை யொன்றும் இப்பொழுது கேளாதே. நாம் இனிமேல், சுகுமாரா! இங்கே தாமதஞ் செய்யக்கூடாது.

சுகுமாரன்:—ஆமாம், அந்தப் பயல் சிறைகாப்பாளன் கொஞ்சம் நேரங்கழித்துப் போனால் அதிகமாய்த் தலைகீழாய் விழுகிறான். 'அரசனிடத்தில் தெரியப்படுத்துவேன்' என்கிறான்.

சந்திரமுகன்:—ஆமாம். சீக்கிரமாய்ப் போவோம். வாருங்கள்.

[சுந்தரானந்தன், சுகுமாரன், சந்திரமுகன் இவர்கள் போகின்றனர்.]

ரூபாவதி:—ஏன், கநகமாலே! இந்த மூன்று பேரும் யார்? நீ யிந்த வூரிலேயே இருக்கிறவள்தானே! உன்னாலே, இவர்கள் இன்னர் என்று சொல்லக் கூடுமே!

அம்புஜாட்சி:—என்னைக் கேளேன். நான் சொல்லுகிறேன். அவள் இந்த வூருக்கு வந்து இன்னும் இரண்டு வருஷங் கூட ஆகவில்லை. அவளுக் கிவர்களைப்பற்றி என்ன தெரியப் போகின்றன!

கநகமாலே:—ஏண்டியம்மா! எனக்கும் அவர்களில் ஒருத்தனைத் தெரியும்.

ரூபாவதி:—ஏன் இவ்வளவு பேச்சு? நீங்கள் இரண்டு பேரும் இந்த வூரிலேயே இருக்கிறவர்கள் என்று நினைத்துச் சொன்னேன். இப்போது யார் சொன்னால்தான் என்ன? அம்புஜாட்சீ! நீதான் சொல்.

அம்புஜாட்சி:—இல்லை, இல்லை! அவளுக்குத் தெரிந்த மட்டும் அவளே சொல்லட்டும்; அப்புறம் வேண்டுமென்றால்

அவளுக்குத் தெரியாதது இருந்தால் நான் சொல்லு கிறேன்.

கநகமாலை:—அதொன்றும் இல்லை. உனக்குத்தான் நன்றாய்த் தெரியுமே! சொல்லேன்.

ரூபாவதி:—சரி, இருக்கட்டும். இவர்கள் யார்? சீக்கிரம் சொல். கேட்போம்.

அம்புஜாட்சி:—அழகாய் ஒரு பிள்ளை இன்னொருத்தன் மடி யிலே உட்கார்ந்து சாய்ந்து கொண்டிருந்தானே, அவன் தான் முந்தி இருந்த ராஜா சற்குணவழுதியின் பிள்ளை.

கநகமாலை:—அவனைத்தான் எனக்கும் தெரியும்.

ரூபாவதி:—ஒருத்தி சொல்லுகிறபோது நடுவிலே பேசாதே. உனக்குத் தெரிந்தால், அப்புறம் சொல்.

அம்புஜாட்சி:—அவன் பெயர் சுந்தரானந்தன், வில்வித்தையில் வெகு கெட்டிக்காரனும், படிப்பில் மிகத் தேர்ந்தவனும். முன்னிருந்த ராஜாவுக்கு இவன் ஒரே பிள்ளை, ஆகையி னாலே மிக அருமையாய்க் கண்ணுக்குக் கண்ணாய் இவனை வளர்த்து வந்தார். இவனை மடியிலே உட்கார்த்திக் கொண்டிருந்தானே அவன் தான் என் தகப்பனாரோடு கூடப் பிறந்த அத்தை பிள்ளை. அவன் பெயரை நான் சொல்லப்படாது!

கநகமாலை:—அவனுக்கு வாழ்க்கைப்படப்போகிறாயோ? அது தான் பேர் சொல்ல மாட்டேன் என்கிறாய் போலும்!

ரூபாவதி:—யாருக்கு வாழ்க்கைப்படப் போகிறாள்?

கநகமாலை:—அவளுடைய அத்தை பிள்ளைக்காம். இன்னும் கல்யாணம் கூட ஆகவில்லை. அதற்குள்ளே பேர் சொல் லப்படாது என்கிறாள்!

ரூபாவதி:—ஏண்டி அம்புஜாட்சீ! அவையெல்லாம் இருக்கட்டும். நீ அழகாய் ஒருவன் அரசன் மகன் என்று சொன்னாயே அவன் அழுவானேன்?

அம்புஜாட்சி:—எல்லாம் உனக்கே தெரிந்திருக்குமே!

ரூபாவதி:—இல்லை, நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். எனக்கொன்றும் தெரியாது.

அம்புஜாட்சி:—நிஜந்தானா? உனக்கு நிச்சயமாய்த் தெரியாதா?

ரூபாவதி:—நிஜந்தான். நிச்சயமாய்த்தான் தெரியாதென்கிறேனே.

ஜாட்சி:—ஆனால் சரிதான். ஒருவேளை உனக்குத் தெரிந்திருக்குமோ வென்று நினைத்தேன். உங்கள் தகப்பனார் இந்தப்பாண்டிய ராஜ்யத்தை ஜெயித்து இந்தத் தேசத்து ராஜாவையும், ராஜா பெண்டாட்டியையும் ஒரு சிறையிலேயும், இந்த ராஜாபிள்ளை, இப்போது பார்த்தோமே, அவனை இன்னொரு சிறையிலேயும் அடைத்து வைத்திருந்தார். அந்த ராஜாவும் ராணியும் இந்த வூரிலேயே இருக்கிறதனாலே கலகங்கள் உண்டாகின்றன வென்று நினைத்து அவர்கள் இரண்டு பெயரையும் இன்றைக் காலைதான் இந்த வூருக்கடுத்த ஒரு காட்டிலே கொண்டு போய்த் துரத்திவிட்டு வரும்படி உங்கள் தந்தையார் உத்தரவு கொடுத்தாராம். அந்தப்படியே சேவகர்களும் அவர்களை அழைத்துக்கொண்டு துரத்திவிட்டுவரக் காட்டுக்குப்போ யிருக்கிறார்களாம். இந்தச் சமாசாரத்தைக் கேட்டுவிட்டுத்தான் சுந்தராநந்தன் அழுதது. தாயார் தகப்பனார் என்றால் அவனுக்குப் பிராணன்! என்ன செய்வன்?

ரூபாவதி:—ஏண்டி! மூர்ச்சைபோய் விழுந்தானுமே! அவர்கள் பேசிக்கொண்டார்களே! அஃதென்னே! அழுதால் மூர்ச்சை போகுமோ?

கநகமாலே:—தாயார் தகப்பனுரைக் காட்டுத் துஷ்டமிருகங்களுக்கு இரையாகும்படி வயதான காலத்திலே துரத்திவிட்ட சங்கதியைக் காதிலே கேட்டும் மூர்ச்சைபோகாதவர் யார்? அப்பேர்ப்பட்டவர் மிகவும் கன்னெஞ்சராய்த் தாம் இருக்கவேண்டும்.

அம்புஜாட்சி:—அந்த சுகுமாரனும், சந்திரமுகனும், பக்கத்திலே இல்லாதிருந்தால், சுந்தராநந்தன், அப்பாவி! வருத்தமென்பதை இன்னதென்று அறியாதவன்! வெகு அவஸ்தைப்பட்டுப் போயிருப்பான். சுவாமி, அவர்களேச் சமீபத்திலிருக்கும்படி செய்தாரே! அதுவன்றே விசேஷம்!

கநகமாலே:—அதெல்லாம் இருக்கட்டும். அப்போது மாத்திரம் அகமுடையான் பெயரைச் சொல்லப்படாதென்றாயே! இப்போது மாத்திரம் சொல்லலாமோ?

ரூபாவதி:—இன்னும் கல்யாணம் ஆகவில்லையே! சொன்னலென்ன? குற்றமில்லை.

கநகமாலே:—சந்திரமுகனென்று சொன்னுயே. அவன்யார்?

அம்புஜாட்சி:—அவன்தான் நயவசநர் என்பவருடைய புத்திரன். சுந்தராநந்தனேடுகூடப் படித்தவன். இவர்களும், எங்கள் அத்தைபிள்ளையும் ஆக மூன்றுபெயரும் வித்தியாசாகரப் புலவரிடம் கல்வி கற்றுக் கொண்டார்களாம்.

ரூபாவதி:—அஃதிருக்கட்டும். சுந்தராநந்தனைப் பற்றி இவ்வூரார் என்னசொல்லிக் கொள்ளுகிருர்கள்?

கநகமாலே:—சுந்தராநந்தனு? மகாபுத்திசாலி! ஊரார் சொல்லுகிறதென்ன? நன்றாய்த் தெரிந்த விஷயந்தானே!

ரூபாவதி:—அம்புஜாட்சி! கநகமாலை மாத்திரம் என்னவோ இப்படிச் சொல்லுகிறாள். நானும் இரண்டு மூன்று பேரிடத்திலே கேட்டேன்; அவன் என்னவோ வெகுதுஷ்டனாம். தான் தான் அரசன்மகன் என்றெண்ணிக்கொண்டு ஊர்மக்களை எல்லாம் பிடித்துக்கொண்டு அடித்து வருத்தப்படுத்துவானாம். இப்படி எல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்களே!

அம்புஜாட்சி:—சுந்தராநந்தனையுஞ் சொல்லி மற்றைப் பெயரையும் சொல்லுகிறதா? வெகு நன்றாயிருக்கிறது! அவனா துஷ்டனாம்? அப்படிச்சொல்லுகிறவர்கள் நாக்குப்புழுத்துத்தான் போகும். பரம சீவகாருண்ணியனென்றால் அவனுக்குத்தான் தகும்.

கநகமாலை:—அப்படி இருக்க, அழகு அழகு, யார் சொன்னதோ தெரியவில்லை!

அம்புஜாட்சி:—இந்தப்படி சொன்னால்தான் இப்போது வந்திருக்கிற ராஜா சூரசேநவர்மர் தங்கள் பேரிலே பிரியமாயிருப்பாரென்று நினைத்தார்களோ! அவர்களும் நன்றாய்ச்சொன்னார்கள், ராஜாவும் நன்றாய்க்கேட்டுக் கொண்டார்! வீட்டிலே இருக்கிறபோதே விதிவந்து சூழ்ந்தது போல, தெய்வமே என்று இருக்கிறவன் தலையிலே நன்றாய்ப் பழியைப் போட்டார்கள்! சுவாமி இருக்கிறார் எல்லாவற்றிற்கும்! நாம் சொல்லியா ஆகப்போகிறது?

கநகமாலை:—உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூடலாமோ? சொல்லுகிறவர்கள் சொல்லிவிட்டுப் போகட்டும்!

அம்புஜாட்சி:—யார் என்ன சொன்னபோதிலும் அவனைப் பற்றி நம்முடைய எண்ணம் என்னவோ மாறப் போகிற

ரூபாவதி:—என்னவோ? அம்மா! ஊரார் சொன்னதைச் சொன்னேன். அவன் நல்லவனாக இருந்தால் எல்லாம் நல்லது தானே!

கநகமாலை:—எனக்குத் தெரிந்தமட்டில் அழகு, புத்தி, சக்தி, குணம் இவற்றிலெல்லாம் அவனுக்குச் சமானமானவர்கள் இல்லை என்றே சொல்லலாம்.

ரூபாவதி:—சரி, அஃது அப்படி இருக்கட்டும், அம்புஜாட்சி! ஏதாவது ஒரு பாட்டுப் பாடு கேட்போம். நன்றாய் மந்த மாருதம் வீசுகிறது. எங்கே! சுகமாய்ப் பாடு, கேட்போம்.

அம்புஜாட்சி:—(பாடுகின்றாள்)

(௧) இராகம்-இந்துஸ்தான்காபி. தாளம்-ஆதி.

பல்லவி

நாயகனே வருவாய்—இவ்வேளையில்

சரணங்கள்

சிந்தை தினந்தொறும் நொந்து வருந்தினேன்
சுந்தர மதிவதன இவ்வேளையில் (நாயக)

மன்மத பாணங்கள் மார்பினிற் பாய்ந்தன
நன்மனஞ் செய்தருள்வாய் இவ்வேளையில் (நாயக)

இத்தனை கூறியு மிளகில தோநெஞ்ச
மொத்தகல் லாமனந்தான் இவ்வேளையில் (நாயக)

சன்மார்க்கர் வித்தியா சாகரர் தம்பதஞ்
சொன்மேலுந் தாமதமா இவ்வேளையில் (நாயக)

ரூபாவதி:—சமயத்துக் கேற்ற பாட்டும் பாட்டுக்கேற்ற குரலும் இராகமும் தாளமும் எல்லாம் நன்றாயிருக்கின்றன.

கநகமாலை:—அவளுக்குப் பாடுகிறதற்குக் கேட்பானேன்? ஜன்மாந்தரத்திலே புண்ணியம் பண்ணி இருக்கின்றாள்! அதுதான் தெய்வம் நல்லகுரலாய்க் கொடுத்திருக்கிறது!

அம்புஜாட்சி:—இன்றைக்கு என்று என்னவோ கொஞ்சம் தொண்டைகட்டிக் கொண்டிருக்கிறது, அல்லாமற் போனால் இன்னும் சற்று நன்றுய்ப்பாடி இருக்கலாம்.

ரூபாவதி:—பாட்டுப்பாடுகிறவர்களெல்லாரும் அஃது என்னையோ தெரியவில்லை, தொண்டை கட்டிக் கொண்டிருந்தாலும் சரி இல்லாமற் போனாலும் சரி, இப்படித்தான் சொல்லுகிறார்கள்.

கநகமாலை:—அது அவர்களுக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்?

அம்புஜாட்சி:—சரி. நாம் இப்படிப் பேசிக்கொண்டிருந்தால், நமக்கு நாழிகையாக வில்லையா? அஸ்தமித்துப் போயிற்று. அகத்திற்குப் போகவேண்டாமா?

கநகமாலை:—ஆமாம், சூரியன் அப்போதே மலைவாயிலே விழுந்து விட்டானே. சீ, சீ, இனிமேல் இருக்கப்படாது. அம்மா, எங்களப்பா கோபித்துக் கொள்வார்.

ரூபாவதி:—ஆம், எனக்கும் நேரமாய்விட்டது.

[யாவரும் போகின்றனர்.]

---

## இரண்டாங்களம்

இடம்:—காடு

காலம்:—நண்பகல்

பாத்திரங்கள்:—சற்குணன், சுந்தரி

சற்குணன்:—இன்னும் கொஞ்சத்தூரம் போனால் ஒரு வேலமர மிருக்கின்றது, அதன் நிழலில் தங்குவோம். சிறிது விரைவாய் வா. ஐயோ! உன் பாதங்கள் தரையை மிதித்தறியாவே! உனக்கு வெய்யிலென்பதே தெரியாதே! என் செய்வேன்! இதுவும் என் தலைவிதியோ? ஆ! தெய்வமே!

சுந்தரி:—தெய்வந்தான் என்னசெய்யும்? நாம்தாம் என்ன செய்வோம்? கொஞ்சத் தூரத்திற் கப்பால் வேலமரம் ஒன்று இருக்கிறதென்றீர்களே! அஃதெப்படி உங்களுக்குத் தெரியும்?

சற்குணன்:—அந்தோ! உன்னைக் கைப்பிடித்த இந்தப்பாவி அரசனாயிருந்த காலத்திற் பலதரம் இதே காட்டில் வேட்டையாட வந்திருக்கின்றான்!

சுந்தரி:—வெய்யிலோ அகோரமாய்க் கொளுத்துகின்றது! இப்படியே அழுதுகொண்டு போவோமானால் உடம்பு களைத்துப் போய்விடும். அப்புறம் நடக்கமுடியாது.

சற்குணன்:—ஐயோ! என் கண்ணே! உனக்கு இருக்கிற அறிவு எனக்கில்லையே! என் செய்வேன்!

சுந்தரி:—நம்மைப் பிரமா அவஸ்தைப் படவேண்டுமென்றே நினைத்து முதலில் இராஜ்ய பரிபாலனத்தை யெல்லாம் கொடுத்து இப்போது அவற்றை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு துஷ்ட மிருகங்களுக்கு இரையாகும்படி படைத்துவிட்டான்! காடோ மகா கடோரமா யிருக்கிறது! வெய்யிலோ இன்றைக்கு என்று மகோக்கிரமா யிருக்கிறது! தினமும் இருந்த தைரியமும் இன்று சோதனை செய்ததுபோலக் கைவிட்டுப் போய்விட்டது! பூர்வ ஜன்மத்தில் நாம் என்ன பாவம் செய்தோமோ அவற்றின் பயனை எல்லாம் இப்போது அனுபவிக்கும்படி நேரிட்டுவிட்டது! வளப்பமுள்ள நாட்டை இழந்தோம்! வெகு நேர்த்தியான மதுரை நகரத்தை இழந்தோம்! அலங்காரமான அரண்மனையை இழந்தோம்! உடைமை இழந்தோம்! பொருளை இழந்தோம்! மீனாட்சி சுந்தரேசுவரர் தரிசனத்தை இழந்தோம்! 'சுந்தரேசுவரர்' என்ற

உடனே ஞாபகம் வருகிறது. எல்லாப் பாக்கியத்திலும் மேலான நம்முடைய அருமைச் சுந்தராநந்தனையும் இழந்தோம்! இழந்தோம்!! தெய்வமே! தெய்வமே!! சுந்தராநந்தா! சுந்தராநந்தா!! உன்னை இழந்தபிறகும் உயிர் தரிப்பேனோ?

[சுந்தரி மூர்ச்சைபோய் வீழ்கின்றனள்.]

சற்குணன்:—ஐயோ! என்ன செய்வேன்! நீ சிறிது தைரியமாயிருக்கிறாயே என்று நினைத்தேன். நீயு மிவ்வாறு மூர்ச்சை போய்விட்டாயே! இவ்வனாந்தரத்திற் கொஞ்சம் ஜலம், மயக்கம் திரும்படி உன் முகத்தில் தெளிக்கலாம் என்றாலும் ஜலமில்லையே! எங்கேயாவது சுற்றிப் பார்த்துக்கொண்டு வருவோம் என்றாலும் உன்னைத் தனியாய் விட்டுவிட்டுப் போனாற் புலியடித்துக்கொண்டு போய் விட்டா லென்செய்வேன்! கடைநாளில், நாடு, நகர் எல்லாவற்றையும் துறந்தேன்! அரும்புதல்வனை யிழந்து புத்திரசோக முற்றேன்! கடைசியில் என் உயிர்த் துணைவியாகிய சுந்தரியையும் இழக்கவேண்டுமோ! வேண்டுமோ!! சுந்தரீ! சுந்தரீ!! என்னை இப்படி ஏகாங்கியாய் விட்டுப் பிரிதல் நியாயமோ?

கலையெலாங் கற்றமாதே போதியோ கடிய நெஞ்சேன்
றலைவியை யிழந்த பின்னுஞ் சாகிலே னிருக்கின்றேனே! (கக)

(மௌனம்) 'ஐயா' என்ற சப்தம் கேட்டேன். ஆ! யாரோ பார்ப்பேன்.

[ஒரு வேடன் வருகின்றான்.]

வேடன்:—ஏன் ஐயா! இப்படி யழுகிறிய? உங்களுக்கு—ஆகாகாகா! யாரோ அம்மா! என்ன மயக்கமோ? இதோ தண்ணியிருக்குது. தெளியுங்க முகத்திலே.

(வழுதியார் தண்ணீர் தெளிக்கின்றார்.)

சற்குணன்:—கொஞ்சம் அம்மாவுக்கு வெய்யில் மறைவாய் நில் அப்பா!

[வேடன் அவ்வாறு நிற்றலும், வழுதியார் தூக்கிமேலே சாய்த்துக் கொள்கின்றார்; சுந்தரி மூர்ச்சை தெளிகின்றாள்.]

சுந்தரி:—ஹா! ஹா!

சற்குணன்:—என் பிராண நாயகியே! எனக்குத் தைரியஞ் சொன்னாயே! நீ இவ்வாறு மூர்ச்சைபோய் என்னைத் துன்பப்படுத்துதல் சரியாகுமோ? நீ யப்படியே உயிர் துறந்திருப்பையாயின் யான்தான் பிழைப்பேனோ? இவையெல்லாம் எம்பெருமாள் விளையாட்டேயல்லவோ? "அவனின்றி யோரணுவும் அசையாது" என்ற பெரியோர் வசனம் பொய்த்துப் போகுமோ? என் முத்தே! என்மீது சாய்ந்து கொண்டு சற்று இளைப்பாறுவாய்!

வேடன்:—ஐயா! இங்கே புலிகரடி முதலிய பிராணிய சுத்தித் திரியுமே. இங்கே யிருக்கக் கூடாதே—

சற்குணன்:—நாங்கள் சாகவேண்டியதும் கடவுளுக்கு இஷ்டமானால் அதுவும் நடந்தே தீரும். அதற்காக நாம் பயப்படுவதேன்?

சுந்தரி:—அப்படியில்லை. நாம் நம்மாலான முயற்சிகளைச் செய்தால் நடக்கிறபடி நடக்கட்டும். கடவுள் நம்முடைய செயல்கள் மூலமாகவேதான் நமக்கு நன்மையினையுந் தீமையினையும் விளைக்கின்றார். ஆகையால் நாம் ஒன்றுஞ் செய்யாதிருந்தால் நமக்கு நன்மை விளைவதெப்படி?

**சற்குணன்:**—என தருமைத் தலைவியே! நீ சொல்வன வெல்லாம் நியாயந்தாம். நாம் இப்பொழுது தங்கி யிருப்பதற்கு இடம் எங்கே?

**வேடன்:**—ஐயா! நீங்க அதுக்கு யோசனை செய்யவேண்டாம். இதுக்கருகாலே இரண்டு நாளியவளித் தூரத்திலே ஒரு சாமியார் சாவடி யிருக்குது. இப்போ உங்களைக் கூட்டிப் போய் அந்தச் சாமியார் மடத்திலே விட்டுப்போட்டு அப்புறம் வீட்டுக்குப் போறேன்.

**சற்குணன்:**—அந்தச் சாமியார் பெயரென்ன?

**வேடன்:**—அது எனக்குத் தெரியாது சாமி. அவர் சாவடி மாத்திரந் தெரியும். வருகிறதிண்டா வாங்க.

**சற்குணன்:**—கொஞ்சம் பொறுத்துக்கொள். அப்பா! வருகிறோம்:—ஏன், புறப்படுவமா?

**சுந்தரி:**—இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும் அப்பா! அந்தச் சாவடி?

**வேடன்:**—இதோ! கிட்டத்திலே தான் அம்மா!

**சுந்தரி:**—ஆனாற் சரி.

**சற்குணன்:**—மெல்ல! மெல்ல! என் கையைப் பிடித்துக்கொள்.

**வேடன்:**—நான் முன்னுக்குப் போறேன். பின்னுக்கு நீங்க மெதுவா வாங்க.

[யாவரும் போகின்றனர்.]

---

## மூன்றாங்களம்

---

இடம்:—காட்டில் முனிவராச்சிரமம்

காலம்:—மாலை

பாத்திரங்கள்:—ஞானதீபர், ஆன்மநாதர்

ஞாநதீபர்:—அப்பா! ஆத்மநாதா! செய்யவேண்டிய காரியத்தையெல்லாஞ் செய்து விட்டாயா? சிவஞாநபோத சூத்திரங்களை நேற்றுச் சிரவணம் பண்ணினுயே! இன்றைக்கு அவற்றை எல்லாம் மனனம் பண்ணிவிட்டாயா? மேற் போகலாமா?

ஆன்மநாதர்:—ஆக்ஞாப்பிரகாரம், சகல காரியங்களையுஞ் சம்பூர்ணப்படுத்தி விட்டேன். சிரவணம் பண்ணின சூத்திரங்களிற் சில மனத்தில் அவகாஹப்படவில்லை. ஆகையால் அவை முழுவதையும் மனனம் பண்ணத் தடைப்பட்டது. ஆகையா லென்னை க்ஷமித்து என்மீது மீட்டுங் கிருபை கூரவேண்டும்.

ஞாநதீபர்:—அந்தப் பிரகாரமே, உனக்கு மறுபடியும் மனத்திற் படும்படி சொல்லுகின்றேன். இதற்கு முன்னே ஸ்ரீஹரதத்த சிவாசாரியர் பழுக்கப் பழுக்க நெருப்பிலே காய்ந்த இருப்பு முக்காலியிலே வீற்றிருந்து திருவாய் மலர்ந்தருளிய சிவபரத்வ நிரூபணசுலோக பஞ்சகம் படனமாயிற்று?

ஆன்மநாதர்:—திருவுளப் பிரகாரம், படனமாயிற்று. கட்டளையளித்தாற் சொல்லுகின்றேன்.

[சற்குணன், சுந்தரி, வேடன் இவர்கள் விளிக்கின்றனர்.]

ஞாநதீபர்:—அதிருக்கட்டும். யாரோ வாசலில்வந்து 'சாமி! சாமி!' என்று கூப்பிடுகிறது போலத் தோன்றுகின்றது. அதென்னவென்று போய்ப்பார்த்து வா.

[ஆன்மநாதர் வெளியே போய் வருகின்றார்.]

ஆன்மநாதர்:—யாரோ இருவர், ஸ்திரீபுமான்கள், வெய்யிலாற் களைத்தவர், செவ்விய மேனியர், சிறந்த நோக்கினர்,

வாடிய முகத்தினர், அழுதகண்ணினர், வந்துளர். அவர்கள் சமீபத்தில் ஒரு வேடனும் நிற்கின்றான்.

ஞாநதீபர்:—அவ்விருவரும் ஒருவேளை நமது ஆசிரமத்தில் தங்கலாம் என்று வந்தார்கள்போலும்! நீபோய் அவர்களையிங்கே யிட்டுக்கொண்டு வந்து விட்டுவிட்டு அவர்களுக்கு ஏதேனும் போஜனத்திற்கு ஏற்பாடு செய்.

ஆன்மநாதர்:—அப்படியே செய்கின்றேன்.

[போகின்றார்]

(வேடனொழிய மற்ற யாவரும் வருகின்றனர்.)

[சற்குணனுஞ் சுந்தரியும் ஒருங்கே முனிவரை வணங்குகின்றனர்.]

ஞாநதீபர்:—தீர்க்காயுஷ்மான் பவ!—தீர்க்க சுமங்கலீபவ!—நீங்களிருவரும் ராஜலக்ஷணங்களோடு கூடினவர்களாயிருக்கின்றீர்களே! உங்களுக்கு இந்தக் கதி சம்பவிப்பானேன்?

சற்குணன்:—சுவாமிகாள்! அடியேன் பாண்டிய தேசத் தரசனுவேன். ஆலாசிய க்ஷேத்திர வாசியா யிருந்தேன். சற்குணப் பெயரினேன். இவள் எளியேனது பாரியையாவாள். சுந்தரிப் பெயரினாள். தொண்டை நாட்டரசன் வீரமார்த்தாண்டனுடைய மகள். சேர தேசாதிபதி சூரசேனவர்மனாற் செயிக்கப்பட்டு இவ்வரணியத்திற்குத் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகும்படி துரத்தப்பட்டோம். வழியிலொரு வேடனைச் சந்தித்தோம். அவனது உதவியால் தேவரீரது ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தோம்.

ஞாநதீபர்:—இச்செய்தி உமது மாமனாராகிய தொண்டைநாட்டரசனுக்குத் தெரியாதோ?

சற்குணன்:—தெரியாது. வெட்கம்பற்றி அவரிடம் உதவி கேட்கவில்லை. யானே போர்க்களஞ் சென்று யுத்தத்திற் றேலவுண்டேன்.

ஞாநதீபர்:—இப்போது இக்கதி அதனினும் வெட்கக் கேடா யிற்றே! இப்படி யிருக்கலாமா?

சற்குணன்:—ஆம். என் செய்வது?

ஞாநதீபர்:—இப்போது உமக்குத் தொண்டை நாட்டிற்குப் போய் வதிய இஷ்டமா? அல்லது சோழ நாட்டிற்குப் போய் வதிய இஷ்டமா? எனக்குத் தற்காலத்தில் ராஜ ரீகஞ்செய்து வருகின்ற வீரேந்திர சோழனைத் தெரியும்.

சற்குணன்:—தேவரீரது இஷ்ட மெப்படியோ அப்படியே நடக்கக் காத்திருக்கின்றேன்.

ஞாநதீபர்:—ஆனுல் உங்களிருவரையும் சோழ நாட்டிற்கு அனுப்புவதா யுத்தேசித்திருக்கிறேன். அந்தப் பிரகா ரமே செய்வீர்களென்று நம்புகின்றேன்.

சற்குணன்:—ஆ, அப்படியே யாகட்டும்.

ஞாநதீபர்:—அப்பா! ஆத்மநாதா!

ஆன்மநாதர்:—இதோ! வந்து விட்டேன்.

[ஆன்மநாதர் வருகின்றூர்.]

ஞாநதீபர்:—இவர்களிருவரும் தங்கியிருப்பதற்கு வசதியான ஓரிடம் பார்த்து இவர்களுக்குக் கொடு. இவர்களுக்குப் போஜன முதலானவைகளும் செய்து வை.

ஆன்மநாதர்:—ஆக்ஞாப் பிரகாரம் செய்கிறேன்.

சற்குணன்:—ஏ, பிராணசுந்தரீ! சாக்ஷாத் மீனுட்சி சுந்தரேசு வரர் கிருபை நம்பேரிற் பரிபூரணமா யிருக்கின்ற தென் பதற்குச் சந்தேகமேயில்லை. பார்! நம்முடைய ஜன்மாந் தர பாவத்தினுல் யாம் அனுபவிக்கும்படி நேரிட்ட துன்

பங்களை யெல்லாம் நீக்குவதற்குப் பரமபதியாகிய சிவ பெருமானார், நீ மூர்ச்சைபோய் விழுந்தபோது ஒரு வேடனைக் கொணர்ந்துவிட்டார்! பிறகு தங்குவதற்கு மிகவும் வசதியான ஒரு முனிபுங்கவருடைய ஆசிரமத்தைக் கொணர்ந்து விட்டார்! நாம் இத்தனை நாளாக இராஜ்ய பரிபாலனம் பண்ணியும் இந்த முனிசிரேஷ்டர் இதுவரைக்கும் இந்த வனத்தில் இருப்பது நமக்குத் தெரியாதிருந்ததே! இந்த ஞானிபெருடைய ஆசீர்வாதமும் நமக்குக் கிடைக்கும்படியும் அந்தச் சந்திரசேகரரே செய்திருக்கின்றார். திருவருட் கற்பக தெய்வசிகாமணி (பாடுகின்றான்)

என்னேநின் கருணை! என்னேநின் கருணை!
தன்னேரில் பொருளே! தாதாயென் னிறையே! (கஉ)

சுந்தரி:—அதற்கும் ஐயமுண்டோ? கடம்பவனேசர் கருணையினாற் சகலமும் நன்மையாய் மாறக் கடவன. முனிவருடைய கருணை யென்னே!

[யாவரும் போகின்றனர்.]

---

## நான்காங்களம்

---

இடம்:—பாண்டியனரண்மனை
காலம்:—காலை
பாத்திரங்கள்:—சூரசேநன், சுசீலன்

சூரசேநன்:—நாம் இந்தப் பாண்டிய நாட்டைக் கவர்ந்து நாம் மதுரையம் பதியை நமது ராசதானியாக்கிகொண்டு நாம் நவரத்தினங்களா லிழைக்கப்பெற்ற பொற்பீடத்தின்

மீது வீற்றிருந்து நாம் அரசுபுரிவது இத்தேசத்தார் யாவர்க்கும் சந்தோஷந்தானே? ஏன்? சுசீலரே!

சுசீலன்:—தாங்கள் சற்குண பாண்டியனை வென்ற மகாவீரர்! தங்கள் இராஜரீகத்துக்குக் குறை சொல்லுவாருமுள ரோ? இந்நகருளார் யாவரும் தாங்கள் இந்த மதுராபுரி யையே தலைநகராக்கிக் கொண்டோமென்று பறையறை வித்த அற்றைநாள் அடைந்த ஆனந்தத்திற்கோரளவு முண்டோ?

சூரசேநன்:—என்ன! இன்னும் பாண்டியனையும் அவன் மனை வியினையுங் காட்டில் துரத்திவிட்டுவரும்படி போன சேவ கர்கள் வரவில்லை!

சுசீலன்:—சேவகர்கள் வருகிற சமயந்தான். இதோ வந்து விடுவார்கள்.

சூரசேநன்:—நாம் அவர்களைக் காட்டில் துரத்திவிட்டு வரும் படி உத்தரவுகொடுத்த சமாசாரம் ஊராருக்குத் தெரியு மோ?

சுசீலன்:—தெரியும்போலத்தான் தோன்றுகின்றது.

சூரசேநன்:—அவர்களுக்கு எப்படித் தெரிந்திருக்கக்கூடும்?

சுசீலன்:—எப்படித் தெரிந்ததோ? நமக்கென்ன? பயமா? அஃதொன்றுமில்லையே.

சூரசேநன்:—நாம் பயத்திற்காகக் கேட்கவில்லை. தெரியக் கூடிய வழி யெப்படியோவென்று தெரிந்துகொள்ளத் தாம் கேட்டோம்.

சுசீலன்:—ஜனங்கள்; ஏழைக்குடிகள்! அவர்கள் மேலும் நல்ல வர்கள்.

சூரசேநன்:—சரி. அதற்கென்ன இப்போது? நயவசநரெங்கே இதுவரையிலுங் காணோம்.

சுசீலன்:—இதோ வந்துவிட்டாரே! பாருங்கள்.

[நயவசநன் வருகின்றார்.]

சூரசேநன்:—ஓ! நயவசநரே! உமக்கு வயது நூறு! நாங்கள் நினைக்கவும் நீரும் வந்தீரே!

நயவசநன்:—மகாராஜா அவர்கள் சமுகத்திற்கு அடியேன் வந்தனம்.

சூரசேநன்:—நிரம்ப சந்தோஷம். இப்படியுட்காரும்.

நயவசநன்:—ஆக்ஞைப்படியே!

சூரசேநன்:—நாம் தோற்கடித்தோமே, அந்தப் பாண்டியன் அவன் புத்திரன்-அவன் பேரென்ன? சுந்தராநந்தன், ஆம் சுந்தராநந்தன். அவனுக்குத் தோழராகவும் வெளியிலே போகும்போது காவலாளராகவும், இரண்டுபேரை நியமித்தோமே, அவர்களில் ஒருத்தன் உமது குமாரன்-மற்றொருவன்-சுசீலர்வகையோ? சரிதான், சரிதான். என்னத்திற்காகக் கேட்டேனென்றால் தெரியாதவர்களாயிருந்தால் ஒருவேளை அவனுக்கு உடன்பாடாயிருந்து ஏதேனும் விபரீதஞ் செய்யக்கூடும்; அதற்காகத்தான்.

நயவசநன்:—(தனக்குள்) எவ்வளவு வஞ்சகன்! கபடன்! சூதுக்காரன்! கொலைஞன்!

சுசீலன்:—நாம் யாவற்றினுங் கவனமாயிருப்பது நியாயந்தானே?

சூரசேநன்:—ஏன் ஐயா சுசீலரே! உம்முடைய வகை மனுஷன் பெயரென்ன?

சுசீலன்:—எவனைச் சொல்லுகின்றீர்கள்?

சூரசேநன்:—அவன்தான் சிறைச்சாலையிலே கிடக்கின்றானே! அவன் தோழன்.

சுசீலன்:—என்னுடைய தமக்கை பிள்ளைதான்; அவன் பெயர் சுகுமாரன்.

சூரசேநன்:—இந்த ஊரிலே நல்ல தமிழ் வித்துவான்கள் இருக்கின்றார்களா?

சுசீலன்:—ஏன் அதற்கென்ன? சமஸ்தான சூரியும் மகா வித்துவானுமாகிய வித்தியாசாகரப் புலவர் இருக்கின்றார்.

சூரசேநன்:—நாம் பாண்டியனோடு புரிந்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப் பற்றிக் கவி பாடும்படி அவர்க்கு உத்தரவு கொடுக்கவேண்டும். அப்படியல்லாவிட்டால் நம்முடைய கருவூர்ச் சமஸ்தான வித்வான் வண்ணக் களஞ்சியப் புலவருக்கு உத்தரவு கொடுப்போம்.

சுசீலன்:—ஆகட்டும். அந்தப்படியே வித்தியாசகரப் புலவரிடந் தங்களுடைய உத்தரவினைத் தெரிவிக்கின்றேன்.

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகாராசா அவுக சமுகத்திலே கும்பிடுறேன்.

சூரசேநன்:—அடே! சேவகா! ஏன் இவ்வளவு தாமதம்?

சேவகன்:—மகாராசா! அவுகளைக்கூட்டி வெகு தொலை போய், வந்தவழி தெரியாமே, நடுக்காட்டிலே, வெய்யில் கொளுத்தக் கொளுத்தக் கொண்டு விட்டிட்டு வந்தேன். அதுதான் நேரமாயிறிச்சு.

சூரசேநன்:—நேற்றே போனாயேடா?

சேவகன்:—ஆமாம் மகாராசா! நான் திரும்பி வாரையிலே இருட்டிப் போயிறிச்சு. அதுதான் இப்ப வந்தேன். இல்லாட்டி அப்பவே வந்திருப்பேன்.

சூரசேநன்:—நீ அவர்களைக் காட்டிலே துரத்திவிட்டு வருகிற போது அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள்? உள்ள

தைச் சொல்லவேண்டும். இல்லாவிடில் உன் த
இந்த வாளினால் துண்டித்துப் போடுவேன்.

[வாளையோச்சுகின்(

சேவகன் :—மகாராசாவே! நான் அவுகளைக் காட்
விட்டவுடனே அவுக கோறண்டு வாய்விட்டுக் க
அந்த வேளையிலே புலி காடி வந்து திரியும்ப
தோணிச்சு. காட்டோ வெகு பயம்மாயிருந்திச்சு. அ
யினாலே, எங்கே புலி என்னையும் அடிச்சுக்கிட்டு போ
ருமோ எண்டு பயந்து நான் என்னாலே முடிஞ்சமட்
வெகு வேகமா ஓடியாந்திட்டேன்.

சூரசேநன் :—அவர்கள் என்னடா பேசிக்கொண்டா
என்று கேட்டால் இவற்றையெல்லாம் உன்னை
சொல்லச் சொன்னார்கள்? ஏண்டா! அவர்கள் பே
கொண்டதைச் சொல்லுகின்றாயா என்ன இப்போ

சேவகன் :—மகாராசாவே! நீங்கள் என்னைக் கொண்டாலு
சரி விட்டாலுஞ் சரி. நான் உள்ளதைத்தான் சொ
றேன். பொய் சொல்லல்லே. அவுக விம்மி வி
யழுதாகளே யொழிய வேறே எதுவும் பேசல்லே.

சூரசேநன் :—நிஜந்தானா?

சேவகன் :—ஆமாம். மகாராசா! நிசந்தான்.

சுசீலன்:—மகாராஜா அவர்களுக்கன்றோ நான் சொல்லுவ

சூரசேநன் :—என்ன சொல்லுகிறீர்? சுசீலரே! சொல்லும
கேட்போம்.

சுசீலன் :—அவர்கள் நடுக்காட்டிற் போன உடனே அவர்
ளுக்கு அழத் தோன்றுமே தவிர வேறொன்றும் பேசத்
தோன்றாது. அவர்கள் தாங்கள் அடைந்த துன்பங்களை
நினைக்கும்போதெல்லாம் தங்களை அறியாமலே அழு

வார்கள். அழுது, ஆறி யோய்ந்த பிறகு தான் ஏதாவது பேசுகிறதற்கும், யோசனை செய்வதற்கும் தோன்றும்; அதற்கு முன்னே வேறொன்றும் முடியாது. இந்த விஷயங்களையெல்லாம் கொஞ்சம் உளநூற் பயிற்சி யுடையவர்கள் எளிதிலுணர்வார்கள். மேலும் தங்களுக்கு இம்மாதிரியான தௌர்ப்பாக்கியங்களை அநுப விக்கும்படி நேரிடவும் இல்லை. ஆகையினால்தான் தங்களுக்கு இது புதிதாகத் தோன்றுகின்றது.

சூரசேநன்:—நமக்கேன் இந்தமாதிரியான கஷ்டங்களெல் லாம் வரும்? நாம்தாம் எப்போதும் எவன் யுத்தத் திற்கு வந்தபோதிலும் சன்னத்தரா யிருக்கிறோமே! நமக்கென்ன?

சுசீலன்:—தங்களுக்கேதாவது வருமென்று சொல்லவில்லை. தாங்கள் இதை யநுபவித்தே யறியீர்களென்று தான் சொன்னேன்.

சூரசேநன்:—ஆம். சுசீலரே! நாம் அநுபவித்ததே இல்லை.

சுசீலன்:—நான் இந்த விஷயத்தைச் சொன்னது எதற்காக வென்றால் நம்முடைய சேவகன் சொல்லுகின்றனவெல் லாம் வாஸ்தவமே என்று காட்டும் பொருட்டுத் தான். மேலுமிவன் பொய் சொல்லுகிறவன் அல்லன்.

சூரசேநன்:—அடே! சேவகா! போடா சரிதான்.

[சேவகன் போகின்றான்.]

சூரசேநன்:—சுசீலரே! நம்முடைய எண்ணஞ்சரியாய் முடிந்து விட்டதன்றோ? இனி நாம் போகலாமா? என்ன? நயவச நரே! மௌனமாயிருக்கின்றீர்!

நயவசநன்:—சகலமும் சரி. (தனக்குள்) மகாராஜா அவர்கள் செய்யுங் காரியங்களுக்குக் கேட்பானேன்!

[யாவரும் போகின்றனர்.]

## ஐந்தாங்களம

இடம்:—நயவசநன் வீடு

காலம்:—பிற்பகல்

பாத்திரங்கள்:—நயவசநரும், சில கனவான்களும்

முதற்கனவான்:—ஏன்? ஐயா! நயவசநரே! நாம் இதுவரையி லும் இந்தச் சூரசேநனை நீதிமானா யிருப்பானென்று எண்ணி இருந்ததற்கு நேர்விரோதமாக நம்முடைய பூர்வ ராஜா சற்குண வழுதியையும், அவர் மனைவி சுந்தரியாரை யும் சிறைச்சாலையில் தான் அடைத்திருக்கிறான் என்று நினைத்தோம். இன்றைக்கு நான் விசாரித்தபோது வேறு விதமாக மந்திரி சுசீலர் வீட்டு வேலைக்காரர்கள் பேசிக் கொண்டார்களாம்; அதைக்கேட்டு என்னுடைய வேலைக் காரன் இன்று என்னிடஞ் சொன்னான். அஃது என்ன நிஜமாயிருக்குமா?

இரண்டாங்கனவான்:—என்ன ஐயா! நீர் என்னமோ சொல் லுகிறீர்? நாம் நாளைக்கே தகுந்த ஏற்பாடுகள் செய்து இந்த மகாபாவியை ஊரைவிட்டுத் துரத்திவிட்டு வழுதி யாரைக் கூப்பிடுவோம். நீர் மாத்திரந் தைரியமாயிரும். ஒருகை பார்ப்போம்!

நயவசநன்:—ஆம். அவையெல்லா மிருக்கட்டும். நீங்கள் உங்க ளுடைய எண்ணத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் இந்த மாதிரி கண்டபடி பேசுவதிற் பிரயோசனமில்லை. சூரசேநனோ, போர் வீரரோடு இப்போதிங்கிருக்கின் றான். அந்தப் போர்வீரர்களை வேறு எங்கேயாவது அனுப்புவதற்குத் தகுந்த யுக்திகள் செய்து அவர்கள் போன பிறகு நீங்கள் கலகமோ கிலகமோ ஏதோசெய்து ராஜாவை—தீர்த்துவிட்டீர்களானால் அப்புறம் எல்லாம் சரியாய்ப்போம். (பாடுகின்றான்)

'இராம னாயினென்னி ராவண னாயினென்?
நந்தம் பாட்டைச் சிந்தித் திருப்போம்'
என்று கருதுவோ ரொன்றினு முதவார்.
அரச னல்லனேற் பரசி யொழுகலாம்;
அன்றித் தீயனேற் பொன்றுத னலமாம்.— (கரு)
சுத்த வீரர் சுயநய மெண்ணலர்
தத்த நாட்டின் றனிநல நாடுபு
மொத்து போரின் முனைந்துவாள் கையிற்கொண்
டெத்தி றம்புக மேய்ந்துவீழ் கின்றனர்! (கசு

மூன்றாங்கனவான்:—போம், ஐயா! போம். கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து அஃது உருகி அப்புறம் கொக்குப் பிடிக்கிற திருக்கட்டும்! நீங்கள் மாத்திரம் பேசாதிருங்கள். நான் தைரியமாய் ராஜா வீதியிற் பவனிவரும் போது இவ்வீட்டியினாற் குத்திப்—போடுகிறேன். அப்புறம் மேல் நடக்கிறதைப் பார்த்துக்கொள்வோம். என்னை வேண்டுமென்றாற் கொல்லுவார்கள். நான் போனாற் போகின்றேன்! நாடுகாப்பின் பொருட்டு ஒருவன் மட்டிற் சாதல் நலமன்றோ?

முதற்கனவான்:—எல்லாவற்றிற்கும் நாம் அவசரப்படக் கூடாது. நயவசநர் கூறுவதையுங் கேட்டு நன்றாய் ஆலோசனை பண்ணி அப்புறம் நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம். பதறாத காரியம்சிதறாது!— ஆமாம். பார்த்துக்கொள்ளும்.

இரண்டாங்கனவான்:—அவருடைய தாற்பரியம் என்னவென்றால்: தாமசஞ் செய்வோமானால் ஒருவேளை அரசனுக்குத் தெரிந்து அவன் மிகவும் சாக்கிரதையா யிருந்து விடுவானாகில் நாம் நினைத்த எண்ணம் நிறைவேறாது போய்விடுமே என்பதுதான். வேறொன்றுமில்லை.

முதற்கனவான்:—இவ்வளவும் அரசனுக்குத் தெரிந்தால் தானே காரியம் நிறைவேறாது போகும்?

[illegible]

முதற்க [illegible]

[illegible]

யாவரும்:—அப்படியே மிகவும் சாக்கிரதையாயிருக்கிறோம். அதைப்பற்றி நீங்கள் யோசிக்கவேண்டாம்.

[யாவரும் போகின்றனர்

முதலங்கம் முற்றிற்று

# அங்கம் - ௨

## முதற்களம்

இடம்:—முற்கூறிய பூஞ்சோலை

காலம்:—மாலை

பாத்திரம்:—ரூபாவதி

ரூபாவதி:—(தனக்குள்) மலர் கொய்யப்போன அம்புஜாட்சியும் கநகமாலையும் இவ்வளவு நேரமாயும் ஏன் வரவில்லை? (பாடுகின்றாள்)

*"மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராஞ்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்தும் யாம்" (௧௫)

என்று கூறிய தங்கள் வார்த்தையை மறந்து விட்டார்களோ?—(மௌனம்) அவ்விடத்தில் ஒரு மயில் கலாபம் விரித்து ஆடுகின்றது. அதைப் போய்ப் பார்ப்பேன்; அதற்குள் இவர்களும் வரட்டும்.

[எழுந்து சிறிதுதூரம் உலவுகின்றாள்.]

இஃதென்னை புதுமை! இவ்விடத்தை மிதித்த உடனே என்னுடைய தேகம் புளகிக்கின்றதே! அந்தோ! இதுவன்றோ சுந்தராநந்தன் நேற்று இருந்த இடம்? இங்குத்தானே அவன் மூர்ச்சைபோய் விழுந்தது?—என்னுடைய தகப்பனாரும் இத்துணைக் கொடியரோ?—அவனுடைய உருவம் என் கண்ணுக்கு எதிரே நிற்கிறது போலத் தோன்றுகின்றதே! ஓ! சுந்தராநந்தனே! நேற்று

* தண்டியலங்காரவுரை

உன்னைத் தரிசித்தது முதல் உன்னைப் பரிசிப்பது எந்நாளோ எந்நாளோ என்று ஏங்கி ஏங்கி வருந்துகின்றேன்! நேற்றிராமுழுதும் தூக்கமென்பது சிறிதும் வரவில்லை! எழுந்து நிலாமுற்றத்தில் உலாவினேன்! ஐயோ! கொஞ்சமேனுங் கருணையென்பதில்லாமற் சந்திரன் தனது நிலவுநெய்பெய்து எனது காமாக்கினியை வளர்த்துத் துன்பப்படுத்தினன்! என்ன செய்வேன்? மீட்டும் படுத்துக் கொள்வேன்! எழுந்திருப்பேன்! உலாவுவேன்! இந்தப் படி நேற்றிரவைக் கழித்தேன். இன்று என்னசெய்வேனோ?—என்னுடைய ஆசைக்கண்ணாளன் சுந்தராநந்தன் ஒரு வேளை இன்றைக்கும் வருவானோ? வந்தால் யான் அவனை இன்னொரு தரமாவது தரிசனம் பண்ணி யாறுவேன்! (பாடுகின்றாள்)

தோகைமா மயில்கா ளென்னைச் சுந்தரா நந்தன் வந்தாற்
கோகிலங் காள்சு கங்காள் கூவுமின் தயவு செய்தே. (கரு)

—(மௌனம்) என்னுடைய தோழிமார் ஒருவேளை இதைக் கேட்டுக்கொண்டு வருவார்களோ? ஐயோ! என்னுடைய இந்தச் செயல்களெல்லாம் என் தகப்பனாருக்குத் தெரிந்துவிட்டால் என்ன செய்வேன்! நான் கெடுவதே யன்றி என்னுடைய அருமைச் சுந்தராநந்தனுக்கும் கேடுவிளையுமே! அம்ம! ஓ! கொடுமை! கொடுமை!—அதோ அம்புஜாட்சி வருகின்றாள். இனிமேல் நான் இதைக்குறித்து பேசப்படாது.

[அம்புஜாட்சி வருகின்றாள்.]

அம்புஜாட்சி! ஏன் இவ்வளவு தாமதம்?

அம்புஜாட்சி:—என்னவோ? அம்மா! கநகமாலையும் நானும் இரண்டு பேருமாய்ப் போனோம். அவளை யெங்கேயோ

காணேன். இதுவரைக்கும் வருவள் வருவளென்று காத்துக் கொண்டிருந்தேன். இன்னும் வரவில்லை. ஒருவேளை எனக்கு முந்தியே இங்கே வந்துவிட்டாளோ என்று நினைத்து வந்தேன். அவள் இங்கே வந்தாளோ?

[கநகமாலை வருகின்றாள்.]

ரூபாவதி:—நீ அப்படித் திரும்பிப்பார் யாரென்று!

அம்புஜாட்சி:—என்னடி அம்மா! கநகமாலை! இதுவரைக்கும் எங்கே போயிருந்தாய்? உனக்காக எவ்வளவு நாழிகை காத்துக்கொண்டிருக்கிறது? ரூபாவதி தனியாயிருக்கிறாளே என்று வந்துவிட்டேன். என் பேரிலே ஏதாவது கோபமோடி அம்மா?

கநகமாலை:—இதற்குக் கோபமென்ன கோபம்? நீ என்ன பெரிய தலைபோகிற காரியஞ் செய்துவிட்டாய், அதற்கு நான் உன்னை கோபித்துக்கொள்ள? என்னவோ இப்படியே போனேன். அங்கே யோரிடத்தில் இரண்டு மான்கள் துள்ளி விளையாடின. அந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டே இருந்து விட்டேன். அதுதான் கொஞ்சம் தாமதமாய் விட்டது. நம்முடைய ரூபாவதியை வெகுநாழிகை காக்கும்படி வைத்துவிட்டோமே என்று வருத்தப்படுகிறேன்.

ரூபாவதி:—இந்த அற்ப காரியத்திற்காக நீ வருத்தப்படுவானேன்? நானும் இங்கே ஒரு மயில் அழகாய்த் தோகை விரித்தாடிற்று. அதைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அம்புஜாட்சி:—ஏன் ரூபாவதி! நான் ஒன்று கேட்கிறேன்—கோபித்துக் கொள்ளாதிருந்தாற் சொல்லுகிறேன்.

ரூபாவதி:—கோபித்துக் கொள்ளுகிறதென்ன? சொல்லடி சொல்.

அம்புஜாட்சி:—அப்படி யொன்றுமில்லை. வேடிக்கையாய் தான் கேட்போமென்று நினைத்தேன்.

ரூபாவதி:—அதைத்தான் இன்னதென்று சொல்லு, கேட போம். சீக்கிரம் சொல்லு.

கநகமாலை:—அவள் எப்பொழுதும் இப்படித்தான் கொஞ சம் வீண் பிலுக்கெல்லாம் பண்ணுவாள்.

அம்புஜாட்சி:—அப்படி எத்தனை நாள் அம்மா உன்னிடத்தில் நான் பிலுக்குப் பண்ணி யிருக்கிறேன்?

ரூபாவதி:—வெகு நன்றாயிருக்கிறது! அஃதென்னை? நீயும் ஆரம்பித்து விட்டாய்! அவள்தான் சொன்னாற் சொல் லட்டுமே! அவளுக்கு உன்னைச் சொல்ல உரிமையில் லையா என்ன?

அம்புஜாட்சி:—சொன்னாற் சொல்லுகிறாள். அதற்கொன்று மில்லை. நான் சொல்லவந்த தென்னவென்று கேட்டால் உன் முகம் என்னவோ கொஞ்சம் வாட்டம் அடைந் தது போலக் காணப்படுகின்றதே; அஃது எதனாலே என்று கேட்கத்தான் வாயெடுத்தேன். அதற்குள்ளே கநகமாலை நான் பிலுக்குப் பண்ணுவதாக நினைத்துக் கொண்டாள்.

ரூபாவதி:—அதுதான் அவள் விளையாட்டாய்ச் சொன்னாள்; நீயேன் அதை மறுபடியும் மறுபடியும் தூண்டிச் சொல் லுகிறாய்? என்னவோ விட்டு வேறே யேதாவது பேசு.

கநகமாலை:-அம்புஜாட்சி! நான் உன்னைத் தெரியாதே சொல்லி விட்டேன் அம்மா! இவ்வளவு தூரஞ் சொல்லுவா யென்று தெரிந்திருந்தால் நான் பேசியிருக்கவே மாட் டேன்.

ரூபாவதி:—சரி, நீங்கள்தாம் வாதிப் பிரதிவாதிகளாம். நான் நியாயஞ் சொல்வேனும். எங்கே இரண்டு பேரும் உங்கள் வழக்கைச் சொல்லுங்கள். கேட்டுத் தீர்மானம் சொல்லுவோம்.

அம்புஜாட்சி:—என்னடியம்மா! நீ கேலிபண்ணுகிறாயே யொழிய நான் கேட்டதை விட்டுவிட்டாயே.

ரூபாவதி:—நீ அப்படி என்ன கேட்டாய்? எனக்கொன்றும் ஞாபகம் இல்லையே!

அம்புஜாட்சி:—ஞாபகமில்லையா? சரிதான். நீ எங்களுக்கெல்லாம் சொல்லுவையா அம்மா!

ரூபாவதி:—நீ கேட்டதே யின்னதென்று தெரிந்தாலன்றோ நான் சொல்லக்கூடும் அம்மா! என்பேரிற் கோபித்துக் கொள்வதிற் பயனில்லை.

அம்புஜாட்சி:—ஆனாற் சொல்லுகிறேன் இன்னொருதரம்; கவனமாய்க்கேளு. உன் முகத்தில் தினமும் இருக்கிற சந்தோஷக்களையை இன்றைக்கு என்னவோ காணோம்! அதன் காரணமென்ன? சொல்லு.

ரூபாவதி:—அதன் காரணமா?—(மௌனம்)

கநகமாலை:—என்ன யோசிக்கிறாய்? சொல்லு.

அம்புஜாட்சி:—என்ன இது! அழுகிறாயா? என்ன? ஏன் அம்மா! நாங்கள் இருவரும் உன் பக்கத்தில் உனக்குத் துணையா யிருக்கிறபோது நீ யழவேண்டிய காரணமென்ன? உன்னை நாங்கள் யாரும் என்னவாவது சொன்னோமா? அல்லாமற் போனால் நாங்கள் இவ்வளவு நாழிகையா யுன்னைத் தனியாய் விட்டுவிட்டுப் போய் விட்டோமென்று விசனப்படுகிறாயா? அதுவுமல்லாவிட்டால் எவையாவது மிருகங்களைக் கண்டு நீ பயந்திருக்க

லாம் என்று சொல்ல ஏதுவுமில்லையே. எனது அ
மைத் தலைவியே! ரூபாவதி! நீ இவ்வாறு வருத்தப்ப
வதை நாங்கள் பார்த்துக்கொண்டிருப்போமோ? உ
மனத்திலிருக்கிற துன்பத்தை நீ யெங்களிடத்திற் சொ
லத் தகாதோ?

ரூபாவதி:—எனக்கு அதைச் சொல்ல நாவெழவில்லை-(மெ
னம்)

[கண்ணீர் வடிக்கின்றாள்

அம்புஜாட்சி:—அடி! கநகமாலை! நம் ரூபாவதி மெய்யாகவே
யழுகின்றாள். நீ மற்றைத் தோழிமாரையும் கூப்பிடுகி
யா? (இரங்கிப் பாடுகின்றாள்.)

கரும்பிழி சாறொக்குங் கனிமோரு யோடு
முருந்தினை மானு முறுவலும் பூத்து
வருந்தா திருந்தவ ளின்றே வருந்தி
யிருந்தா ளிருந்தவா காணீரே யெழிலுடை யீர்வந்து காணீரே.

பண்களி கூர்ந்தளி பாடுங் குழலினள்
வின்கொ ளமுதமு மேவு மதரத்த
ளன்பு கொளவரு நந்தம்ரூ பாவதி
கண்க ளிருந்தவா காணீரே காரிகை யீர்வந்து காணீரே. (க

கநகமாலை:—அம்புஜாட்சி! இந்தச் சோலையிலே ஒரு வ
தேவதை யுண்டென்று சொல்லக் கேட்டிருக்கிறோமே
எங்கே அதுதான் ஒருவேளை யிவள் தனியா யிருக்கு
போது வந்து பயமுறுத்திவிட்டுப் போயிற்றோ? என்
வோ?

அம்புஜாட்சி:—எனக்கு அப்படி யிருக்குமென்று தோன்
வில்லை. அப்படியாயின் இப்படிச் சொல்மாட்டாள்.—
எல்லாவற்றிற்கும், ஏன் ரூபாவதி! உள்ள காரணத்தை

எங்களுக்கு வெளியிடக்கூடாதா? நாங்கள் உன் தோழி களல்லமோ?

[சுந்தராநந்தன் வருகின்றான்.]

ரூபாவதி:—(கண்ணீரைத் துடைத்துக்கொண்டு) அதொன்றும் அவ்வளவு விசேஷமில்லை. நாம் போகவேண்டாமா? நமக்கு நேரமாகவில்லையா?

கநகமாலை:—தினமும் வருகிறார்களே, அந்தப் பிள்ளைகள் இன்றைக்கும் ஒருவேளை வந்தாலும் வருவார்கள். சற்றே இருந்து வேண்டுமென்றால் பார்த்துவிட்டுப் போவோம். ஏதாவது விசனப்பட்டுப் பேசுவார்கள். கேட்போம்.

ரூபாவதி:—அவர்களைப் பார்வை என்ன? கொம்பு முளைத்திருக்கிறதோ?

அம்புஜாட்சி:—கநகமாலைதான் சொல்லுகிறாளே. இருந்துதான் பார்த்துவிட்டுப்போவமே. என்னவோ? எளியன் சுந்தராநந்தன்! அவனை நினைக்கிறபோதெல்லாம் எனக்கு விசனமாயிருக்கிறது. அவன் தலையிலே பிரமா இப்படிக் கஷ்டப்படும்படி எழுதிவிட்டான்!

ரூபாவதி:—(விசனத்தை அடக்கிக்கொண்டு) நேற்று அழுது மூர்ச்சைபோய் விழுந்தானே! அவனா?

கநகமாலை:—ஆமாம்! அவன்தான்! அழகாய் இன்னொருத்தன் மடியிலே சாய்ந்துகொண்டிருந்தவன்!

ரூபாவதி:—ஏண்டி! கநகமாலை! நீ இப்போது சொன்னாயே இந்தச் சுந்தராநந்தன், அம்புஜாட்சி அத்தைபிள்ளை சுகுமாரன், இவர்கள் இரண்டு பேர்களிலும் யார் அதிக அழகுடையவர்?

கநகமாலே:—சுந்தராநந்தன் தான். சொல்லுகிறதற்குக் கே
பானேன்?

[சுகுமாரன் வருகின்றான்.]

[அவனும் சுந்தராநந்தன் இருக்குமிட
வந்து ஒளித்து நிற்கின்றான்.]

சுந்தராநந்தன்:—(மறைவில்) கொஞ்சம் பேசாதிரு!

ரூபாவதி:—அரசன் மகன் என்று சொல்லுகிறாயோ?

கநகமாலே:—எனக்கென்னடி அம்மா! முந்தி ராஜாபிள்ளேயா
யிருந்தால் இப்போதென்ன அதற்கு?

ரூபாவதி:—(தனக்குள்) என்னே உலகியல்! அரசிழந்தாளை
யவமதித்தல் நன்றாயிருந்தது! செல்வஞ் சிறப்பே
செம்மை சிறப்போ? (வெளியாய்) அப்புறம், அம்
ஜாட்சி சண்டைக்கு வரப்போகிறாள்! சுகுமாரனுக்கு
சுந்தராநந்தனுடைய அழகில்லே என்று சொல்லுகிறாயே

கநகமாலே:—ஏதம்மா! நீயே சண்டையிழுத்து விடுவாய்போ
லிருக்கிறதே!

அம்புஜாட்சி:—என்ன! ரூபாவதி! இப்படிக் கேலி பண்ணு
கிறாய்!

ரூபாவதி:—சரி. இவையெல்லா மிருக்கட்டும். கநகமாலே! நா
ஒன்று கேட்கிறேன். சொல்லுவையா?

கநகமாலே:—என்ன? கேளு! சொல்லக்கூடியதா யிருந்தா
சொல்லுகின்றேன்.

ரூபாவதி:—அம்புஜாட்சிதான் அவள் அத்தைபிள்ளே சுகும
ரனுக்கு வாழ்க்கைப்படப் போகின்றாள். நீ யாருக்கு
வாழ்க்கைப்படப் போகின்றாய்? சுந்தராநந்தன்தா
வெகு அழகா யிருக்கின்றானே! நீ ஏன் அவனேக் க
யாணம் செய்துகொள்ளக் கூடாது?

அம்புஜாட்சி:- அப்படிச் சொல்லப்போனல், ரூபாவதி! உனக்கும் அவனுக்குந்தான் ஈடு சரியாயிருக்கிறது. உன்னுடைய அழகுக்கு ஏற்றவன்தான் அவனும்! அவனுடைய அழகுக்கு ஏற்றவள்தான் நீயும்!

ரூபாவதி:— (முகஞ்சிவந்து) கநகமாலையும் என்ன? அழகிற் குறைந்தவளோ? அவளும் அவனுக்கு ஏற்றவள்தான்! ஒருவேளை அவன் இப்போது சிறைச்சாலையி லிருக்கிருனே என்று எண்ணுவாளோ என்னவோ?

கநகமாலை:— அவையெல்லாம் வீண் பேச்சு. ரூபாவதி! உனக்கு இஷ்டமிருந்தால் நீ அவனுக்கு வாழ்க்கைப்படு.

ரூபாவதி:— சரி. அம்புஜாட்சி! கநகமாலைகூட வீண் பேச்சு என்று சொல்லுகின்ருள்! நேரமாகிறது. வீட்டிற்குப் போகவேண்டும்.

அம்புஜாட்சி:— ரூபாவதி! நீ ஒரு பாட்டுப் பாடு.

கநகமாலை:— எங்கே ரூபாவதி! பாடு.

ரூபாவதி:— (பாடுகின்ருள்)

பெருமான்வந் தானென்று பேசுவாய் கிளியே
பீரு மொழிந்திடப் பேசுவாய் கிளியே
மருமலர் வீசிடப் பேசுவாய் கிளியே
வந்தது தென்றலும் பேசுவாய் கிளியே. (௧௯)

போதன்வந் தானென்று பேசுவாய் கிளியே
புன்கண்மை போகவே பேசுவாய் கிளியே
நாதன்வந் தானென்று பேசுவாய் கிளியே
நாமு மகிழ்ந்திடப் பேசுவாய் கிளியே. (௨0)

மழகளி ரோடிட வாடுவாய் மயிலே
மாட்டினன் வந்தானென் ருடுவாய் மயிலே

யழகினன் வந்தானென் றாடுவாய் மயிலே
யானந்தம் வந்ததென் றாடுவாய் மயிலே. (உக)

வள்ளலும் வந்தானென் றாடுவாய் மயிலே
மதன்வாதை நீங்கிற்றென் றாடுவாய் மயிலே
விள்ள மலர்மண மாடுவாய் மயிலே
வீசும் பொழிலகத் தாடுவாய் மயிலே. (உஉ)

தலைவன்வந் தானென்று கூவுவாய் குயிலே
தன்னை மறந்திடக் கூவுவாய் குயிலே
கலைஞன்வந் தானென்று கூவுவாய் குயிலே
களித்திருந் தாடிடக் கூவுவாய் குயிலே. (உங)

இறைவன்வந் தானென்று கூவுவாய் குயிலே
யென்னை யணைந்திடக் கூவுவாய் குயிலே
சிறையினை நீங்கியே கூவுவாய் குயிலே
சேர மனத்தெண்ணிக் கூவுவாய் குயிலே. (உச)

அம்புஜாட்சி :—பாட்டு வெகு சுகமா யிருக்கிறது.

கநகமாலை :—இன்றைக்கு நாம் வந்து வெகு நாழிகையாய் விட்டது. ஆகையினாலே நாம் சீக்கிரம் போகவேண்டும் அம்மா!

ரூபாவதி :—சரி. ஏன் அம்புஜம்! போவமே!

அம்புஜாட்சி :—குறைப்பெயராய்க் கூப்பிட்டாயானா லுனக்குக் குறைப்பிள்ளைதான் பிறக்கும்! பார்த்துக்கொள்.

ரூபாவதி :—அப்படியே பிறந்தாலும் ஒன்றுதானே யப்படிப் பிறக்கும். போகட்டும். மற்றைப் பிள்ளைகளாவது நன்றாய்ப் பிறக்குமே யல்லவோ? அது போதும்.

அம்புஜாட்சி :—ஏன்? தாமதம் என்ன? போகலாமே.

ரூபாவதி:—தாமதமொன்றுமில்லை. போகலாம். அம்புஜாட்சி! நீ இன்றிரவு மாத்திரம் எங்கள் அரண்மனையில் என்

ளோடு தங்கியிருந்து விடியற்காலம் நீ யுன் வீட்டிற்குப் போகலாமே.

அம்புஜாட்சி:—அப்படியானால் நானிப்போது வீட்டிற்குப் போய் என் தகப்பனாரிடம் அநுமதி பெற்றுக்கொண்டு வந்துவிடுகிறேன்.

[ரூபாவதி, அம்புஜாட்சி, கநகமாலை போகின்றனர்.]

சுகுமாரன் :—(வெளிவந்து) நீ வந்து வெகு நாழிகையாய்விட்டதோ? என் சுந்தராநந்தா! இப்போது பேசிக்கொண்டிருந்தார்களே, இந்த மூன்று பெண்களும் இன்னார் என்பது உனக்குத் தெரியுமா?

சுந்தராநந்தன் :—மந்திரி சுசீலர் பெண் ஒருத்தி; அவள்தான் உன் மாமா பெண். அது நிச்சயமாய்த் தெரிகின்றது. மற்றையிரண்டு பேரும் யாரோ? நன்றாய்த் தெரியவில்லை.

சுகுமாரன் :—என்னுடைய மாமா பெண் பெயர் அம்புஜாட்சி. —மற்ற இரண்டு பேர்களிலும் அதிக அழகுள்ளவளாயிருந்தாளே அவள்தான் உன்னை யிக்கோலமாக்கிய சூரசேநன் புதல்வி. அவளுக்கு அவளுடைய அழகுக்குத் தக்கபடி 'ரூபாவதி' யென்று பெயரிட்டிருக்கிறார்கள். மற்றவள் 'கநகமாலை' யென்னும் பெயருடையவள். அதைத் தவிர வேறொன்று மவளைப்பற்றி எனக்குத் தெரியாது.

சுந்தராநந்தன் :—என்ன! சந்திரமுகன் இன்று இதுவரையிலும் வரவில்லை. ஏதாவது அவன் வீட்டில் இன்றைக்கு விசேஷமுண்டோ? அவன் ஒருநாளும் இவ்வளவு தாமதம் செய்யமாட்டானே!

சுகுமாரன் :—அதற்கென்ன இப்போது? அவன் மெள்ளத் தான் வரட்டுமே!

சுந்தராநந்தன்:—அதைப்பற்றி யொன்றுமில்லை. அவ
கிரம் வருகிறவனை என்று சொன்னேன்.

சுகுமாரன்:—ஓ! சுந்தராநந்தா! நீ யின்று காலைப்பொழு
யெவ்வாறு கழித்தாய்? ஏதேனும் படித்தாயோ?

சுந்தராநந்தன்:—படித்திலேன். ஆயினும் எம் ஆலவாய்ப்பி
மானை வாயாரப் பாடித் துதித்தேன். அதுவே எ
மனத்திற் சிறிது அமைதி விளைத்தது. அதைத் தவிர
வேறொன்றுஞ் செய்திலேன்.

சுகுமாரன்:—நீ பாடித் துதித்ததை நான் கேட்கலாமே
கேட்கலாமெனின் அதைச் சொல்.

சுந்தராநந்தன்:—(பாடுகின்றான்)

செம்மை யுள்ள சிதாநந்த னேயுன்ற
னன்மை யான நவிலருந் தன்மையிற்
கிம்மை யில்லடி யேமிச் சிறையினி
லம்ம வோவென் றரற்றுத லாகுமோ? (உரு

வைய மேத்துறு மாமது ராபுரித்
துய்ய னேமதி சூடிய சுந்தரா
செய்ய நின்னருட் செப்பருந் தன்மையிற்
கைய கோவென் றலறுத னீதியோ? (உசு)

ஆனேறினி தேறியெனை யாளும்மது ரேசா
தேனேயெனுஞ் சொல்லாளுமை சேரும்மிடப் பாகா
கானேய்குழற் கங்காதர நின்பேரரு ளிற்கே
யானேயெனக் கோட்டத்திலி ளைந்தேயெழ லாமோ? (உஎ)

சம்போ சாம்பசிவா சக மெல்லாம் படைத்தவனே
வம்பார் பூம்பொழில்சூழ் மது ராபுரி வாழ்பவனே
யம்பா வுக்குடலி லொரு பாதி யளித்தவனே
யெம்பா னீயிரக்க மினி யேனும் புரிந்தருளே. (உஅ)

மூவா முன்னவனே முதலாகிய முக்கணனே
கோவே கோமளனே குளிர் சந்திர சேகரனே
நாவாற் பாடுகின்றேனே நல முள்ள மதுரையனே
தேவா நீகருணை சிறி தேனும் புரிந்தருளே. (உக)

சுகுமாரன்:—ஓ! சுந்தராநந்தா! நீ பாடிய பாட்டுக்கள் மிகவும் நன்றாயிருக்கின்றன. இவை யெல்லாம் பூர்வஜன்ம புண்ணியம்!

சுந்தராநந்தன்:—(கண்ணீர் ததும்ப) ஜன்மாந்தரத்தில் யான் புண்ணியமுஞ் செய்தேனோ? அப்பா! சுகுமாரா! நீ யறியாது கூறுகின்றாய்! யான் பூர்வஜன்மத்திற் புண்ணியஞ் செய்திருப்பேனாயின் இப்போது ஏன் இந்தவிதத் துன்பமெல்லாம் அநுபவிக்கவேண்டும்? இவை யெல்லாம் என்னுடைய ஜன்மாந்தர பாவத்தினாலேயாமென்பது தோன்றுகின்றது.

சுகுமாரன்:—சரி. இந்த எண்ணத்திற்கு, இப்பொழுது இடங்கொடுத்தோமோ நேற்றைப்போல ஏதேனும் விபரீதம் விளைக்கும். அப்புறம் மிக்க துன்பம் வரும். ஆகையால் வேறு விஷயத்தைக் குறித்துப் பேசுவோம்.

சுந்தராநந்தன்:—இன்றைக்கு ஏதாவது விசேஷம் இருக்கத்தான் வேண்டும். இல்லாவிடிற் சந்திரமுகன் இவ்வளவு தாமதம் செய்ய மாட்டான்.

சுகுமாரன்:—அவனும் வருகிற சமயந்தானே! வந்துவிடுவான். இது கிடக்கட்டும். அந்த மூன்று பெண்களும் பேசிக் கொண்டதிலிருந்து ஒன்று படுகின்றது.

சுந்தராநந்தன்:—அஃதென்னை? எனக்கொன்றுந் தோன்றவில்லையே! எங்கே? அஃது இன்னதென்று சொல்லு. கேட்போம்.

சுகுமாரன்:—அதுவா? சொல்லுகின்றேன் கேள். அரசன் புத்திரி ரூபாவதிக்கு உன் பேரிற் கொஞ்சம் பிரியமிருக்கிறது என்பது காணப்படுகின்றது.

சுந்தரானந்தன்:—அஃதெப்படிக் கண்டாய்? வெகு நன்றாயிருக்கின்றதே!

சுகுமாரன்:—அவர்கள் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையிலிருந்து நான் அநுமானித்துக் கொண்டேன்.

சுந்தரானந்தன்:—அப்படியானல் எனக்கேன் தோன்றவில்லை?

சுகுமாரன்:—அஃதென்னையோ? யானறியேன். என் மனத்தில் தோன்றினதைச் சொன்னேன். அதைத்தவிர வேறில்லை.

சுந்தரானந்தன்:—ஆயின் அமையும். ஒவ்வொருவருந் தமது மனத்தில் தமக்கு வேண்டியனவற்றையெல்லாம் நினைத்துக்கொள்ளலாம்.—ஆயினும் எனக்குத் தோன்றுகிற மட்டில் அந்த மூன்றுபெண்களும் நாம் நேற்றைப்பேசிக்கொண்டிருந்த சங்கதிகளை யொளித்துக் கேட்டிருப்பார்களோ வென்பது தோன்றுகின்றது. ஏனென்றால் என்னைக்குறித்த ரூபாவதி 'நேற்று மூர்ச்சை போய் விழுந்தானே, அவனு?' என்று கேட்டாள்.

சுகுமாரன்:—ஆனல் வெகு நல்லதாயிற்றே!

சுந்தரானந்தன்:—அஃதெப்படி யப்பா?

சுகுமாரன்:—உன் பேரில் இரக்கங்கொண்டு ஒரு வேளை தன் தகப்பனரைக்கேட்டு உன்னைச் சிறைச்சாலையினின்றும் விட்டுவிடச் சொல்லக்கூடும். அதனலேதான் நல்லதென்றேன்.

சுந்தரானந்தன்:—அப்படித்தான் அவள் செய்வாளென்பதென்னை? ஒருவேளை யென்னுடைய சங்கதிகளை யெல்லாந் தன் தகப்பனரிடஞ் சொல்லி யென்னை யின்னும் அதிக

மான துன்பங்களுக்கு என் உட்படுத்தமாட்டாள்? அப்படிச் செய்தாலுஞ் செய்யக்கூடுமே!

சுகுமாரன்:—நான் அவளைப்பற்றிக் கேள்விப்பட்ட மட்டில் அவள் நல்லவளே என்பது தோன்றுகின்றது. ஆகையால் நீ நினைக்கிறபடி அவள் செய்யமாட்டாள் என்பதற்கு ஆக்ஷேபமே யில்லை.

சுந்தராநந்தன்:—அப்படியானால் என் ஆலவாய்த் தேவனையான் பாடித்துதித்தது பலித்துவிட்டதென்று சொல்லலாம். அப்பா! அதோ! அங்கே வருகின்றான் சந்திரமுகன்.

[சந்திரமுகன் வருகின்றான்.]

சுகுமாரன்:—எங்கே?

சந்திரமுகன்:—வந்தனம் சுந்தராநந்தா!

சுகுமாரன்:—ஏன், சந்திரமுகா! உன்னை எவ்வளவு காலம் எதிர்பார்த்துக்கொண்டிருப்போமென்று நினைத்தாய்?

சந்திரமுகன்:—நான் உன் வீட்டிற்போய் உன்னைத் தேடினேன். அவ்விடத்திலே நீ யில்லாமையால் இங்கேதான் வந்திருப்பாயென்று நினைத்து வந்தேன். அதுதான் நாழிகை யாய்விட்டது. அக்குற்றத்தைப் பொறுப்பீர்களென்று நினைக்கின்றேன். மேலும் நான் தாமதித்து வந்ததற்கு வேறு காரணமும் உண்டு. அஃதென்னென்றால்: என்னுடைய தந்தையார் என்னை யழைத்து இரகசிய சமாசார மொன்றுசொல்லி, அதைப்பற்றி உன்னிடத்தில் தெரிவிக்கும்படி ஆணையிட்டனுப்பினார்.

சுந்தராநந்தன்:—அஃதென்னை அப்படி யிரகசியமான சமாசாரம்?

**சுகுமாரன்:**—ஓ! சுந்தராநந்தா! நீ யெண்ணியபடி, சந்திரமுகனும் ஏதோ விசேஷ சமாசாரம் கொண்டுவந்திருக்கின்றனே!

**சுந்தராநந்தன்:**—அப்படி யல்லாவிட்டால் அவன் காலகரணம் செய்யக் காரணமில்லையே! சரி, சந்திரமுகா! சமாசார மின்னதென்று சொல். கேட்போம்.

**சந்திரமுகன்:**—இன்று என்னுடைய வீட்டில் இரண்டுமூன்று கனவான்கள் வந்து என்னுடைய தந்தையாரோடு சிலவற்றைக் குறித்துப் பேசினார்களாம். அவை யென்னவென்றால்: உன்னை இச்சூரசேநன் சிறையிலடைத்திருப்பதும், உன் பெற்றோரை வல்லியம் பலதிரி வனத்துத் துரத்தியதும், நியாயமல்ல வென்பதும் இவ்வித அநியாயத்தை நிறுத்துவதற்குத் தக்க யுக்திகள் யாவையோ அவற்றின்நாடி முயற்சிசெய்யவேண்டுமென்பதுமேயாம். இது விஷயத்தில் உன் யோசனை யென்னவென்று என் தந்தையார் கேட்டுவரும்படி என்னிடஞ் சொன்னார்.

**சுந்தராநந்தன்:**—அக்கனவான்கள் எண்ணிய யோசனைகளெல்லாம் நல்லனவேயாம். ஆயினும் சூரசேநன் என்னையும் என் பெற்றோரையும் கொலைக்களம் படாது விட்டிருத்தலே பேருதவியாம். ஆகவே யித்தன்மையான உபகாரிக்கு விரோதமாக ஏதேனுஞ் செய்ய முயலுதல் செய்ந்நன்றி கோறலாம்.

* "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (௩௦)

என்று திருவள்ளுவனார் கூறியிருத்தலைப் பலமுறையும் நமது ஆசிரியர் வித்தியாசாகரப் புலவர் எடுத்துரைத்

* திருக்குறள்

திருக்கின்றனரே! அஃதுணர்ந்திருந்தும் நீ யிவ்வாறு கூறுதல் நீதியாகுமோ?

சுகுமாரன்:—அப்பா! சுந்தராநந்தா! நீ கூறுவது மிகவும் நன்று! நன்று! இந்த மகாவஞ்சகன் சூரசேநன் விஷயத்தில் நீதியென்பதே பார்த்த லொண்ணாது. திருவள்ளுவனார் கூறுவனவெல்லாம் நல்லொழுக்க முடையவர் கட்கேயாம். தீயொழுக்க முடையவர்கட்கு நீதியேது? நியாயமேது? தருமமேது?

சுந்தராநந்தன்:—ஓ, சுகுமாரா! நான் சொல்லியதை மறந்துவிட்டு நீ யிவ்வாறு கூறலாமோ? சூரசேநன் தருமசிந்தையுடையவன் என்பதற்கு ஆக்ஷேபமுமுண்டோ? என்னைக் கொல்லாது விட்டிருப்பதே அவனுடைய நல்ல மனத்திற்குத் தக்கசான்று பகரும்.

சுகுமாரன்:—கொல்லுவது பாவம், ஆகவே கொல்லாமை பாவமில்லையே யன்றி அது புண்ணியமாகுமோ? இங்ஙனங் கொல்லா திருத்தலோடு ஒருவன் எதைக் கொல்லாதிருக்கின்றானோ அதற்குஉதவியும் நன்மையுஞ் செய்வானானால் அது புண்ணியமாம். மற்றைப்படி கொல்லா திருத்தல் ஒருநாளும் புண்ணிய மாகாது.

சுந்தராநந்தன்:—ஓ, சுகுமாரா! இன்னுங் கேட்பாய்! என்னைக் கொல்லா திருத்தலேயன்றி யென்னைச் சிறைச்சாலையினின்றும் வெளியே போயுலாவுதற்கும் எனது அருமை நண்பர்களாகிய உங்களுடன் பேசிக்களிப்பதற்கும் உத்தரவு கொடுத்திருத்தல் உனக்குத் தெரியாதோ?

சந்திரமுகன்:—(தனக்குள்) நடுவில் நாமொன்றுஞ் சொல்லக் கூடாது.

**சுகுமாரன்:**—இன்னொருவிஷய முனக்குத் தெரியாதே! இந்தக் கொலைஞன் உன்னைச் சிறைச்சாலையிலே யிடவேண்டுமென்றும், வெளியேபோக விடக்கூடாதென்றும், சொல்லித்தான் முதல்முதலில் உத்தரவு செய்தானும். பிறகு என்னுடைய மாமனர் சுசீலர் அரசனை நோக்கி 'நீர் அப்படிச் செய்வீராஞல் ஜனங்கள் உம்மைக் கொடியவரென்று நினைக்கக்கூடும்' என்று சொன்னதைக் கேட்டபிற்பாடு தான் இப்படிக் கட்டளை யிட்டானும்.

**சுந்தராநந்தன்:**—இருக்கட்டும். எல்லாவற்றிற்கும் சந்திரமுகனை முற்றிலுங் கேட்போம். என் சந்திரமுகா! அரசன் கொடுமையை நிறுத்துவதற்கு அக்கனவான்கள் ஏதேனும் யுக்தி செய்திருக்கின்றார்களாமோ?

**சந்திரமுகன்:**—ஆம். அப்படித்தான் சொன்னர். அஃதென்னென்றல்: ஒரு கனவான் அரசன் வீதியில் உலாவரும்போது அவனைக் குத்திப் போடுவதாகச் சொன்னாராம். மற்றைக் கனவான்களும், அது சரியென்று அநுமோதித்தார்களாம். ஆனல், என் தந்தையார் மாத்திரம் பதறக்கூடாதென்றும், இதைக்குறித்து இன்னும் யோசனை செய்ய வேண்டுமென்றும் சொன்னாராம். இதை யொருவர் ஒத்துக்கொண்டாராம். மற்றை யிருவரும் ஒத்துக்கொள்ளவில்லையாம். அதன்பேரில் இதைக்குறித்து உன்னிடத்தில் தெரியப்படுத்தி, இதற்கு நீ யென்ன சொல்லுகின்றயோ அதன்படி நடப்பதாக எல்லாரும் தீர்மானித்தார்களாம். அவ்வளவுதான். நீ யென்ன சொல்லச் சொல்லுகின்றயோ அதை யென் தந்தையாரிடஞ் சொல்லுகின்றேன்.

**சுந்தராநந்தன்:**—ஏதப்பா! மிக விந்தையா யிருக்கின்றதே! ஒன்றும் பயன்படும் யுக்தியாய்க் காணப்படவில்லையே! இதைக் குறித்துச் சொல்லுவதற்கு எனக் கொன்றுந் தோன்றவில்லை. ஆகையால் உன் தந்தையார் நயவசந ரிடம் என் வந்தனங்களைச் சொல்லி அவர் இஷ்டம் எப் படியோ அப்படியே நடக்கும்படி சொன்னேன் என்று சொல்லு, சந்திரமுகா!

**சுகுமாரன்:**—சரி. அப்புறம் சந்திரமுகா! உனக்குத் தெரியாதே யொரு சங்கதி! நேற்றுச் சுந்தராநந்தன் மூர்ச்சைபோய் விழுந்தது முதல் நாம் பேசிக்கொண்ட சமாசாரமெல்லா வற்றையும் அரசன் புத்திரி ரூபாவதி, என்மாமா பெண் அம்புஜாட்சி, கநகமாலை யிந்த மூன்று பேரும் ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். நாம் அதைப்பார்க் கவில்லை. இன்றைக்கு நானும் சுந்தராநந்தனும் அவர் கள் பேசிக் கொண்டதை யொளித்திருந்து கேட்டோம். அதுதான் எங்களுக்குத் தெரியும்.

**சந்திரமுகன்:**—அப்படியா! அதெப்படிக் கேட்டார்களப்பா! ஆச்சரியமாயிருக்கின்றதே!

**சுகுமாரன்:**—அதென்னவோ! தெரியாதப்பா! வேடிக்கை தான்!

**சுந்தராநந்தன்:**—என் சந்திரமுகா! அவர்கள் கேட்டதனாலே ஏதாவது கெடுதல் வருமோ? நான் அரசனைக் கொஞ் சம் வருத்தத்தினால் வைதேனே!

**சுகுமாரன்:**—நான்தான் சொன்னேனே! நல்லதே யொழியக் கெடுதலில்லை. ரூபாவதிதான் அதிக இரக்கமுள்ளவளே!

**சந்திரமுகன்:**—ஆமாம்! எனக்கும் அப்படித்தான் தோன்று கின்றது. அவள் அழகுக்கெல்லையும் அன்புக்காகரமு மாவளே!

சுந்தராநந்தன்:—அப்படியாயின் நல்லதுதான். நீங்கள் சொல்லுகிறதும், நான் சொல்லுகிறதுமெல்லாம் இனிமேல் தெரியும்.

சுகுமாரன்:—இது நூற்றிலொருபேச்சு! பார்ப்பமே!

[யாவரும் போகின்றனர்.]

## இரண்டாங்களம்

இடம்:—இராசபுத்திரியின் கன்னிமாடம்

காலம்:—நள்ளிரவு

பாத்திரம்:—ரூபாவதி

[அம்புஜாட்சி யொருபுறம் துயில்புரிகின்முள்.]

ரூபாவதி:—(தனக்குள்) அழகும் இன்பமும் அன்பும் நிறைந்த சுந்தராநந்தனே! சுந்தராநந்தனே! இக்குணங்கள் உன்னிடத்தில் இருப்பதை அறிந்து தானே உன்னை யுன் பெற்றோர்கள் 'சுந்தராநந்தன்' என்று அழைத்தார்கள்? ஐயோ! உன்னுடையமலர்ந்தவதனத்தையும் மதுரவசனத்தையுங் கண்டுங் கேட்டும் ஆனந்தப்படுவது என்றைக்கோ என்றைக்கோ என்று நான் உன்னை நினைத்து ஏங்குவதை நீ யறியாயோ? என் தகப்பனுர் உன்னைச் சிறையிலிட்டிருப்பதனுல் வருந்துகின்றுயோ? என் தகப்பனுர் கொடியவராயிருத்தல் பற்றி நானுங் கொடியவளா யிருப்பேனென்று எண்ணுவாயோ? அந்தோ! அரசமரத்தைப் பிடித்த சனியன் அதன்கண் அமர்ந்த பிள்ளையாரையும் பிடித்ததாமென்று உலகோர் கூறும் வசனம் போல அவர் கொடுமை என்னிடத்தும் இருக்குமென்று சந்தேகிப்பாயோ? உன்னை முதல்முதலிற் கண்டதுதொட்டு என்மனம்

என்னிடத்திலேயே யிராமல் உன் முகாரவிந்தத்தையே பார்த்துத் தன்னையும் என்னையும் மறந்து மயங்கிநிற்கின்றது கண்டிலேயோ? அச்சோ! சுந்தரனே! ஆனந்தனே! சுந்தராநந்தனே! உன் முகமதியின் அமிர்தத்தை யுண்டு உயிர் தரிப்ப தென்நாளோ?—(மௌனம்) ஓ! சகோரங்களே! நீவிரெல்லாம் சந்திர கிரணங்களைக் களிப்புடனுண்டு செருக்கித் திரிகின்றீர்களே! உமக்குள் என்னைப் போல ஆற்றாது ஏங்கியிரங்குவா ரில்லையோ? அம்மவோ! மன்மதன் குயிற்காள மூதுகின்றானே! இனி யெங்ஙன மோடி யொளிப்பேன்? இந்தப்பாவி மன்மதன் உருவிலியாயிருக்கும் போதே அரிவையர்களை இப்பாடு படுத்துகின்றானே! உருவோடு கூடியிருப்பானாயின் என்போலியர் பிழைத்தலுங் கூடுமோ? அப்பவோ! இன்று மாலை என்னுயிர் நிலையாகிய சுந்தராநந்த மூர்த்தியைத் தரிசிக்கும் எண்ணத்தோடு போயினேனே! அப்படிப் போயும் எனதருமைத் தலைவனை மறுபடியுங் காண்டற்கில்லாது போயிற்றே! போயிற்றே!! இனியென்ன செய்வேன்? எவ்விதமாறுவேன்? நான் பூங்காவனத்தி லிருந்தபோது என்னுடைய தோழியரேனும் இன்னுஞ்சிறிது அதிக நேரங் கழித்து வந்தாரில்லையே!—(மௌனம்) ஓ! மாதவி மரமே! நீசெய்த புண்ணியம் நான் செய்திலேனே! நீயுன்னடியில் என் பிரியநாயகனை வைத்திருந்தனையே! யான் அவனை யிப்போது காணப் பெறுவேனேல் அவனை என்தலையில் வைத்துக் கொண்டன்றோ களிக்கூத்தாடுவேன்!—(மௌனம்) ஓ! கண்காள்! நீவிரேனு மொருமுறை யெனது தலைவனைத் தரிசித்தீர்! செவிகாள்! நீவிர் ஒருதரம் அவன் பேசக் கேட்டீர்! ஆதலின் நீவிர் பாக்

கியவான்களே யாவீர்! உங்கள் பாக்கியம் எனது மற்றைப் பொறிகளுக்குங் கிடைக்கவில்லையே! அவை நம் மாட்டுப் பொறாமையாற் புழுங்கி யேங்குகின்றனவே! யானே யிவ்வாறு வருந்தா நிற்க, அவற்றை ஆற்றுவார் யாவர்? ஐயவோ! கருணையில்லாக்காமனும் இருள்யானை முன்னெனித் தென்றலெனுந் தேமேறிப் போர்க்களத்துப் புக்கனனே!

என்றனது காதலனே யிவ்விடத்து வாராயோ
மன்றவே யென்றுயர மாற்றாயோ—குன்றனைய
தோளுடைய கோமகனே சுந்தரா நந்தவெழிற்
காளையே யென்னிலைமை கண்டு. (௩௧)

மாரன் மலர்க்கணை மார்பினிற் பாய்ந்து மயங்கியிந்த
நேர முனையே நினைந்துநொந் தேனென்ற னீளளக
பாரம் பொறுத்தில னென்செய்வ லென்பாற் பரிவினொடும்
பூரண வன்புறு சுந்தரா நந்தப் புரவலனே. (௩௨)

அம்புஜாட்சி:—(கண் விழித்துக்கொண்டு) என்ன? அம்மா! ரூபாவதி! நீயங்கே நிலாமுற்றத்தில் என்ன செய்துகொண்டிருக்கின்றாய்?

ரூபாவதி:—அம்புஜாட்சி! நீ யென்ன படுத்துக்கொண்டவுடனே யுறங்கிவிட்டனையே! எனக்கு இதுவரைக்குந் தூக்கமே வரவில்லை. நான் தூக்கம் வருகிறதற்காக எவ்வளவோ முயன்று பார்த்தும் வரவில்லை. அஃதிருக்கட்டும்.

(அம்புஜாட்சி யெழுகின்றாள்.)

அம்புஜாட்சி! அதோ! பார்த்தாயா? வையை யாற்றின் கண் வெள்ளம் போகின்றது!

அம்புஜாட்சி:—ஆமாம். நாம் பொழுதுவிடிந்ததும் புதுப்புனலாடக் கநகமாலையையுங் கூட்டிக்கொண்டு மற்றைத் தோழிமாரோடும் போவோம்.

ரூபாவதி:—புதுப்புனலாடுத லிருக்கட்டும். மற்றைப்படி நீயந்த நதியைப் பார்! சந்திர கிரணங்கள் தண்ணீரிற் படுவத னாலே அது பளபளவென்று மின்னுகின்றது! எங்கே! அம்புஜாட்சி! நீ வித்தியாசாகரப் புலவர் செய்தனவெ ன்று சில யாற்றுவரிப் பாட்டுக்கள் பாடுவாயே! அவற்றி லொன்றுபாடு. கேட்போம்.

அமபுஜாட்சி:—(பாடுகின்றாள்)

### மா ற் று வ ரி

இன்ப வனைப்பு மிகவுடையா னினிது செங்கோ லதுவோச்சத்
துன்ப மொழித லுண்டுகொலோ சொல்வாய் வாழி வையையே
துன்ப மொழித லுண்டுகொலோ சொல்லா தொழித றுடியிடையா
யன்பி லாமை யென்றன்றோ வறிவேன் வாழி வையையே. (௩௩)

ரூபாவதி! நீயும் ஏதாவது வேறு வரிப்பாட்டுப்பாடு.

ரூபாவதி:—(பாடுகின்றாள்)

### மு ரி வ ரி

ஒழுகுறு நிணமுடைய வொருதனி வேலவனு
முழுமதி யுறழ்முகனு முகமலர் வுடனுறையப்
பழுதறு தமிழ்மொழியா லழுதனே புரியுமெனே
யெழிலுறு மினியவனே யெவனிடர் செய்தனேயே. (௩௪)

### சா ய ல் வ ரி

சோலை தன்னிற் றனியுற் றேங்கி
மாலை வருந்திச் சென்றா ளொருவன்
மாலை வருந்திச் சென்றா னவனென்
மாலு மனம்விட் டகல்வா னல்லன். (௩௫)

### நி லை வ ரி

வனப்புடையா னின்புடையான் வழுதியர்தங் கோமான்
மனத்தினிலே நோய்விளைத்தான் மாரனே காணீர்

மாரனோ காணீர் வளமதுரை யிற்றென்றற்
றேரினையே நீங்கித் திரிகின்ற காவலனே. (௩௧)

அந்தோ! படுக்கையறையை விட்டுவந்து வெகுநேரமாய் விட்டதே! அம்புஜாட்சீ! செவிலித்தாய் வந்து நம் படுக்கை வேறுவிதமாயிருப்பதைப் பார்த்தால் என்ன சொல்வாளோ? இனி யிவ்விடத்திலிருக்கப்படாது.

[இருவரும் போகின்றனர்.]

---

## மூன்றுங்களம்

இடம்:—சிறைச்சாலை

காலம்:—நள்ளிரவு

பாத்திரம்:—சுந்தராநந்தன்

சுந்தராநந்தன்:—என்னுடைய தந்தையுந் தாயும் இந்நேரம் எங்கிருக்கிறார்களோ? இப்போதிரவாயிற்றே! இரவில் தீயவிலங்குகள் வனத்தி லுலாவுமே! அவற்றினின்றும் அவர்கள் எவ்வாறு தப்பினரோ? அவர்கள் உயிரோடிருந்தாலன்றோ சகலமும் இனிமையாய் முடியும்? இல்லையாயின் இன்பமென்பதேது? வாழ்க்கையென்பதேது?—(மௌனம்) இன்று நயவசநர் தமது புத்திரன் சந்திரமுகன் மூலமாய்ச்சொல்லி யனுப்பிய விஷயம் மிகப்பயங்கரமா யிருக்கின்றதே! நயவசநர் வெகுநாளை யநுபவமுள்ளவராதலின் அவ்விஷயத்தில் அவரது இஷ்டப்படியே அவர்செய்யட்டும்! யான் இந்தக் காரியங்களிலெல்லாந் தலையிடுதல் மதியீனமேயாம்.—எல்லாவற்றிற்கும் நாளைப் பூஞ்சோலைக்கண்— 'பூஞ்சோலை' யென்றவுடன் என்மனம் பூரிக்கின்றதே! உடல்சிலிர்க்கின்றதே! ஆ! ரூபா

வதி! ரூபாவதி! உன்னைப் பார்த்தது முதல் யான் புதுமை யானதோர் மனோவிகாரத்தை யடைந்தேன்! அதையென் னென்று எடுத்துரைப்பேன்? நீ அழகினுக்கு எல்லையா யுள்ளனை யென்பதுபற்றி 'ரூபாவதி' என்று நினக்குப் பெயரிட்டார்கள்போலும்! ஓ! நல்லெழில் பெற்ற நங்கை நாயகமே! அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடியென்று சிறப்பித்துச் சொல்லப்படும் ஆடவர்குணம்நான்கும்புன லோடுவழிப் புற்சாய்ந்தாற்போல நின்னைக்கண்டவுடன் சாய்ந்துவிட்டன! நின்னைக் காண்டலும் காமுற்றேன்! அது முதல்யான் நின்னையின்றியமையாதவனாயினேன்! அங்ஙனம் உன்னை யின்றியமையாதுநின்ற வேட்கையா னது எனது எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசுபோலவும், நீர்வழி மிதவைபோலவும் என்னை யீழாநின்றது! நீயும் என்மீது காதல் கொண் டிருக்கின்றாய் யென்று நம்புவதற்குச் சிறிது இடமுளது. ஆயினும் அதனை யான் எவ்வாறு நிச்சயமாய் நம்பு வலோ? நீ யுன் பாங்கிமாருடன் பேசிக்கொண்டதி லிருந்தும் உனக்கு என்மீதிற் சிறிது இயற்கை யன்புள தென்று கண்டுகொண்டேன். அதுபற்றி யான் உன் னிடத்தில் எவ்வாறு காதல் கூறுவேன்? ஐயோ! யான் உன்னை யென்னுயிர்த் துணையாய்ப்பெற நினைப்பது முடவன் கொம்புத்தேனை யிச்சித்து அதனை யவன்பெற நினைப்பது போலும்! உன் தந்தையோ என்னை எப் பொழுது கொலைக்களம் படுக்கலா மென்று யோசியா நிற்கின்றான்! யானோ உன்னைக் கைப்பிடித்து எனது தலைவியாய்க் கொள்வது எப்படியோ என்று யோசியா நிற்கின்றேன்! யான் உன்னை யெனது பிராணநாயகி

யாய்ப் பெறவேண்டு மென்றாற் சுந்தரமூர்த்தி நாயனார் பரவைநாச்சியாரைப் பெற்றது போலத் தான் பெற வேண்டும்! வேறு வகையில்லை. தெய்வந்தா னுதவி செய்ய வேண்டும் இவ்விஷயத்தில். (மௌனம்)

[பாடுகின்றான்]

(2) இராகம் - செஞ்சுருட்டி. தாளம் - ஆதி

**பல்லவி**

உன்னையெ ணுயகி யாயுற லாகுமோ
உத்தம மானரூ பாவதித் தையலே.

**சரணங்கள்**

பன்னரு மின்னலப் பரவையி லேகளி
துன்னி யிருந்தியான் துளைதலுங் கூடுமோ (உன்னை)

ஆனந்த வல்லியே யன்புட னேநின்கண்
மானெந்த நாளினில் வாவுமென் மாமதி (உன்னை.

சுந்தரநாரியே தூயநி ணுனை
சந்திர காந்தியி லென்மன மலரவே (உன்னை)

காந்தனே மானுநின் கையினைப் பற்றியே
மாந்தளிர் மேனியாய் மகிழ்வதெக் காலமோ (உன்னை)

ஓ! எண்டுள்ள பொருள்கள் யாவும் நீயாய்ப் பரிணமித்துத் தோன்றுகின்றனவே! இதோ நின் கொண்டலைத் தண்டலையை வென்ற பூங்கூந்தல் தோன்றுகின்றது! அதோ நின் கூன்பிறைநுதலும், குமிழை நிகர் துண்டமுந் தோன்றுகின்றன! ஆண்டு அவள் கூர்மைதரு வேலை வாளை வண்டை மகரத்தை நிகர் மையெழுது விழிகள் காணப்படுகின்றனவே! (பாடுகின்றான்)

திணைநிலைவர்

புண்கொண்ட வேலினுயிர் போக்குவா னுன்றந்தை
கண்கொண்ட வேலினுயிர் போக்குவை மன்னியும்
பண்கொண்ட சொல்லுடையாய் பார வளகத்தா
லெண்கொண்ட நொய்ய விடையிழவல் கண்டாய்! (௫௭)

ஈண்டு மாதுளம்பூவை வென்று வாகான கொவ்வைப் பழத்தினை வெளுக்கவே வைத்த தன்னிதழ் காட்டி யென் மாதுளங் கவராநின்றாள்! முத்தையு முருந்தினையு முனிகின்ற நின்மூரல் இவ்வெளியினிற் காண்பதென்னே! குயிற்றிரளை யோட்டிய நின் கோமளமொழி யீதோ என்செவியிற் படாநின்றதே! அந்தோ! இவை யெல்லாம் பொய்த்தோற்றங்களாமே! என்செய்வேன்? உடல் வெதும்புகின்றதே! ஐயோ! சற்று வெளியேறித் தண்மதியின் குளிர்ச்சியையும், நறுந்தென்றற் குளிர்ச்சியையும் அநுபவிக்கலாமென்றாற் கதவடைத்துத் தாழிட்டிருக்கின்றதே! எங்ஙனம் எனது வெம்மை யாறுவேன்?—(மௌனம்)

[பாடுகின்றான்]

மந்தநகை மானே வனப்பே வடிவெடுத்து
வந்தவொரு ரூபா வதியேநின்—சந்தமுறு
பொன்மேனி கண்டு புதியவிறும் பூதுகொண்டேன்
கன்மானு நெஞ்சக் படுங்காம—னென்மீது
வெய்ய மலர்க்கணைகள் விட்டென்னைக் காயவொட்டா
துய்யும் வழியே துரை. (௫௮)

பூமக ளேமலர் வீட்டினை நீத்திவண் போந்தனைய
மாமக ளேவளச் சேரநா டாளும் வருமர்தங்கள்

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

கோமகளேநின் னெழிலுருவத்தைக் குறித்துளைந்தேன்
பாமகளேயென்று பற்றப் பெறுவலுன் பாணிகளே. (௫௧)

[ஆண்டுப்பறந்துபோந்த சகோரத்தை நோக்கி]

### முகமில்வரி

வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம்
வார முடையாட்கென் னைய லுரைத்திலையால்
வாரல் சகோரமே வாரலை யென்மாடம். (௪௦)

யான் இவ்வாறே யேங்கிப் புலம்பிக்கொண்டிருப்பேனாயின் காவலாளர் விழித்துக்கொண்டு என்னை வைவார்களே! என் செய்வேன்? இதுவுமென் தலைவிதியோ! தெய்வமே! இதற்கு முன் யான் சிறைச்சாலையிலிருப்பதை ஒரு பொருட்டா யெண்ணிலேன்; என்னைப் பெற்றோரது பிரிவையே நினைத்து வாடினேன். இப்பொழுதோ, சிறைச்சாலை சிறைச்சாலையேயாய்விட்டது! பெற்றோர் பிரிவேயன்றி அரசன் மகள் ரூபாவதியின் ஆசையும் என்னை வருத்துகின்றதுவே!—(மௌனம்) ஓ! ஏதோ சப்தம் கேட்கின்றதே! காவலாளர் துயிலொழிந்தார்களோ? இனிமேல் இங்கேயிருப்பது தகுதியன்று.

[சுந்தரானந்தன் போகின்றான்.]

## இரண்டாம் அங்கம் முற்றிற்று

# அங்கம் - ௩

—(*)—

## முதற்களம்

இடம்:—பாண்டியனரண்மனை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—சூரசேநனும் சுசீலனும்

சூரசேநன்:—சுசீலரே! நாம் அன்று பேசிக்கொண்டதற்கு நேர்விரோதமாக இன்றைக்கு ஒன்று கேள்விப்பட்டோம். அது முதல் என்னவோ எமது மனம் வருத்தப்படுகின்றது.

சுசீலன்:—அப்படி மகாராஜா அவர்கள் வருத்தப்படும்படியான விஷயமெதுவும் சம்பவித்ததாகத் தோன்றவில்லையே!

சூரசேநன்:—நாம் காட்டில் துரத்திய அவ்விருவரும் புலி முதலிய மிருகங்கட்கு இரையாய் விடுவரே யல்லாமற் பிழைக்க மாட்டா ரென்றன்றோ நினைத்தோம்? அப்படியிருக்க, இன்று நம்முடைய ஒற்றர் வந்து அவர்கள் இருவரும் சோழநாட்டி லிருப்பதாகச் சொல்லுகின்றார்கள்! அவர்கள் எப்படிப் போயிருக்கக் கூடுமோ? தெரியவில்லை. இந்த விஷயம் காதிற் பட்டது முதல் எமக்குக் கவற்சி பெரிதாயிற்று. சுசீலரே! இதற்கு என்ன செய்யலாம்? நன்றாய் ஆராய்ந்து சொல்லுமின்!

சுசீலன்:—மகாராஜா அவர்கள் இவ்வற்ப விஷயங்களுக் கெல்லாம் கவற்சியடைவானேன்? தாங்கள் யாருக்கு அஞ்சவேண்டும்? எதற்குப் பயப்படவேண்டும்? சற்குணவழுதி

யும் சுந்தரியாரும் பிழைத்துத் தாம் இருக்கின்றார்களோ என்பதே முதல் முதலிற் சந்தேகம். அப்படியேயவர்கள் பிழைத்திருந்தால் தான் என்ன? அன்றியவர்கள் சோழ நாட்டில் வீரேந்திரசோழ னுதவிபெற்றால்தான் என்ன? நமக்குப் பயமா? நாம் எப்பொழுதும் பயப்பட வேண்டுவதே யில்லை.

சேவகன்:—(அரண்மனை வாயிலிலிருந்து) ஓய்! நீர் யார்?

புலவர்:—நாம்தான் மகாவித்துவான் வித்தியாசாகரப் புலவர். அரசன்மீது கவிபாடிப்போந்துளம். இதனை யிறைவனிடந் தெரித்தி.

சேவகன்:—ஏ! புலவர்! ராசாவுக்குத் தெரியப்படுத்தினு நமக்கு என்ன கொடுப்பிய?

புலவர்:—எமக்கு மன்னவர் பெருமான் மகிழ்சிறந்து அளியாநிற்கும் பரிசில் நான்கிலொன்றீகுதும். பெறுதி!

சேவகன்:—ஏ! புலவர்! அதென்ன? பெறுதி! பகுதி! விகுதி! அதெல்லாம் இங்கே நம்மிடத்திலே இலக்கணம் படிக்காதேயும்! சொல்லும் நேரே! எவ்வளவு கொடுப்பீர்?

புலவர்:—அதுதான் நாலிலொன்று தருவோம் என்று அப்பொழுதே சொன்னோமே! தெரியவில்லையோ?

சேவகன்:—சரி. புலவர்! மோசம் செய்யக்கூடாது. பார்த்துக்கொள்ளும். பத்திரம்!

[சேவகன் உள்ளே போகின்றான்.]

புலவர்:—சரிதான், போ. (தனக்குள்) எந்தப் பெரிய மனுஷன் வீட்டிலும் இந்த மாதிரி சிற்சில சேவக நாய்களிருந்து கொண்டு எம்போலியரைக் காண்டலுங் குரைத்து வெள்ளென்று மேலேவிழத் தலைப்படுகின்றன!

(பாடுகின்றார்)

வேலை யின்றிப்பல் வீதி தொறுந்திரி
சீல முள்ளவிச் சேவகர் காவல்செய்
வேலை பெற்றுயி மேன்மைபெற் றேமெனுச்
சால வுந்தம தன்மை திரிதலென்? (௩௪)

சீ! இவ்வரசன் என்னமோ! மகா காவல் வைத்திருக்கின்றான்! முன்னிருந்த வள்ளல் சற்குணவழுதி யாம் எப்பொழுதும் தாராளமாய் அரண்மனைக்குட் போகலாம் என்று உத்தரவு செய்திருந்தான்!—இவனுக்கு நம்மை யின்னுந் தெரியாதே! தெரிந்தால் இவனும் அவ்வாறு உத்தரவு செய்யக்கூடும்.

சேவகன்:—மகராசா அவகளுக்கு ஆயிரங்கோடி வந்தனம்.

சூரசேநன்:—அடா! சேவகா! என்ன சங்கதி? சீக்கிரமாய்ச் சொல்லடா.

சேவகன்:—மகராசா அவகளிடத்தில் யாரோ மகா வித்துவானும், வித்தியாசாகரப் புலவராம். அவர் வந்திருக்கிறார். இது விஷயம் சமுகத்திற்குத் தெரியப்படுத்தினேன்.

சுசீலன்:—ஏ! சேவகா! நீபோய் அவரை உள்ளே வரச்சொல்.

[சேவகன் வெளியே போகின்றான்.]

தாங்கள் இதைக்குறித்து ஒன்றும் இப்பொழுது யோசனை செய்யவேண்டுவதே யில்லை. அப்புறம் வேண்டுமென்றுற் பேசிக்கொள்ளலாம்.

சேவகன்:—ஏ! புலவர்! போம்! வரச்சொல்லி மகராசா உத்தரவு செய்திட்டார். சொன்னதை மறந்திடாதேயும்! பத்திரம்!

[புலவர் உள்ளே போகின்றார்.]

புலவர்:—சுகபோக சுகுண மன்மதரூப மகாராஜ சூரசேநவர்வர்மர் சமுகத்திற்கு அடியேம் ககன பூதண்டவேதண்ட

பிரமாண்ட மெங்கணுங் கனபுகழ்படைத்த வுரவேம்
இமயமுத லீழம்வரை யிவர்க்குநிகரெவருமிலே யென்று
சொலப்பெற்ற தகையேம் கவிமதக்குஞ்சரங் கல்விக்
களஞ்சியம் ஆதல்பற்றி வித்தியாசாகரப் புலவரெனு
மேலான வபிதான முடையராவேம் வந்தனந் தந்தனம்
நுந்தனம் பெற்றேகவே!

சூரசேநன்:—ஏ! புலவரே! என்ன மடமடவென்று உம்பாட்டிற்கு அடித்துக்கொண்டு போகிறீரே!

புலவர்:—என்ன! மகாராஜா அவர்கள் உத்தரவு தெரியவில்லையே! எமது பாட்டிற்காக எம்மை யடிக்கிறதா? தெரியாது வந்துவிட்டேன்! மகாராஜாவே! பொறுத்தருளவேண்டும்! பொறுத்தருளவேண்டும்! (நடுங்குகின்றார்)

சுசீலன்:—ஐய்! கத்தாதேயும்! சும்மா இரும்!—இவர் நல்லவித்துவான்! சமுகத்திலே பேசியது தெரியவில்லை. அதனாலேதான் இப்படிப் பேசினார்! வேறொன்று மில்லை.

சூரசேநன்:—எங்கே நாம் பாண்டியனோடு செய்த யுத்தத்தில் அடைந்த வெற்றியைப் பற்றிப் பாடிய கவியைச் சொல்லைச் சொல்லும் சுசீலரே! கேட்போம்.

சுசீலன்:—ஏ! புலவரே! பதறாமல், பயப்படாமல், தைரியமாய் வேகமாய்ச் சொல்லாமல், நிறுத்திச் சொல்லும், நீர் மகா ராஜா அவர்கள் பேரிற் செய்த கவியை.

புலவர்:—கொஞ்சம் கண் பார்த்துக் கொள்ளவேண்டும்!

சுசீலன்:—அவையெல்லாம் யோசியாதேயும்! கநகாபிஷேகம் செய்யச் சொல்லுகின்றேன். கவியைச் சொல்லும்.

புலவர்:—பள பளா! மிகவியந்தனம்!

சுசீலன்:—இதுதானே எமக்குக் கோபம் வருகின்றது! சொல்லுமென்றால் உடனே சொல்ல வேண்டாமா?

புலவர்:—இதோ சொல்லுகின்றோம். கேண்மின். (பாடுகின்றார்)

திருச்சிற்றம்பலம்

நிம்பமலர் மாலையை மிலைச்சுசற் குணவழுதி
நிகரற்ற பாண்டிராச
னின்மகிமை யோராது மதிகெட் டெதிர்ப்பவவ
னிமிடத்தி னிற்றொலையவே
தும்பைமலர் வேய்ந்துயுத் தஞ்செய்து வென்றுசந்
தோடமுடன் வாகை மலருஞ்
சூடுநற் பாணர்நா டோறும்வந்து பாடிடத்
தோகையர்கள் வாழ்த்தெடுப்பச்
சம்பகங் கமழ்குழலி னோர்போக முறுமினிய
சந்தவடி வுள்ளசதுரா
சுகமெலாந் தனதாளு கைக்குட் படுத்திய
தனக்குவமை யெவருமில்லாய்
வெம்புறும் பெண்ணைய ந்தார்ச்சூர சேநனெனு
மகராச மகிபநீதான்
வரையாம லீந்துபொருண் மிடிதீர்த்து நீடூழி
மாட்சியுடன் வாழியவரோ. (சஉ)

திருச்சிற்றம்பலம்

சுசீலன்:—வித்தியாசாகரப் புலவரே! கவி வெகு நன்றாயிருக்கின்றது! எங்கே! கொஞ்சம் அர்த்தஞ் சொல்லும். கேட்போம்.

சூரசேநன்:—(தனக்குள்) அறியாது செய்துவிட்டோம். இவ்விடத்திலேயே வைத்திருந்து காரியத்தைப் பார்த்திருக்கவேண்டும். மிஞ்சிப்போயிற்று. இனிமே என்னசெய்கிறது? வருவது வந்து தானே தீரும்!

புலவர்:—வேப்பம் பூமாலையை யணிந்த சற்குணவழுதி நின்னுடைய மகிமையை அறியாது புந்தி கெட்டுப்போய் நின்

ளை யெதிர்த்த மாத்திரத்தில் அவன் ஒரு நிமிடத்திற்று ளே தோற்றுப் போகும்படி தும்பைப்பூமாலை யணிந்து போர் புரிந்து அவனை வென்று வாகைமாலை தரித்துப் பாணர்பாடத்தோகையர் வாழ்த்தச்சண்பகப்பூ வாசனை பொருந்திய கூந்தலையுடைய மாதர்களது போகநல மனு பவித்துப் பிரகாசிக்கின்ற அழகான ரூபமுள்ள நற்குண முடையவனே! பூலோக முழுவதுந் தன்னுடைய சக்கிராதிபத்தியத்திற்குக் கீழ்ப்படுத்தித் தனக்குச் சமான மானவ ரெவருமில்லாதவனே! மணநிறைந்த பனம்பூ மாலையைத் தரித்த சூரசேந வர்மன் என்ற திவ்ய திரு நாமத்தையுடைய மகாராஜ பூபதியே! எனக்கு அளவற்ற திரவியத்தைக் கொடுத்து எனது தரித்திரந் தரித்திரா வண்ணஞ் செய்து நீ நெடுங்காலம் சிறப்புடனே வாழ்வா யாக வென்பதாம் யாம் பாடிய செய்யுளின் பொருள்.

சூரசேநன்:—சுசீலரே! கவி வெகு நன்றாயிருக்கின்றதே! அர்த்தஞ் சொல்லிய பிறபாடன்றோ தெரிகின்றது. புலவரே! நீர் கேட்டுக் கொண்ட பிரகாரம் உம்முடைய தரித்திரம் நீங்கும்படி பதினாயிரம் வராகன் உமக்குக் கொடுக்கு மாறு உத்தரவு செய்திருக்கின்றோம். பெற்றுக்கொள் ளும். போம்.

புலவர்:—மிகவு வந்தனம். ஆயினும் நாம் புரிசைவாயில் காவலனுக்கு எமது பேற்றிற் கூறங்கு தருதுமெனச் சொல்லி யிருக்கின்றேம். அதனையுஞ் சேர்த்துக் கொடுக்கிய ஆணையிடின் மிகவும் நலமுடைத்தாமல். அல்லாக்கால் அப்பேதை மகன் எம்மை யதிகமான அரந்தைக்கு ஆளாக்குவான்காண்.

சுசீலன்:—போய் வாரும்! அப்படியே செய்யச் சொல்வோம்

[புலவர் போகின்றார்.]

தாங்களென்ன இவ்வாறு கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்? அப்படியே யிருந்தாலுந்தான் என்ன? எப்பொழுதும் யாம் யுத்தசந்நத்தராகவே யிருக்கின்றோமே! நமக்கென்ன?

சூரசேநன்:—நமக்கொன்று மில்லை யாயினும் எம்முடைய மனம் என்னவோ சாந்தப்படவில்லை. யாம் ஆதியிலேயே சாக்கிரதையா யிருந்திருக்க வேண்டும்.

[சேவகன் வருகின்றான்]

சேவகன்:—மந்திரியவர்களைக் கூட்டிப் போகும்படி அவர்கள் வீட்டிலேருந்து ஆள் வந்திருக்கிறான்.

சூரசேநன்:—ஏன்! சுசீலரே! உமது வீட்டிலேதேனும் நீர் செய்யவேண்டிய காரியமுண்டோ? நீர் போக வேண்டியது அவசியந் தானோ?

சுசீலன்:—ஆம். போக வேண்டும்.

சூரசேநன்:—ஆனாற் போய்வாரும். [சுசீலன் போகின்றான்.]

(தனக்குள்) சோழன் வீரேந்திர னென்பவன் அதிகமான சேநாபல முடையவனோ? இந்தச் சற்குணவழுதியின் பேச்சைக் கேட்டு நம்மீது படையெடுத்து வருவானோ? நாம் ஆதியாரம்பமுதல் இதுவரை செய்தனவெல்லாம் பிசகேயாம். இன்னுங் கொஞ்சம் யோசனை செய்யாமற் போனோம். இவ்வளவு மதிகேடரா யிருப்போமென்று எண்ணவே யில்லை. எமது மனம் ஒருநாளும் இவ்வாறு பதறினதில்லையே! இவ்வாறு பதறுவதைப் பார்த்தால் ஏதோ கேடு வரும்போலத் தோன்றுகின்றதே!—(மௌனம்) இருக்கட்டும். பாதகமில்லை. அப்

படியே வீரேந்திர சோழன் சற்குணவழுதிக்காகப் படையெடுத்து வருவானாயின், நாம் வழுதிமகன் சிறையிலிருப்பவனைத் தொலைத்துப் போடுவோம். அப்புறம் மேல் நடக்கப் போகிறதைப் பார்த்துக் கொள்வோம். காலமதிகமாயிற்று. இனி நாம் போகவேண்டும்.

[சூரசேநன் போகின்றான்.]

---

## இரண்டாங்களம்

---

இடம்:—கன்னிமாடம்

காலம்:—நள்ளிரவு

பாத்திரம்:—ரூபாவதி

ரூபாவதி:—(தனக்குள்) ஐயோ! இன்று என் தகப்பனார் எனது தாயுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டது முதல் என் மனஞ் சகிக்கவில்லையே!—என் தகப்பனார் செயல்களுக்கு வீரேந்திர சோழனும் படையெடுப்பான். இன்னொரு சோழனும் படையெடுப்பான்.—(மௌனம்)

* "முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்" (சங)

என்றவள் வாக்கியம் பொய்த்துப்போகுமோ?—இவற்றையெல்லாங் கொஞ்சங்கூட யோசியாமல் என் தகப்பனார் கொடுமையின்மேற் கொடுமையாய்ச்செய்ய நினைப்பது மடமையினும் மடமையாம். அந்தோ! இவரதறியாமைக்கென்னசெய்வேன்?—முன்செய்தகொடுவினைக்கே யூர்முழுதும் அலர் தூற்றுகின்றதே! அப்படியிருக்க இவர் மறுபடியும் அத்தன்மையான செயல் செய்ய

---

* கொன்றை வேந்தன்

யோசித்தல் தாஞ்சாக மருந்து குடித்தல்போலும்!—ஊரார் பழிப்பதை யிவர் கேட்டிராரோ?—கேட்டிருந்தால் இப்படி யோசனை செய்வானேன்?—அவர்க்கு இவ்வூரார் பழிப்பது தெரியாமல் தானிருக்கவேண்டும்!—ஐயோ! இதைக்குறித்து என்தகப்பனுருக்கு எவ்வாறு தெரிவிப்பேன்?— எனது தாயின்மூலமாய்த் தெரிவிக்கலாம் என்றாலும் சரிப்படாதே. அவள் என்தகப்பனார் சொல்வதை யெல்லாம் மறுத்துரையாமற் சரி சரி என்று கூறுபவளாவளே!—எவரிடஞ்சொல்லி யென்தகப்பனுருக்குத் தெரிவிப்பேன்?—அவ்வாறு அவர்க்குத் தெரிவிப்பது முடியாதுபோயின் என்னசெய்வேன்!—ஓ! சுந்தராநந்தனே!-என் னுயிர்த்தலைவனே!-பாண்டியர் குலதிலகனே! பைந்தமிழ் வல்ல பரமசாதுவே! உனக்கு என் மீது பரிபூரண நேசமிருக்கிறதென்பதை யுணர்ந்து கொண்டேன்! ஆகையால் உன்னை மணந்து சுகிப்பது எந்நாளாவதுகூடும் என்று எண்ணி யிதுவரைக்குங் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருந்தேன்!—இனி யான் பிழைத்திரேன்! பிழைத்திரேன்!—உன்னுயிர்க்குக் கேடு சூழ்கின்ற என் தகப்பனுரைத் துறப்பேன்! இன்று முதல் யான் அவர்க்கு மகளல்லேன்!

கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடு நன்றே" (சச)

என்ற பாண்டியன் வாய்மொழியைத் தூய்மொழியாய்க் கொண்டேன். ஓ! எனது பிராணசுந்தராநந்தனே! நீ பிழைத்திருந்தாலன்றோ யானும் பிழைப்பேன்? உன்னை யின்றி, யான் பிழைத்திருத்தல் முயற்கொம்பு பெறுதல்

---

* நறுந்தொகை

போலும். ஆதலின் என் தகப்பனார் இனிச்செய்யப்போகும் கொடுந்தொழிற்கு நீ யிரையாகாது உன்னைத் தப்புவித்தற்குரிய உபாயமொன்று செய்வேன்:—ஐயோ! இக்கொலைப் பாதகத்தை உனக்கு எவ்வாறு தெரிவிப்பேன்? யாரிடஞ் சொல்லியனுப்புவேன்?—நீ யிருக்குஞ் சிறைச்சாலையினின்றும் வெளியேபோவதற்கு ஓர் இரகசியவழியுண்டென்று கேள்விப்பட்டு அவ்வழியை யடைத்துநிற்குங் கதவினைத் திறப்பதற்குரிய திறவுகோலையும் என் தகப்பனார் படுக்கையறையிலிருந்து எடுத்துக்கொண்டேன். அந்தோ! இத்திறவுகோலை யுனக்கு அனுப்புவதெப்படியோ?—என் தகப்பனார் செய்ய நினைத்திருக்கும் பாதகச்செயலைப்பற்றி ஒரு கடிதத்தில் என் கையெழுத்தின்றியெழுதி அக்கடிதத்தோடு இத்திறவுகோலையுஞ் சேர்த்து நின் சிறைச்சாலைக்குட் போடுவேன்.—ஐயோ! காவலாளர் கடிதத்தைப் பார்த்துவிட்டா லென்ன செய்வேன்?—அவர்களுக்குத் தெரியாதிருக்கவேண்டுமே!—அப்படியே காவலாளர் பாராதிருந்து என தருமை நாயகன் மாத்திரம் கடிதங்கண்டு திறவுகோற் பெற்று என்னைக்காமியாய்த் தவிக்கும்படி யிங்கேயே விட்டு விட்டு அவ்வழியாகப் போய்விட்டா லென்னசெய்வேன்?—யான் இவ்வளவு வருந்தியும் என் எண்ணம் முடியாது போகுமே!—ஆகையால் யானும் உடன்போகும் எண்ணத்தையும்பற்றி ஒருவாறு அக்கடிதத்திற்குறிப்பாய் எழுதுவேன்!—அந்தோ! அவவாறு யான் கூடமாய்க்குறித்தது இன்னது தான் என்று அவனுணரானாயின்என்செய்வேன்? உயிர்துறக்கவேவேண்டும்! ஆகையால் அவன் என்னைவந்துகாணும்படி எழுதுவேன். இனி யொருகணமேனுந்தாமதியேன்.

அன்பளிப்பு



இப்பொழுதே கடிதமெழுதுவேன்! (ரூபாவதி எழுந்து போய் எழுதுகருவிகள் முதலியனகொண்டு வருகின்றாள்.) ஐயோ! நான் இதுவரைக்கும் ஆடவரெவர்க்குங் கடிதமெழுதிலேனே! ஆகையால் அவர்க்கு எழுதும் ஒழுங்கும் இன்னதென வுணர்ந்திலேனே! என்னசெய்வேன்? —(கடிதம் வரைகின்றாள்) சீ! இது சரியாயில்லை. வேறு கடிதந்தான் எழுதவேண்டும். (கடிதத்தைக் கிழித்தெறிகின்றாள்; வேறு கடிதம் வரைகின்றாள்.) சீ! இதென்ன? இதுவுந் தவறு விழுந்துவிட்டதே! என்னசெய்கிறது? (மீட்டுங் கழிக்கின்றாள்; இன்னொரு கடிதம் வரைகின்றாள்) இது கொஞ்சம் சரியாயிருக்கின்றது. இதைத்தான் அனுப்பவேண்டும்.—திறவுகோல் எங்கே? காணேன்! —ஓகோ! எழுதுகருவிக ளெடுக்கப்போனவிடத்தில் வைத்துவிட்டேன் போலும். (ரூபாவதி எழுந்துபோய்த் திறவுகோலை யெடுத்துக்கொண்டு வருகின்றாள்.) இத்திறவுகோலை யிந்தக் கடிதத்தின்கண் வைத்துத் திறவுகோலிருப்பது தெரியாமற் சுருட்டி எனது காதலனிருக்குஞ் சிறைச்சாலையின் சாளரத்தின் வழியாய் எறிந்துவிட்டு வருவேன்.

[ரூபாவதி போகின்றாள்]

---

## மூன்றாங்களம்

இடம்:—சிறைச்சாலை

காலம்:—நள்ளிரவு

பாத்திரம்:—சுந்தராநந்தன்

MAHAMAHOPADHYA
Dr. U. V. SWAMINATHAIYAR L
TIRUVANMIYUR, MADRA

**சுந்தராநந்தன்:** (தனக்குள்)—இன்று என்னவோ? தூக்கமென்பது சிறிதேனும் வரவில்லை. உடம்போவிதிர் விதிர்க்கின்

றது! மனமோ சஞ்சலப்படுகின்றது! என்னுடைய தாய் தந்தையரிருவரும் சோழநாட்டிற் சௌக்கியமாயிருக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டும் என்மனஞ் சந்தோஷப்படாமலிருப்பதேனோ?—ஐயோ! ரூபாவதி! நீயே யிதற்குக் காரணம்!—உன்னையே யுயிர்க்காதலியாய்ப் பெற்று உள்ளம் பூரிப்பதும் உண்டோ?— (மௌனம்) ஏதோ என்னவோ? உயரத்திலிருந்து விழுந்த சப்பம் கேட்டதே! இரும்புவிழுந்த சப்தம்போலத் தோன்றிற்றே! இந்த நள்ளிரவில் இவ்விடத்தில் அத்தன்மையான சப்தங் கேட்கக் காரணமில்லையே!—எல்லாவற்றிற்கும் என்னவென்று எழுந்துபோய்ப் பார்ப்பேன்.—(எழுந்து போய்ப் பார்க்கின்றான்.) இந்தச் சாளரத்தின் சமீபத்திற்றான் சப்தம் கேட்டது. ஓ! அதோ என்னவோ? வட்டமாய்க் கிடக்கின்றதே! என்ன? கடிதச்சுருளோ? ஆம்.— அதனோடு ஒரு திறவுகோலுமிருக்கின்றதே! ஈதென்னை ஆச்சரியம்!—இதை யென்னென்று விளக்கேற்றிப் பார்ப்பேன்.—(விளக்கேற்றிப் பார்க்கின்றான்) சிவபெருமானே! இதுவும் நின் திருவிளையாட்டோ? நின்னருட் பெருமையை யென்னென்றுரைப்பேன்! ஓகோ! யாரோ கடிதமெழுதி யிருக்கின்றார்கள்? இவ்விடத்திலேயே யிருந்து கடிதத்தைப் படிப்பேன். அவ்விடம்போனாற் காவலாளர் வெளிச்சமுணர்ந்து விழித்துக்கொள்வார்கள்.

(கடிதம் படிக்கின்றான்)

"எனது பிரியமுள்ள சுந்தராநந்தா!

உன் நிலைமை பரிதாபமாயிருக்கின்றது.—உன்னோடு அநுதாபப்படுகின்றேன்.—இவ்வரசன் உனக்குஎமனாய்

வந்திருக்கின்ருன்.—சாக்கிரதையாயிரு.—இவ்விடத்தி லிருந்தால் நீ பிழைக்கமாட்டாய். சீக்கிரமாய் இந்தக் கடிதத்தோடிருக்கும் திறவுகோலின் உதவியினுல் நீ இரகசிய வழியாய் ஓடிப்போய்விடு. நாளை யிரவு புறப்பட்டு ஓடிவிடச் சன்னத்தனாயிரு.—உன் அந்தரங்க நேசர் களும் இதை அறியப்படாது.—நீ யென்னைக் காண விரும்பினுல் நாளை யிரவு இரகசியவழியாய் வந்து என் னைப் பார்த்துப் பேசலாம்.—கடிதம் பத்திரம்.—

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள
நன்மைநாடி."

கடிதம் முழுவதும் படித்துவிட்டேன்.—இப்பொழுது தான் இந்தக் கடிதச்சுருள் விழுந்தது.—இந்தக் கடிதம் படித்தது முதல் மனங் கவலைப்படுகின்றதே!—உடல் வியர்க்கின்றதே!—என்ன செய்வேன்? இதை யெவர் எழுதியிருக்கக் கூடும்? என்னுடைய நண்பர்களில் எவ ரேனும் எழுதி யிருக்கலாமோ?—இல்லை, அப்படியானுல் "உன் அந்தரங்க நேசர்களும் இதை யறியப்படாது" என்று எழுதார்களே! மேலும் அவர்கள் இன்று பூஞ் சோலைக்கு வந்திருந்தார்களே. அப்போது இந்தமாதிரி ஏதாவதிருந்தால் அவர்கள் என்னிடம் குறிப்பாயாவது சொல்லுவார்களே! இன்னுமவர்கள் இந் நள்ளிரவில் வெளியேற மாட்டார்களே! இஃது இரகசியமாயுமிருக் கின்றதே! பின்னை யார்தாம் எழுதியிருக்கக் கூடும்?— சில நாளைக்குமுன் சந்திரமுகன் சில கனவான்கள் தன் வீட்டிற்கு வந்து ஏதோ பேசிக்கொண்டதாகச் சொன் ஞனே! அந்தக் கனவான்களி லெவரேனு மெழுதி

யிருப்பாரோ?—இராது. ஏனென்றால் அரசனது படுக்கை யறையிலுள்ள இத்திறவுகோல் அவர்கள் கைக்குப் போகிறது அசாத்தியம். ஒருவேளை இந்தச் சமாசாரத்தைச் சுசீலர் உணர்ந்து கடிதத்தில் எழுதித் தம்முடைய வேலையாளரிடம் கொடுத்து இச்சாளரத்தின் வழி எறியச் சொல்லி இருப்பாரோ?—அப்படியுந் தோன்றவில்லை. எழுத்தைப் பார்த்தால் யாரோ எழுத்துத் திருந்ாதவர் எழுதியது போலத் தோன்றுகின்றது. மேலும் அவர் கடமை தவறாக் கல்விமானாதலின் எவ்வரசனுக்கும் விரோதமாய் எதுவுஞ் செய்யார். ஒருவேளை சுசீலர் மகள் அம்புஜாட்சி, ரூபாவதியின் மூலமாய்த் தெரிந்து கொண்டு எழுதியிருப்பாளோ?—அதுவுமிராது. அவள் இந்தப் பாதிராத்திரியில் வெளியிலே வரவும் மாட்டாள். அவளுக்கு இத்திறவுகோல் எப்படிக் கிடைத்திருக்கும்? மேலும் சுசீலர் வீடு வெகு தூரத்திலன்றோ உள்ளது? இச் சிறைச்சாலை அரசனது அரண்மனையைச் சார்ந்ததாயிற்றே! மேலுங் காவலோடிருக்கின்றதே! இந்நேரம் ஆசாரவாசல் அடைத்திருக்குமே! ஆகையால் வெளியிலிருப்பவர்கள் இதைப் போட்டிருக்கமுடியாது. அரண்மனையைச் சேர்ந்தவர் யாரோதாம் இந்தக் காரியஞ் செய்திருக்கவேண்டும். அரண்மனையைச் சேர்ந்தவர்களில் ஒருவரும் என்மீது இரக்கமுற்று இவ்வளவு இரகசியமாய்க் கடிதமெழுதி, எவரும் போகிறதற்கு முடியாத அரசன் சயனக்கிருகத்திலிருந்து திறவுகோலுமெடுத்து எறிந்து இத்தன்மையான உதவிசெய்யத் தகுந்தவரில்லையே.—(மௌனம்) ஓகோ! என்னருமைத் தலைவி ரூபாவதி யெழுதினள் போலும்! இந்த இரகசிய சமாசாரம்

அவளுக்குத் தெரியக் காரணமுமுண்டு. எழுத்தைப் பார்த்தாலும் மகளிரெழுத்தாகவே காணப்படுகின்றது. ஏ! ரூபாவதி! உன் இரக்கத்தை யென்னென்று சொல்லுவேன்? ஆம், நீதான் இந்தத் திறவுகோலை யெடுக்கக் கூடும். ஆ! இந்த நள்ளிரவில் இவ்விடம் எவ்வாறு வந்தனையோ? இதுவரையும் விழித்திருந்தாயோ? ஏழையேன் மீதும் உனக்கு இவ்வளவு அன்புளதோ? உளதெனிற் பிழைத்தேன்! ஈடேறினேன்! நன்பயனுயினேன்! உன்னன்புடைய எனக்கு இனிமேல் என்ன குறையோ? என் தலைவி யெழுதிய கடிதத்தை மீட்டும் படித்துக் களிகூர்வேன். (கடிதத்தை மீட்டும் படிக்கின்றான்.) ஐயோ! என்னுடைய நன்மைநாடி யென்று கையெழுத்திட்ட நாயகியே! 'நன்மைநாடி' யென்றபெயர் உனக்கே தகும்! என்மீதுள்ள காதலினால் தன் தகப்பனையும் யமனெனக் கூறுகின்ற உத்தமியே! உன்னை நாளை யான் நேரிற் காண்பேன். கண்டு என் துன்பமெல்லாஞ் சொல்லியாறுவேன்.—ஆகா! நின் லௌகிகவிஷய ஞானத்தின் முதிர்ச்சியை யென்னென்று சொல்லுவேன்! மாதர்கட்குரிய மென்மைத் தன்மை வழுவாது, ஆண் மக்களுக்குரிய முறைப்படி யெழுதிய மோகன முத்தே! நீ சொல்லிய படியே இந்தக் கடிதத்தைப் பத்திரமாய் வைப்பேன். இந்தத் திறவுகோலையும் சாவதானமாய் ஒளித்து வைப்பேன். ஆ! அதோ அங்கே பேச்சுக்குரற் கேட்கின்றதே! இதோ விளக்கை யவிப்பேன்! (விளக்கவிக்கின்றான்) இனி யிவ்விடத்தி லிருக்கப்படாது.

[சுந்தரானந்தன் போகின்றான்.]

## நானகாங் களம

இடம்:—இராசமகிஷியி னந்தப்புரம்

கலாம்:—பிற்பகல்

பாத்திரங்கள்:—சூரசேநன், ரூபாவதி

சூரசேநன்:—குழந்தாய்! ரூபாவதி! என்ன செய்துகொண்டிருக்கின்றாய்? இந்த ஊருனக் கெப்படி யிருக்கிறது?—அழகா யிருக்கிறதா?

ரூபாவதி:—ஏன்? இந்தவூருக் கென்னகுறைவு? நன்றாய்த்தா னிருக்கிறது. நம்முடைய கருவூரைப் பார்க்கிலும் இது மிக அழகாய்த்தா னிருக்கின்றது. அரண்மனையும், அரண்மனையைச் சுற்றிக் கோட்டையும், கோட்டையைச் சுற்றி அகழியும், அகழியைச் சுற்றிப் பூஞ்சோலையும், பூஞ்சோலைக்குப் பக்கத்தில் வையை யாறும் வெகு நேர்த்தியான காட்சிகளாய்த்தா மிருக்கின்றன. இந்த மீனாட்சிதேவி கோயிலொன்றேபோதுமே நங் கருவூரை விட இவ்வூர் மேலானதென்று சொல்லுகிறதற்கு.

சூரசேநன்:—ஆனாலுனக்கு இவ்விடத்திலேயே யிருக்கிறதற்கு இஷ்டம் போலும்!

ரூபாவதி:—அதென்ன? அப்படிச் சொல்லுகிறீர்கள்! யாருக்கும் அழகாயிருக்கிற வூரிலே யிருப்பதற்கு இஷ்டமாய்த் தானிருக்கும்.

சூரசேநன்:— அப்படியானால் எவனுவதொருவன் அழகா யிருந்தால் அவன்பேரிலும் நீ இஷ்டங் கொள்ளுவாய் போலும்!

ரூபாவதி:—(முகஞ் சிவந்து) நீங்கள் சொல்லுகிறது வெகு நன்றாயிருக்கின்றதே! காதல் கொள்ளுகிறதற்கு மிதற்கு

மென்ன சம்பந்தம்? காதல் கொள்ளுமிடத்துக் குண
மும் கல்வியுங் குற்றமில்லா அறிவும் அன்பும் ஆகிய
இவற்றோடு அழகும் இருந்தாற் பயனே யல்லாமல்
வெற்று அழகுமாத்திர மிருந்தாற் பயனில்லை.

[கோமளவல்லியுங் கநகமாலையும் வருகின்றனர்.]

சூரசேநன்:—சரி, உன் தாயார் உன் தோழிகளு ளொருத்தி
யோடு அதோ வருகின்றாள். நீ அவர்களுடன் பேசிக்
கொண்டிரு. நான் பட்டி மண்டபத்திற்குப் போய்விட்டு
வருகின்றேன்.

[சூரசேநன் போகின்றான்.]

கநகமாலை:—ரூபாவதி! நீ நேற்றைக்கும் இன்றைக்கும் புதுப்
புனலாட வரவில்லையே! அது எவ்வளவோ வேடிக்கை
யும் விநோதமுமா யிருந்ததே!

ரூபாவதி:—நீங்கள் யார் யார் போனீர்கள்?

கோமளவல்லி:—ஏன், ரூபாவதி! அதென்ன? நீ யென்னவோ
ஒருவகையா யிருக்கிறாயே! உனக்கு உடம்பு என்ன?
அம்மா!

ரூபாவதி:—எனக்கு உடம்பு ஒன்றுமில்லையே! கநகமாலையை
வேண்டுமென்றாலுங் கேளுங்கள். நேற்றுக்கூட நான்,
கநகமாலை, அம்புஜாட்சி யெல்லாரும் பூஞ்சோலைக்குப்
போய்விட்டு வந்தோமே!

கநகமாலை:—ஆமாமாம். எனக்குத் தெரியும். ரூபாவதிக்
கென்ன! உடம்பெல்லாம் சரியாய்த்தானே இருக்கிறாள்.

கோமளவல்லி:—சரியாய்த்தான் இருக்கிறாள். இருந்தாலும்
நாம் எவ்வளவுக் கெவ்வளவு சாக்கிரதையா யிருக்கி
றோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது தானே!

ரூபாவதி:—கநகமாலை! அம்புஜாட்சி யெங்கே வரக்காணேன்?

கநகமாலை:—நான் அவள் அகத்திற்குப் போய்விட்டுத் தான் வந்தேன். அவள் என்னவோ? தன் அத்தையகத்திற்குப் போயிருக்கிறுளாம். அவளுடைய தாயார் சொன்னுர். ஆகையால் ஒருவேளை அதிக நாழிகையாகுமோ என்னவோ என்று நினைத்துக் காத்துக்கொண்டிராமல் நான் முந்தி வந்துவிட்டேன். அவள் இன்றைக்கு வருவளோ என்னவோ? அதுவுஞ் சந்தேகம்.

கோமளவல்லி:—அவளுடைய அத்தை யார்?

ரூபாவதி:—அவள்தான் மந்திரி சுசீலர் தமக்கை சுதர்மை.

கோமளவல்லி:—அதென்ன? சுதர்மையம்மா யிங்கே நம் அரண்மனைக்கு ஒரு நாட்கூட வரவில்லை. நாமும் இங்கு வந்து ஏறக்குறைய இரண்டு மாசமாயினவே?

கநகமாலை:—சுதர்மையினுடைய அகமுடையான் இறந்து போய் இன்னும் வருஷமாகவில்லை. வருஷமாகிறதற்கு முன் கைம்பெண்களெல்லாம் வெளியில் வரக்கூடாது என்பது எங்களுக்குள் ஓர் ஏற்பாடு. ஆகையினுலே தான் வரவில்லை போலிருக்கிறது. இல்லாமற் போனுல் ஒரு நிமிஷமாவது வாராதிருக்கமாட்டாள்.

ரூபாவதி:—ஏன், கநகமாலை! அம்புஜாட்சிக்கு அவளுடைய அத்தை வீட்டி லென்னவேலை? உனக்கு ஏதாவது தெரியுமா?

கநகமாலை:—அதென்னவோ? அம்மா! எனக்குத் தெரியாது.

[அம்புஜாட்சி வருகின்றுள்]

கோமளவல்லி:—அதோ அம்புஜாட்சியும் வந்துவிட்டாள். அவள் வரக்காணேன் வரக்காணேன் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே!

[செவிலி வருகின்றுள்]

சேவிலி :—என்ன? அம்மா! ரூபாவதி! இப்படி யுட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? சாப்பிடவேண்டாமா? சீக்கிரமாய் எழுந்திருந்து வா.

கோமளவல்லி :—ஆமாமாம். நானும் உன்னைக் கூப்பிடவந்தவள் மறந்துவிட்டேன்.

கநகமாலை :—அப்போது முதல் இன்னும் சாப்பிடாமலா உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? நீ சாப்பிட்டாயிருக்குமென்றன்றோ நினைத்தேன்! நன்றாய் இதுவரையிலும் உட்கார்ந்து கொண்டிருந்தாய், எழுந்திரு! எழுந்திரு! சீக்கிரமாய்ப் போய்ச் சாப்பிட்டு விட்டுவா.

அம்புஜாட்சி :—சீக்கிரம் வந்தாயானால் இன்றைக்குப் பூஞ்சோலைக்குப் போய்விட்டு வரலாம்.

கோமளவல்லி :—இல்லை, இல்லை. இன்றைக்கு அவள் வரமாட்டாள். அவளுக்கு உடம்பு செவ்வையில்லை.

ரூபாவதி :—நீங்கள் எல்லாவற்றிற்கும் இங்கேதானே யிருங்கள். நான் போய்ச் சீக்கிரமாய்ச் சாப்பிட்டுவிட்டு வருகின்றேன்.

[ரூபாவதி கோமளவல்லி செவிலியிவர்கள் போகின்றனர்.]

கநகமாலை :—என்னடி! அம்புஜாட்சி உனக்குத் தெரியுமா ஒரு சங்கதி? நம்முடைய ராஜா சற்குணவழுதியும் ராணி சுந்தரியும் சோழ ராஜ்யத்திலே இருக்கிறார்களாமே!

அம்புஜாட்சி :—ஆமாம். என் காதிலும் அப்படித்தான் பட்டது. ரூபாவதி வருகிறமட்டும் சங்கீத விலாசத்திற்குப் போய் வருவோம்.

[யாவரும் போகின்றனர்.

## ஐந்தாங் களம்

இடம் :—நகர்ப்புறத்து ஒரு வெளியிடம்

காலம் :—நள்ளிரவு

பாத்திரம் :—சுந்தராநந்தன்

**சுந்தராநந்தன்** :—(*தனக்குள்*) கடிதமெழுதிய காதலி, ஏனோ இன்னும் வரவில்லை? ஒருவேளை தான் எழுதியதை மறந்து விட்டாளோ? சீ! அப்படி ஒருநாளும் இருக்கவே மாட்டாள். (*ரூபாவதி ஆண்வேடம்பூண்டு பின்னே வந்து நிற்கின்றாள்.*)

இல்லாமற்போனால் அவள் கடிதமெழுதின சங்கதி பிறருக்குத் தெரிந்து அதனால் வரத்தடைப்பட்டதோ?—ஓ! ரூபாவதி! என்னை யோடிவிடும்படி யெழுதினையே!

(*பாடுகின்றான்*)

(௩) இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

**பல்லவி**

கோமள மாதேயா னோடேலோ நலங்கூறாய்.

**அநுபல்லவி**

வாமமார் தையலே நன்மாணினை மானும் (கோமள)

**சரணங்கள்**

நேயமார் மாதேயா னோடே னீதிய தாமோ
தூயபைந் தோகையே ரூபாவதியே யென் (கோமள)
வாருநற் கூந்தல்யா னோடன் மாட்சிமை யோசொல்
சீருறு செல்வியே ரூபாவதியே யென் (கோமள)

யான் ஓடி யொளித்தால் உன்னைப் பிரியவேண்டுமே! உன்னைப் பிரியவேண்டுமே! உன்னைப் பிரிந்த பிறகும் பிழைத்திருப்பேனோ? நின்னைப் பிரிந்து காணுதலின்றி ஆற்றாது உயிர் துறப்பதைக் காட்டினும், நின்னைப் பூஞ்சோலைக்

கண்ணுவது தினமும் கண்டு ஆற்றி உன் தந்தையார் வாளிற்கு இரையாவது மேலானதேயாம். ஆதலால் இனியொரு கணமேனுந் தாமதியாமல் மறுபடியும் சிறைச்சாலைக்கே போவேன்.

[ரூபாவதி முன்னே வருகின்றாள்]

ரூபாவதி:—என் ஆசைக் காதலனே! சற்று நின்று என்மீது கருணை புரிவாய்!

சுந்தராநந்தன்:—பூவுலகிற் போந்ததொரு புத்தமுதே! என் னுயிர் காக்க வந்த இளங்குயிலே! ரூபாவதி! இதோ நின்றேன்! நின்றேன்!!

ரூபாவதி:—யான் வந்து உனக்காக நிற்கும்போது, நீயேன் மறுபடியும் சிறைச்சாலைக்குப் போகவேண்டும்? உன்னை நேரிற்கண்டு பேசுதற்கில்லாமல் இதுவரைக்கும் யான் அடைந்த வருத்தமனைத்தும் உன்னிடத்திலேயே சொல லத் தகும். இதைக் குறித்து யான் என் தோழியரிடத் தும் பேசவில்லை.

சுந்தராநந்தன்:—அறிவு நிரம்பிய ஆருயிர்க் காதலி! என்னைக் கண்டு பேசுவதற்கு நீ வரும்போது யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற ஐயப்பாட்டினால் ஆண் வேடம் பூண்டு இவ்விடம் வந்தாயோ?

ரூபாவதி:—எனது பிராணேசுவரா! யான் இவ்வேஷம் பூண் டதற்குக் காரணம் நீ யினிமேலுணர்வாய். நின்னை முதல் முதலிற் பூஞ்சோலையிற் கண்டேன்! வேட்கை யுற்றேன்! அது முதல் நின்னை யிடைவிடாது சிந்தியா நின்றேன்! உடம்பு வாடி மெலிகின்றேன்! ஒவ்வோரிர வும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றுகின்றது! யான் நின்மீது காதல்கொண்டதைப் பிறரிடம் வெளிப்படுத்தா

மல் என் மனத்திலேயே வைத்துப் புழுங்கினேன்! யான் என் தோழியரோடு பேசிக்கொண்டிருக்கும்போதே உன் நினைவு வந்துவிடும். உடனே வாய்குழறும்! உடல் வியர்க்கும்! பிறகு அவர்களை யனுப்பிவிட்டு வாய் விட்டுப் புலம்பி யுருகுவேன்! விளையாட்டை யெல்லாம் மறப்பேன்! மயங்குவேன்! செயலற்றிருப்பேன்! எழுவேன்! ஏங்குவேன்! எங்ஙனம் பிழைப்பலென்பேன்!

சுந்தரானந்தன்:—ஏ! பிராணேசுவரீ! ஒருநாள் நீ என் தோழிமாரொடு பூஞ்சோலையில் எளியேன் நிலைமையைக் குறித்து இரக்கமுற்றுப் பேசிக்கொண்டிருந்தாய். அதை நான் ஒளிந்து நின்று கேட்டேன். அப்போது உனக்குஎன்மீது அன்புளது என்று உணர்ந்தேன்! உணர்ந்த அந்த நிமிடத்திலேயே நின்மீது காதல்கொண்டு நினைத்து நினைத்து உருகி வெதும்பி வாடிக் கலக்கமுற்றேன்! உடனே சிறைச்சாலைக்குச் சென்றேன்! அவ்விடத்து எங்கே பார்த்தாலும் நின்னுருவத்தையே கண்டேன்! அந்தோ! இஃது உருவெளியாகிய பொய்த் தோற்றமாயிற்றே என்று ஏக்கமுற்று நைந்தேன்! இவ்வாறு உன்மீதுள்ள இனியநேசம் நாளுக்குநாள் அதிகரித்து என்னை அதிமோக சாகரத்துள் ஆழ்த்திவிட்டது! என்செயவல்லேன்? செய்திறனறியாது கையற்றுப் புள்ளொடும் மாவொடும் புலம்பினேன்!

ரூபாவதி:—எனது பிரிய நேசனே! இனிமேல் நாம் இருவரும் ஒருவரை யொருவர் பிரிந்திருந்து புலம்பாதிருப்பதற்கேற்ற உபாயங்களை நாடவேண்டும்.

சுந்தரானந்தன்:—என்னுயிர்த்துணைவீ! ரூபாவதி! யானோ சிறைச்சாலைக்கண் இருக்கின்றேன்! நீயோ அரசன்மாளி

கையிற் கன்னிமாடத்தி லிருக்கின்றாய்! நீயும் நானும் பிரியாது ஒருமித்து வாழ்வது எப்படியோ?

ரூபாவதி:—* "நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே"

என்று பெரியோர்சொல்லுவது நினக்குத்தெரியாததோ? ஆகையால் நாம் கூடி வாழ்வதற்கு நீதக்க உபாயமறிந்து செய்யவேண்டும்.

சுந்தராநந்தன்:—ஞானமே யுருவென நண்ணிய நாயகி! நீ சொல்லியன வெல்லாம் உண்மையேயாம். ஆயினும் யாம் என் செய்வது? நீயும் நானும் இரவிற் கூடிப் பகலிற் பிரிந்து வாழ்ந்திருந்தால் என்ன?

ரூபாவதி:—இன்றிரவு பிழைத்திருக்கும் நீ, நாளையிரவு இவ் விட மிருப்பையாயிற் பிழைத்திருக்க மாட்டாயென்பது நிச்சயம். ஆகையால் நீ உனக்குத் தோன்றியபடி செய்க.

சுந்தராநந்தன்:—யான் இவ்விடமிருப்பேனேற் பிழைக்கமாட் டேன் என்பது நிச்சயமென்றாயே! அஃதெப்படி யுனக் குத் தெரியும்?

ரூபாவதி:—ஐயோ! நினக்கு என் தகப்பனாருடைய கொடிய அவ்வெண்ணத்தை வெளியிட்டுரைக்கவும்வேண்டுமோ? என் தகப்பனார் நின்பெற்றோர் சோழநாட்டி லிருப்பது கேட்டு, சோழன் உதவிபெற்றுப் படையெடுத்துத் தம் மீது நின் தகப்பனார்வந்தால் நின்னைக் கொலைக்களம் படுப் பதாக ஆலோசனை செய்திருப்பதை என்தாயிடம் சொன்னார். அஃது என் காதில் உருக்கைக்காய்ச்சி யூற்றி யதுபோலிருந்தது! உடனே அது நினக்குக் கூடமாய்க் குறிப்பிக்கப்பட்டது.

---

* இறையனாரகப் பொருளுரை

சுந்தராநந்தன்:—ஐயோ! ரூபாவதி! இதுவரை யுன்னை யன்புடன் வளர்த்து வந்த தந்தைக்குக் கேடு சூழ்வது உனக்கு அழகாகுமோ?

ரூபாவதி:—கொலைப்பாதகத் தகப்பனுேராடிருப்பதைக்காட்டினும் இறந்தொழிதல் மேலானதேயாம். அப்படியிருக்க-

சுந்தராநந்தன்:—அப்படியாயின் யான் இவ்விடத்தைவிட்டு ஓடி யொளிப்பேனேல் நீ யென்னைச் சேர்தலெப்படிக் கூடும்?

ரூபாவதி:—ஐயோ! எனதருமைத் தலைவனே! நீ கூறுவது என்ன ஆச்சரியம்! கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கலைவாருமுளரோ? யான் ஆண்வேடம் பூண்டு வந்ததன்பயனை யறியாயோ?

சுந்தராநந்தன்:—ஓ! நின்னெண்ண முணர்ந்தேன். நீ கூறுவது மேலான உபாயமேயாயினும், நீ யென்னொடு கூட நடக்கமாட்டுவாயோ? மேலும் நிழலும் நீரும் இல்லாத அழல் வெங்காட்டிற் போவதை யெவ்வாறு பொறுப்பாயோ?

ரூபாவதி:—என்பெருமானே! எததன்மையான வெங்கானமானுலும் நின்னொடு வரவே அஃது இனியதாய்மாறிவிடும். நீயில்லாதவிடம் தென்றல்வீசும் தேவமாளிகையாயினும் அஃது எனக்குக் காடேயாம்! நீயிருக்குமிடம் தீப்பொறி பறக்கும் வனமேயாயினும் அதுவே யெனக்கு மிகவும் ரமணீயமான மலர் மாளிகையாம்!

சுந்தராநந்தன்:—என் காதற்கிள்ளையே! ரூபாவதி! நீயும் நானும் இந்த மாதிரி ஓடிப்போவது எனக்குச் சரியானதாகத் தோன்றவில்லை. நம்முடைய தமிழ் அகப்பொருளிலக்கணங்களில் தலைவி தலைவனுடன் தாய்தந்தையரை

விட்டுவிட்டுப் போய்விடுதல் நியாயமென்று சொல்லப்பட்டிருந்தாலும் என்மனம் அதை ஒப்பவில்லை.

ரூபாவதி:—ஐயோ! என்னுயிர்த் தலைவனே! நீ இவ்விட மிருப்பையாயின் நீயுமென்னைக் காணப்போகின்றதில்லை! நீ என் தகப்பனார் வாளிற்கு இரையாய்விடுவாய்! இது காதிற்பட்ட நின்பெற்றோரும் மனம்புழுங்கி யிறப்பார்கள்! யானும் உயிர்துறப்பேன்! இவ்வளவு துன்பங்களுக்கும் நீயே மூலகாரணனாவாய்!

சுந்தரானந்தன்:—அன்புரு வெடுத்த வாயிருந் தலைவியே! நீ சொல்லுவனவெல்லா முணர்ந்தேன். அவையும் நியாயமேயாம். இத்தருணத்திற் செய்வது இன்னதென்று தோன்ற வில்லையே! தெய்வமே! என்செய்வேன்? சோமசுந்தரமூர்த்தியே! இவ்வாறு எனதருமைக்காதலி ரூபவதியின் மூலமாய் என்னைத் தூண்டுவதும் நின்னருட் செயலே யன்றோ?

ரூபாவதி:—அதற்குமோர் ஐயமுண்டோ?–ஐயோ! பிராணசுந்தரா! நேரமாகின்றதே! சிறிது போதிற்கு முன் உடன் போக நினைத்த மனத்தை மாற்றிவிட்டாயே! தெய்வமே! இது நினக்கு ஏற்குமோ?

சுந்தரானந்தன்:—ஏ பிராணேசுவரீ! நீ மனவருத்தப்படுதல் ஒழிவாயாக. இதோ யான் நின்னுடன் போக ஒருப்பட்டேன்! புறப்பட்டேன்! வருவாயாக. ஓ சொக்கலிங்க வள்ளலே! அங்கயற்கணம்மையே! எம்மைக் காத்தருளுவீர்! (பாடுகின்றான்)

இன்பமே யியற்கை யுருவமாக் கொண்ட
வீசனே சோமசுந் தரனே
யன்பொரு வடிவாப் போந்துள வென்ற
னுருயிர்த் தலைவியும் யானுந்

துன்பமொன் றேனு முற்றிடா தெமக்குத்
துணைவனு யிருத்தலுன் கடன்காண்
மன்பர ஞான வள்ளலே மகிழ்ந்து
மதுரையில் வாழ்பர சிவமே. (சசு)

சுந்தரபாண் டியனனுமெங் குலத்துட் டோன்றிச்
சொக்கலிங்கப் பெருமானே யெமையாட் கொண்ட
விந்தையினை யாதலினு லிந்த நாளு
மேவியெமக் குறுதுணையாய் வருதல் வேண்டும்
நந்துதவழ் பொற்கஞ்ச வாவிச் சூழ
னன்கமர்ந்த நாயகனே நந்தங் கோவே
சிந்திக்கத் தித்திக்குந் தேனே வேதச்
செம்பொருளே மெய்ஞ்ஞான தேவ தேவே. (சஎ)

(ச) இராகம் - பூரிகல்யாணி. தாளம் - சாப்பு.

### பல்லவி

வாமனே சுந்தரேச வள்ளலே—காத்தருளாய்

### அநுபல்லவி

சேமமார் மதுரைவாழ் சிவபரஞ் சோதியே
யாமுமிவ் வனஞ்செல வெமக்குநீ துணைசெய்வாய். (வா)

### சரணம்

நித்தநின் மலர்ப்பாதம் பத்தியாய்ப் பணிகின்றேம்
அத்தனே யெம்மீது சித்தமி ரங்கிடுவாய்
சுந்தரா நத்தன்யானுஞ் சந்தரூ பாவதியும்
அந்தமில் லாவுன்னைச் சந்தத மும்பணிவோம்
காத்தி யாஅதி காம தகனனே
காத்தி யெமதுயிர் காத்தி யிவேளை
கால ஹரணனே காக்க விதுவேநற்
கால முணர்குதி காது விளையிலை
கால்கண் மறைமலர் காட்டு மாதுமை
காதல வெதுமை நீ (வாமனே)

ரூபாவதி:—என்னருமைத் தாயே! கோமளவல்லி! தந்தையே! செவிலித்தாயே! எனது மாடமே! யான் உங்களை யெல்லாம் விட்டுப் போகின்றேன். மறுபடியும் உங்களைக் காண்பது எந்நாளோ?

சுந்தரானந்தன்:—(பாடுகின்றான்)

மேகமே நீவிலகாய் மேலான சந்திரன்றே
ளேகையொடு தன்னுடைய வொளியினால் வழிகாட்ட. (சஅ)
பட்சமுடன் மேகமே பறந்தொருபக் கம்போவாய்
நட்சத் திரங்கடம நல்லொளித்தீ பங்காட்ட. (சகூ)
காஞ்சியிடை யார்க்கின்ற கன்னிகைரூ பாவதிநின்
பூஞ்சோலை யிதுகண்டாய் பொற்புடைய மாதரசே! (ருo)
பூஞ்சோலைக் கண்ணமரும் புள்ளினமே போகின்றே
மாஞ்சோலைக் கண்ணமரு மானினமே போகின்றேம். (ருக)
வையையே போகின்றே மதுரையே போகின்றேந்
துய்யனே மீனாட்சி சுந்தரனே போகின்றேம். (ருஉ)
என்னருமை நேசர்கா ளென்றும்மைக் காண்பேமோ
துன்னிரவி னும்மிடத்துச் சொல்லாது போகின்றேம். (ருங)
தென்றலே போகின்றேந் திங்களே போகின்றேந்
மன்றிலே போகின்றே மரும்புறவே போகின்றேம். (ருச)
கூகையே குழலூதே கொடியவனம் போகின்றேங்
கோகமே கேகயமே கோகிலமே போகின்றேம். (ருரு)
இராப்பாடிப் புள்ளேயா மின்பமுறப் பாடாயோ
விராய்ப்போக மனமுண்டேல் வேகமாய் வாராயோ? (ருகா)
விண்ணிடத்துச் செல்கின்ற மேன்மையுறு சாதகமே
மண்ணடக்கு மெங்களுக்குச் சாதகமாய் வாராயோ? (ருஎ)

ரூபாவதி:—(பாடுகின்றாள்)

என்னுடைய தோழியரே யென்றும்மைக் காண்பேனோ
வென்னுடைய கிள்ளையே யெனைத்தேடித் திகைப்பாயோ?

ஆவலொடென் பாக்கியமோ டனுதினமும் விளையாடும்
வாவியே யென்றனில வந்திகையே போகின்றேன். (௫௯)
மாறாகக் கூவுகின்ற மாங்குயிலே போகின்றேன்
மாறாக வாடுகின்ற மாமயிலே போகின்றேன். (௬௦)
சுந்தரா னந்தமொடுஞ் சுகமாக வாழ்ந்திருப்பே
னந்தவனஞ் சூழ்மதுரை நாயகியே போகின்றேன். (௬௧)
அங்கயற்க ணம்மையே யன்புடைய தாயொடு
மங்களமாய் நான்றினமும் வாழவே யருள்புரிவாய். (௬௨)

இருவரும்:—மதுரை நகரே! யாங்கள் போகின்றேம்! நீ வாழ்வாயாக.

[இருவரும் போகின்றனர்]

---

## ஆறாங்களம்

இடம்:—முனிவராச்சிரமம்
காலம்:—வைகறை
பாத்திரம்:—ஞானதீபர்

ஞாநதீபர்:—(கடவுளைத் துதித்துப் பாடுகின்றார்)

அதுலசித் யாநந்த ஜயஞுத பவரகித
சுகுணநிர் மலசுசீ லப்ரபாவ
அத்புத சலக்ஷண மநோஹர சுகந்தமய
ப்ரம்மாதி தேவவந் திதசித்பத
மதுரம்ருது வசநகவி தாப்ரசங் கப்ரிய
மகாமேரு கைலாஸ சைலாஸந
மங்களா கரபரம சுத்தசாத் குண்யசிவ
மகிபால குருஸ்ரேஷ்ட வரபாகிமாம். (௬௩)

[ஆன்மநாதர் வருகின்றார்.]

ஆன்மநாதர்:—அடியேன் ஆத்மநாதன் நமஸ்காரம்.

ஞானதீபர்:—அப்பா! ஆத்மநாதா! நீ சீக்கிரமாய்ப் போய் ஸ்நானஞ் செய்துவிட்டுவா. இன்றைக்கு சுதினமா யிருக்கின்றது. ஆகையினாலே உனக்குக் குருகீதாபடனம் ஆரம்பிக்கலாமென்று ஆலோசனைபண்ணி யிருக்கின்றேன். தாமஸம் பண்ணாமல் வந்துசேரு. ராகுகாலத்திற்கு முன்னே தொடங்கவேண்டும்.

ஆன்மநாதர்:—ஆகட்டும். இதோ ஸ்நாநம் பண்ணிவிட்டு வந்துவிடுகிறேன். (தனக்குள்) குருகீதை நல்ல கிரந்தம்!

[ஆன்மநாதர் போகின்றார்]

[ஆச்சிரமவாசலிற் சுந்தராநந்தனும் ரூபாவதியும் வருகின்றனர்.]

சுந்தராநந்தன்:—யார் ஐயா போகிறவர்? இங்கே யிப்படிக் கொஞ்சந் திரும்ப வேண்டும்.

ஆன்மநாதர்:—நம்மைப் போகிற போது கூப்பிடுகிறவன் யார்?—என்ன சமாசாரம்? ஐயா! நீங்களிரண்டுபேரும் யார்? எங்கே வந்தீர்கள்? உங்களுக் கென்ன வேண்டும்? சீக்கிரம் சொல்லுங்கள். நான் போகவேண்டும்.

சுந்தராநந்தன்:—ஐயா! நாங்கள் இருவரும் மதுராபுரியி லிருப்பவர், எங்களுடைய பழைய ராஜாவைத் துரத்திவிட்டு, இப்போது சூரசேநவர்மன் என்ற சேரராஜா வந்திருக்கின்றான். அவன் செய்யுங் கொடுமையினைப் பொறுக்க மாட்டாமல் இரவில் ஒருவருக்குந் தெரியாமல் நாங்களிரண்டுபேரும் ஓடி வந்துவிட்டோம். இராத்திரி முழுவதும் கண்விழித்துத் தூங்காமல் வழிநடந்ததனால் மிகவும் களைத்திருக்கின்றோம். நாங்கள் இருவரும் படுத்து இளைப்பாறுவதற்குச் சற்று இடங்கொடுப்பீரேல், அதிக நன்றியுள்ளவர்களா யிருப்போம்.

ஆன்மநாதர்:—ஆனால் சரி. கொஞ்சமிருங்கள். இதோ வருகின்றேன்.

[ஆன்மநாதர் உட்செல்லுகின்றனர்.]

சுந்தராநந்தன்:—என் கண்ணே! ரூபாவதி! உன் தகப்பனுரைக் குறித்து இப்படி யான் சொல்லியதற்கு வருத்தப்படுகின்றாயோ?

ரூபாவதி:—எனது நாயகனே! நீயென்ன வார்த்தை சொன்ன போதிலும் அவையெல்லாம் எனக்கு மதுர வசனமேயாம். ஆகையால் இதற்கு நான் வருந்துவானேன்?

சுந்தராநந்தன்:—இவ்வளவு அறிவுள்ள உன்னையே யான் என்னுயிர்த் துணைவியாய்ப் பெறுவதற்கு என்ன புண்ணியஞ் செய்தேனோ?

ரூபாவதி:—சரி, அஃதிருக்கட்டும். இப்போது என் பெயரென்னவென்று கேட்டால் நான் என்னபெயர் சொல்லலாம்?

சுந்தராநந்தன்:—ஏதாவது 'சுரூபன்' என்று சொல். என் பெயர் கேட்டால் நானுமேதாவது 'சுந்தரன்' என்று சொல்லுகின்றேன்.

[ஆன்மநாதர் திரும்பிவருகின்றார்.]

ஆன்மநாதர்:—நீங்களிரண்டுபேரும் உள்ளே வரலாமென்று ஆசாரியரவர்களுடைய உத்தரவாயிருக்கின்றது. வாருங்கள்.

(எல்லாரும் உட்செல்லுகின்றனர்;
இருவரும் வணங்குகின்றனர்.)

ஞாநதீபர்:—தீர்க்காயுஷ் மான்பவ! உங்களைப்பற்றிய சமாசாரமெல்லாம் நம்முடைய சிஷ்யன் மூலமாய்த் தெரிந்து கொண்டோம்.—மற்றைப்படி உங்களுடைய நாமதேயங்களென்ன?

சுந்தராநந்தன்:—என்பெயர் சுந்தரன்; அவன்பெயர் சுரூபன்.

ஞாநதீபர்:—சரி, உங்களுடைய நாமதேயங்களும் அழகாகவே யிருக்கின்றன! அது கிடக்க. இப்போதிருக்கிற ராஜன் என்ன அவ்வளவு பாபியா? இதற்கு முன்னே உங்களுடைய ராஜாவும் ராஜ்ஞியும் நம்முடைய ஆசிரமத்தில் ஏகராத்திரந் தங்கி மறுநாட் சோளதேசத்திற்கு நம்முடைய அநுமதிப் பிரகாரம் போனார்கள். அவர்களைத் துரத்திய பிற்பாடும் இந்தச் சூரசேநவர்மனுடைய கடோரம் குறையவில்லையா?

சுந்தரன்:—சுவாமிகாள்! அவன் செய்யும் அநீதங்களைக் குறித்துயான் சொல்லுவது அவ்வளவு சரியானதன்று. ஏனென்றால் யான் பூர்வராஜாவிற்கு வேண்டியவன். இப்போது என்னுடன் வந்திருக்கிற சுரூபனோ தற்காலத்துள்ள சூரசேந வர்மனுக்கு வேண்டியவன். அவனிடம் வேண்டுமென்றாற் கேளுங்கள்.

சுரூபன்:—சுவாமிகளே! எங்கள்ராஜா சூரசேநவர்மர் எவ்வளவோ நியாயமாய் எங்கள் சேரதேசத்தில் அரசாண்டுவந்தார். அப்படி யிருந்தவர் பாண்டியதேசத்தைச் செயித்தவுடனே குணம் மாறி அநியாயஞ் செய்யத் தொடங்கிவிட்டார். முதல் முதலில் முந்தியிருந்தராஜா சற்குணனையும் அவன் மனைவியையும் சிறைச்சாலையிலே யிட்டார். அப்புறம் அந்தராஜா சற்குணன் மகனை அவனுடைய தாயார் தகப்பனரோடு வையாமல் வேறு சிறைச்சாலையில் வைத்தார்! பிறகு சற்குணனையும் அவன் மனைவியையும் காட்டில் துரத்திவிட்டார். அதன் பிற்பாடு அவன் மகன் சிறைச்சாலையி லிருப்பவனையுங் கொல்லத் தலைப்பட்டார்!

ஞாநதீபர்:—ஆகா கா கா! மகாபாபம்! பரமசண்டாளன்! பதிதன்!—(மௌனம்) இவற்றிற் கெல்லாம் நாம் என்ன பண்ணலாம்? சகலமும் சிவாக்ஞை!—அந்தப்பாதகனைப் பற்றி யொன்றும் நாம் இனிமேற் பேசவேண்டாம்.—சரி. இருக்கட்டும். நீங்கள் இருவரும் இப்படி நித்திரை கூட இல்லாமல் ராத்திரி காலத்திலே யொருவருக்குந் தெரியாமல் ஓடி வருவானேன்?

சுந்தரன்:—பொழுது விடிந்தால் எங்க ளிருவரையுங் கொல்லப்போகிறதாக அரசன் சொல்லிய சங்கதி யெங்கள் காதிற்பட்டது. உடனே யாங்கள் ஒருவரொடுஞ் சொல்லாமற்புறப்பட்டுவந்துவிட்டோம். நீங்களே யெங்களுக்கு அடைக்கலம். ஆகையால் எங்களைக் காத்து ரக்ஷிப்பது தங்களைப் பொறுத்தது.

ஞாநதீபர்:—அதற்கு நீங்கள் யோசனை செய்யவேண்டுவதில்லை. நம்முடைய சிஷ்யன் ஆத்மநாதன் வந்ததும் உங்கள் இரண்டுபேரையும் சோளதேசத்தி லிருக்கும் உங்கள் ராஜா சற்குண பாண்டியனிடமே யனுப்புகின்றோம். பயப்படாதிருங்கள்!

சுரூபன்:—கருணாநிதியாகிய தங்களைச் சரணமடைந்த பிற்பாடும் எங்களுக்குப் பயமுண்டாகுமோ?

ஞானதீபர்:—அவையெல்லாம் சரிதாம். நீங்கள் நேற்றிராத்திரி யெல்லாம் நித்திரையில்லாமல் வழி நடந்ததனாலே யுங்களுக்கு அலுப்பாயிருக்கக்கூடும். ஆகையால் நீங்களிரண்டுபேரும் நம்மோடு வாருங்கள். உங்களுக்கு ஒரு விடுதியிடந் தருகின்றோம். அவ்விடத்தில் நன்றாய் அலுப்பாற நித்திரை செய்யுங்கள். இன்று சாயங்காலமே உங்களிருவரையும் சோளராஜ்யத்திற்கு அனுப்புவோம்.

இருவரும்:—இதோ வருகின்றோம்.

[யாவரும் போகின்றனர்]

மூன்றும் அங்கம் முற்றிற்று

# அங்கம் - ௪

## முதற்களம்

இடம்:—பாண்டியனரண்மனை
காலம்:—காலை
பாத்திரம்:—சூரசேநன்

**சூரசேநன்:**—(தனக்குள்) நாம் இனிமேல் தாமசமென்பதே செய்யக்கூடாது. வீரேந்திரசோழன் நம்முடைய தேசத்தின் மீது படையெடுத்து வருவதற்காகத் தக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றானென்று கேள்விப்பட்ட பிறகும் நாம் ஒன்றுஞ் செய்யாதிருப்பது சரியானதன்று. நாமும் தக்க ஏற்பாடுகள் செய்வதற்கு இப்பொழுதே தொடங்க வேண்டும் - நாம் நினைத்தது போலவே அவனும் படையெடுத்து வரப்போகின்றான். ஆகையால் நாமும் நம்முடைய அந்தரங்க எண்ணத்தை இன்றைக்கே நிறைவேற்றிவிடவேண்டும். அப்புறம் மேல்நடக்கப் போகிறதைப் பார்த்துக் கொள்வோம்.

[சேவகன் வருகின்றான்.]

**சேவகன்:**—மகராசா! சிறைகாவக்காரர்கள் இரண்டுபேர் வாசலிலே வந்திருக்கிறாக.

**சூரசேநன்:**—அவர்களை யிங்கே வரச்சொல்.

**சேவகன்:**—மகராசா! அப்படியே.

[சேவகன் போகின்றான்.]

**சூரசேநன்:**—நாம் அவர்களுக்காகச் சொல்லியனுப்ப வேண்டுமென்று எண்ணவும் அவர்களும் வந்து விட்டார்களே!!

[காவலாளர் வருகின்றனர்.]

இப்படி, சமீபத்தில் வாருங்கள். என்ன சமாசாரம்? சொல்லுங்கள்.

முதற்காவலாளன்:—மகாராசாவே! நடந்த சங்கதியை நாங்க என்னண்டு சொல்வோம்! எங்க காவலிலிருந்த ராசா மகன் சுந்தராநந்தன் நேற்றிராவிலே சிறையிலுள்ள மதிலேறி உடம்பெல்லாம் காயப்படுத்திக்கிட்டு வெளியே குதிச்சு ஓடினன். குதிச்ச வுடனே காதிலே சத்தங்கேட்டிச்சு. உடனே நாங்க வெளியே வந்துபார்த்தா இந்தப் பய ஓடினன்! உடனே நாங்களும் அவனைத் தொடர்ந்து கிட்டே ஓடினேம். அவனேடே நாங்களோடக் கடைசியிலே அதனை வெகுதொலைபோய்ப் பிடிச்சோம். உடனே அவன் கையிலே என்னவோ ஒண்ணுவச்சுக்கிட்டு இதோ நிக்கிறனே இவனைக் காயப்படுத்திப் போட்டான்! உடனே எங்களுக்கும் அவனுக்கும் சண்டை நடந்திச்சு. அந்தச் சண்டையிலே நாங்க அவனைக்கொண்டு போட்டோம். அதுக்காக மகாராசா! எங்களை மன்னிக்கவேணும்.

(பாதங்களில் விழுகின்றனன்.)

சூரசேநன்:—அடே! எழுந்திரு! அவனை யோடிப்போக விட்டு விட்டு இங்கே வந்து பொய்யெல்லாம் பேசுகின்றயா?

இரண்டாங்காவலாளன்:—இல்லை, இல்லை. மகராசா! நாங்க பொய்பேசவில்லை. நீங்க வேணுமிண்டாலும் வந்து அந்தப் பய ஏறிவிளுந்த மதிலைப்பாருங்க. அவன் உடம்பிலே காயப்பட்டு ரத்தம் சிந்தினது கூடத்தெரியும்! மகராசா!

சூரசேநன்:—நிஜந்தான?

(முதற்காவலாளன் எழுகின்றன்.)

முதற்காவலாளன்:—ஆமாம். நிசந்தான். மகராசா! நாங்க அவன் தலையைக்கூடக் கொண்டாந்திருப்போம்.

சூரசேநன்:—சீ, சீ! அது கூடாது.

இரண்டாங்காவலாளன்:—அதுதான், மகராசா! நாங்க எங்கே ஊராருக்குத் தெரிஞ்சிட்டா என்னவாவதுகலகங்கிலகமுண்டாகுமோண்டு பயந்து அங்கனேதானே குளிவெட்டிப் புதைச்சுப் போட்டம்! தோண்டித் தலையைக் கொண்டாரச் சொன்னாக் கொண்டுக்கிட்டுவாராம். மகராசா!

சூரசேநன்:—அவையெல்லா மிருக்கட்டும். அடே! இந்தச் சங்கதி யூராருக்குத் தெரியாதே?

இருவரும்:—தெரியவே தெரியாது, மகராசா!

சூரசேநன்:—சரிதான். நீங்கள் இருவரும் இப்போது போங்கள். இதைக்குறித்து நாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம். மந்திரி சுசீலர் வருகிற சமயமாயிற்று.

[சிறைகாவலாளர் போகின்றனர்.]

(தனக்குள்) இப்போது இவர்கள் செய்தது நமக்கு நல்லதாய்த்தான் தோன்றுகின்றது. ஆனாலும் இஃது ஊராருக்குத் தெரிந்து விட்டால் என்ன செய்கிறது?-(மௌனம்) ஜனங்கள் ஏற்கெனவே நம்மைக் ‘கொடியன்’ ‘கொடியன்’ என்று சொல்லுவதாகக் கேள்விப்படுகின்றோம். இப்போது இந்தச் சங்கதியும் அவர்கள் காதிற் படுமானால் ஏதேனும் ஒரு கலகம் கட்டாயமாய் நடக்கத்தான் நடக்கும். இதற்கென்ன செய்யலாம். கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே!—(மௌனம்) நேற்றிரவு நாம் கண்டகனவை நினைக்கும்போது உடம்பு நடுங்குகின்றதே! வீரேந்திரசோழன் நம்மைக்காலில் விலங்கிட்டுச்

சற்குணவழுதியின் முன் நிறுத்தியிருப்பதாகக் கண் டோமே! அப்படியும் நேரிடக் கூடுமோ?—

[செவிலி வருகிறாள்.]

**செவிலி:**—(அழுது கொண்டு) மகாராஜா! நமது குமாரி ரூபாவதியைக் காணோம்.

**சூரசேநன்:**—(பிரமித்து) ஆ! என்ன!

[கோமளவல்லி வருகின்றாள்.]

**கோமளவல்லி:**—(அழுதுகொண்டு) ஐயோ! ரூபாவதீ! நேற்றிராத்திரி நான் கண்டகனா நிஜமாய்விட்டதே! என்னருமை மகளே! நீ யெவ்விடம்போனாய்? உன்னைக்காணாமல் ஒரு நிமிஷமாவது என் உயிர்நிற்குமோ?—ஆ! தெய்வமே! இப்படிச்செய்வது உனக்குத்தகுமோ?—மீனாட்சி! பரதேவதே! உன் சந்நிதாநத்தில் இப்படி நடப்பதுமுண்டோ?—எனக்கொரே மகளாயிருந்த ரூபாவதி! உன்னை நேற்றிராத்திரி யொரு பெரியபூதம் தூக்கிக்கொண்டு போவதாகக் கனாக்கண்டேனே! ஓ! அப்படியேதான் ஒருவேளை நடந்துவிட்டதோ?—(மௌனம்)

(இரங்கிப் பாடுகின்றாள்)

பொன்னனைய வெழின்மாதே புகழுரூபாவதியென்
புதல்வீ சேர
மன்னவன்றன் காதல்வயின் முளைத்திட்டு மகிழ்பூத்து
மணம் பரப்பிக்
கன்னன்மொழிச் சாறொழுகுங் கவினுடைய கனியேயென்
கண்போல் வாளே
யென்னருமை மகளாய நினையிழந்தும் யான்றனியே
யிருப்ப தேயோ! (கூச)

திங்களொனு முகத்தாளே தெவிட்டாத தெள்ளமுதே
தேன்போல் வளே

சங்கமெனுங் களத்தாளே நீலமெனுங் கோலவிழித்
தையால் செய்ய
தங்கமெனும் புரத்தாளே காந்தளெனுங்கரத்தாளே
தகைசேர் மானே
செங்குமுத விதழுறுரூ பாவதியே யெவ்விடத்துச்
சென்றாய் சென்றாய் ? (சுரு)

சேவிலி:—ஐயோ! உடம்பு சௌக்கிய மில்லாமையினாலே நேற்று நீ பூஞ்சோலைக்குக் கூடப் போகவில்லையே!—ரூபாவதி! ரூபாவதி! எங்கே போனாய் ?—ஒ! உன்படிக் கையறை நீ யில்லாமையால் வெறிச்சென்று போய்விட்டதே!—

சூரசேநன்:—வீண் கூக்குரற் போடாதீர்கள்! நன்றாய்த் தேடினீர்களா ?

கோமளவல்லி:—தேடியும் காணேம். ஐயோ! தெய்வமே! இந்த மாதிரி நாங்கள் புலம்பிக் கொண்டிருப்பதைக் கேட்டும் உனக்கு இரக்கமில்லையோ?—மீனாட்சி சுந்தரேசவரா! உன்னை ஒருநாட்கூடத் தவறாமல் தரிசனம் பண்ணினதன் பலன் இதுதானோ! இதுதானோ!!—ஐயோ! அவளுடைய தோழிகளைக் கூட்டிவரப் போன ஆளும் வரவில்லையே! (இரங்கிப் பாடுகின்றாள்.)

எத்தனையோ தவம்புரிந்து மியம்பருஞ்பன் றேன்புகள்யா
னெடுத்தும் பெற்ற
வுத்தமிரூ பாவதியோ யொருமொழியு முறையாதெங்
கொளித்திட் டாயோ ? (சுசு)
அஞ்சுகமே கிஞ்சுகமே யன்புறுரூ பாவதியே
யருளி லார்போல்
வஞ்சகமே புரிந்து மறைந்துநின்று வருத்தவெமை
மனங்கொண் டாயோ ? (சுஎ)

[சூரசேநன் போகின்றான்.]

சேவிலி:—தாயே! நாம் இப்படிப் புலம்புவதிற் பிரயோசன மில்லை. எல்லாவற்றிற்கும் அம்புஜாட்சியும் கநகமாலையும் வரட்டும். அவர்களிடம் விசாரிப்போம். அதுவரையிற் சற்று விசனப்படாம லிருக்கவேண்டும்.

கோமளவல்லி:—ஐயோ! நீ யென் விசனத்தைக் கொஞ்சம் கூட அறியாமற் சொல்லுகின்றாயே! நேற்றிராத்திரி ஒரு சாமமட்டும் என்னோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு அப்புறம் படுக்கை யறைக்குப்போனாள். அவ்வளவுதான் அதன் பிற்பாடு இப்பொழுதுதான் நீ சொல்லியபின் பார்த்தேன். அவளைக் காணேன்! என்ன செய்வேன்! என்ன செய்வேன்!!

[அம்புஜாட்சியுங் கநகமாலையும் வருகின்றனர்.]

சேவிலி:—அதோ அம்புஜாட்சியுங் கநகமாலையும் வந்துவிட்டார். இப்பொழுது அழவேண்டாம். கொஞ்சம் பேசாதிருந்தால் நல்லது.

அம்புஜாட்சி:—என்னை வரும்படி சொல்லி யனுப்பினீர்களாமே! என்னத்திற்கு அவ்வளவு அவசரம்? என்ன காரியம் இப்போது?—என்னவோ போலிருக்கிறீர்களே!

கநகமாலை:—ரூபாவதி யெங்கே காணோம்? உடம்பு சௌக்கியமா யிருக்கின்றாளோ இல்லையோ?

கோமளவல்லி:-ஐயோ உங்களுக்கொன்றுந் தெரியாதோ?—

சேவிலி:—தாயே! கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். ஏண்டி! அம்மா! அம்புஜாட்சி! உனக்கு என்னவாவது ரூபாவதியைப் பற்றித் தெரியுமா? நேற்றிராத்திரி யிருந்தவளை யின்று பொழுது விடிந்து பார்த்தால் காணோமே!

அம்புஜாட்சி:—இதென்ன! ஆச்சரியமாயிருக்கின்றதே!

கோமளவல்லி:—ஓ! ரூபாவதி! உன்னை மறுபடியும காண பேனே!

நகமாலை:—(அழுது பெருமூச்செறிந்துக்கொண்டு) அம்புஜாட்சி! இது என்ன! கனவிலுங் காணாத சமாசாரமாயிருக்கிறதே!

அம்புஜாட்சி:—(பெருமூச்செறிந்து) ரூபாவதீ! ரூபாவதீ! யாங்கள் உன்னோடு நேசங்கொண்டு அனுபவித்த பாக்கியம் இவ்வளவு தானோ! இவ்வளவு தானோ!!

(இரங்கிப்பாடுகின்றாள்)

உமையவடன் னருளாலே யுதித்திடுரூ பாவதியே
யிமையவரு மறியாத வின்னமுதே யெழிலுடனே
கமையுமினி தோருருவாய்க் கலந்தசுவைக் கரும்பேநீ
யெமையலவந் திருக்கும்வண மியற்றுதலு நேரேயோ? (சுஅ)

நகமாலை:—(இரங்கிப் பாடுகின்றாள்.)

அன்புகுடி கொண்டவளே யானந்தப் பூங்குயிலே?
யின்புறுரூ பாவதியே யெவ்விடத்துச் சென்றாயோ? (சுகூ)
கன்னிகைரூ பாவதியே காமன்வென்றிக் கொடியேயெ
மின்னலிரிந் தேகிடுவா னெம்மெதிர்நீ தோன்றாயோ? (எ0)
உருக்கியிட்ட பொற்கொடியே யொண்ணுதல்ரூ பாவதிநீ
யிருக்குமிடஞ் சற்றேனு மெமக்குரைக்கக் கூடாதோ? (எக)
கோட்டையினைச் சுற்றிநின்ற கோதறுபூங் காவனமே
வாட்டடங்க ளெண்மீட்டும் வந்திடுத லுண்டுகொலோ? (எ உ)

கோமளவல்லி:—(இரங்கிப் பாடுகின்றாள்.)

நாயாகு மென்னிடத்துன் றண்குமுத வாய்திறந்து
வையார்தோட் பெண்மயிலே வேண்டுமொழி பேசாது
தீயாரி னெங்கொளித்தாய் சிறடிக ளேவுமா
வேயேயிஃதென்னைகொலோ வென்மகளே! என்மகளே!! (எ௩)

என்னினிய பெண்ணமுதே யெங்கொளித்தா யெங்கொளித்தாய்
துன்னு மெழிற்றோகாய் சொல்லா யொருமொழியே. (எச)
ஐயோ மறந்தனையோ! ஐயோ பறந்தனையோ!
ஐயோ துறந்தனையோ! ஐயோ விறந்தனையோ! (எரு)

[சூரசேநன் வருகின்றான்.]

சூரசேநன்:—நீங்கள் சற்று அமரா திருங்கள். பதறவேண்டாம். நான் இப்பொழுதே சேவகர்களை நாலாபக்கமும் அனுப்பித் தேடச்சொன்னேன். மந்திரி சுசீலருக்கும் ஆளனுப்பியிருக்கிறேன். அதுவரைக்குங் கூக்குரற் போடாதிருங்கள்.

[யாவரும் போகின்றனர்.]

## இரண்டாங்களம்

இடம்:—நயவசநன் வீடு
காலம்:—பிற்பகல்
பாத்திரங்கள்:—நயவசநன், சிலகனவான்கள்

முதற்கனவான்:—ஏன்? ஐயா! நயவசநரே! இந்தச் சூரசேநவர்மன் என்ன இப்படிக் கெட்டதொழில்கள் எல்லாஞ் செய்ய ஆரம்பித்துவிட்டான்? அவன் செய்கிற தொன்றும் நன்றாயிருக்கவில்லையே!

நயவசநன்:—ஆமாம். என்ன செய்கிறது! நாளுக்குநாள் அவன் கொடுமை யதிகப்படுகின்றதே யொழியக் குறைகிறதைக் காணோம்!

இரண்டாங்கனவான்:—இப்பொழுது மாத்திரம் எல்லாரும் "என்ன செய்கிறது என்ன செய்கிறது!" என்று சொல்லுங்கள். அப்பொழுதே நான் சொன்னபடி கேட்டிருந்தால் எல்லாஞ் சரியாய்ப் போயிருக்கும்!

மூன்றாங் கனவான்:—எல்லாருமாய்ச் சேர்ந்து காரியத்தைக் கெடுத்தீர்கள்! இப்பொழுது கிடந்து ஒருவரையொருவர் பார்த்து விழியுங்கள்!

முதற்கனவான்:—எல்லாஞ் சுந்தரானந்தனைக் கேட்டுச் செய்யலாமென்று நயவசநர் சொன்னபோது, நீங்கள் தாமே சரி சரியென்று ஒத்துக்கொண்டு பேசாதிருந்துவிட்டு இப்போது பேசவந்தீர்களே! இப்படி நடக்குமென்று தெரிந்திருந்தால் அப்பொழுதே சொல்லுகிறதுதானே!

இரண்டாங்கனவான்:—சுந்தரானந்தனைக் கேட்டதிலே யென்னபிசகு? அவன் தான் நயவசநர் தம்மிஷ்டப்படி செய்யட்டுமென்று சொல்லிவிட்டானே! அவன் பேரிலே தவறொன்றுமில்லை.

மூன்றாங்கனவான்:—எல்லாம் இந்த நயவசநராலேயே வந்தன. அப்போதே என் எண்ணப்படி விட்டிருந்தால் இப்படி யெல்லாம் அநியாயம் ஏன் நடக்கும்?

முதற்கனவான்:—அப்படியென்ன ஐயா அநியாயம் நடந்து விட்டது?

இரண்டாங்கனவான்:—நம்முடைய சற்குண வழுதிக்காகச் சோழன் வீரேந்திரன் படையெடுத்து வரப்போகின்றானென்பது கேட்டு இந்தச் சூரசேநன் நம்முடைய சுந்தரானந்தனைக் கொன்று விடுவதாகத் தீர்மானித்து விட்டானாம். இதைவிட அநியாயமும் கொடுமையும் வேறென்ன வேண்டும்?

நயவசநன்:—ஐயோ! கனவான்களே! நடந்த கொடுமை அவ்வளவுதான் என்று நினையாதீர்கள். அதற்குமேலும் நடந்துவிட்டது! நடந்துவிட்டது! நம்முடைய சுந்தரானந்தனை—

மூன்றாங்கனவான்:—என்ன ? என்ன ? நம்முடைய இளவரசன் சுந்தராநந்தனுக் கென்ன ?

நயவசநன்:—ஐயோ ! உமக்கு யான் எப்படிச் சொல்லுவேன்.

இரண்டாங்கனவான்:—பாதகமில்லை. சொல்லுஞ் சொல்லும். சீக்கிரம் !

நயவசநன்:—ஐயா ! இந்தப் பாவி சூரசேநன் நம்முடைய சுந்தராநந்தனை நேற்றிராத்திரிக் கொன்று விட்டான் ! கொன்று விட்டான் !!

மூன்றாங்கனவான்:—அப்படியா செய்தான் ? இனிமேல் ஒரு நிமிஷமாவது தாமதியேன் ! இதோ ! பாருங்கள் ! அந்தப் பாதகனை நான் கொன்றுவிடுகின்றேன் ! உங்கள் பேச்சை யினிக் கேட்கவே மாட்டேன் ! இந்தச் சூரசேநவர்மனைத் தொலைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் !

[மூன்றாங்கனவான் போகின்றான்]

நயவசநன்:—இப்படி யெல்லாந் தோன்றினபடி குதிப்பீர்களென்று தானே யான் உங்களிடஞ் சொல்லக் கொஞ்சம் யோசித்தேன் !

முதற்கனவான்:—இவர்க ளெப்போது மிப்படித்தானே ! ஆழ்ந்து யோசனை பண்ணுகிறதில்லை. ஹா ! ஹா ! என்று குதிக்கத்தான் தெரியும்.

இரண்டாங்கனவான்:—சரிதான். உங்கள் பேச்சைக்கேட்டால் எல்லாக் காரியமும் வெகு சீக்கிரத்தில் முடிந்துவிடும். நீங்களிரண்டுபேரும் இப்படியே பேசிக்கொண்டிருங்கள் ! இந்தச் சமாசாரத்தைக் கேட்டதுமுதல் எனக்கு இங்கே இருக்கத் தோன்றவில்லை ! யானும் போகின்றேன்.

[இரண்டாங்கனவானும் போகின்றான்]

முதற்கனவான்:—இதென்ன? இவர்களிப்படி யாரம்பித்து விட்டார்கள்! ஏனையா? நயவசநரே!

நயவசநன்:—ஆமாம். அதற்கு நாமென்ன செய்யக் கூடும்? நானோ சூரசேநவர்மனுக்கு வேண்டியவன். ஆகையால் நானிந்த விஷயங்களில் தலையிடுகின்ற சங்கதி யரசனுக்குத் தெரியாதிருக்க வேண்டுமே யென்று ஏக்கங்கொண்டிருக்கிறேன்.

முதற்கனவான்:—(தனக்குட் பாடுகின்றான்.)

நன்றே நுமதுசெயல்! நன்றே நுமதுமொழி!
பொன்றுதலே மேலாமிப் புல்லுரைகள் பேசலினும்! (எசு)

இவர்கள் தங்கள் எண்ணத்தைச் செய்து முடித்தாற் சரிதான். மற்றைப்படி தவறிவிட்டா லென்ன செய்கிறது?

நயவசநன்:—படுகிறார்கள் அவஸ்தை! நமக்கென்ன? நம்முடைய யோசனையைத் தான் கேட்கமாட்டோ மென்று போய்விட்டார்களே! அதைக் குறித்து நாம் ஏன் கவலைப் படவேண்டும்? (பாடுகின்றான்)

ஒற்றுமை யின்றெனி னுற்ற செய்தொழில்
குற்றமாய் முடிந்திடுங் குறையு மாயிடும்
பற்றிமேற் கொண்டன பாறிப் போயிடு
மெற்றுநீர்த் திரையுலா முலகி னென்பவே. (எஎ)

[மூன்றாங்கனவான் மீட்டும் வருகின்றான்.]

முதற்கனவான்:—ஏன்? ஐயா! போனீரே! என்ன சங்கதி? திரும்பிவந்தீர்!

மூன்றாங்கனவான்:—ஓ! நயவசநரே! ஓடிவாரும்! எழுந்திரும்! குதிப்போம்! வாரும்!

நயவசநன்:—ஏன்? உம்முடையகாரியம் முடிந்துவிட்டதோ? என்ன?

மூன்றாங்கனவான்:—இல்லை, இல்லை. வேறு சமாசாரம்.

முதற்கனவான்:—வேறே யென்ன சமாசாரம்? என்ன?

மூன்றாங்கனவான்:—நாம் செய்யாத போதிலும், சுவாமி சுந்தரேசுவரராவது செய்வாரேயன்றோ? அவருக்குங் கூடவா கண்களில்லாமற் போய்விடும்! ஹூம் இவ்வளவும் வேண்டு மந்தக் கொலைப்பாதகனுக்கு!

நயவசநன்:—என்ன? சோழன் படையெடுத்து வந்து விட்டானோ?

மூன்றாங்கனவான்:—அதுவுமில்லை. வேறுசங்கதி. எழுந்திரும்! களிக்கூத்தாடும்! அப்புறஞ் சொல்லுகின்றேன்.

முதற்கனவான்;—என்ன சங்கதி? சொல்லுமே!

மூன்றாங்கனவான்:—அரசன் மகள் ரூபாவதியைக்காணவில்லையாம். ஏதோ பூதம் தூக்கிக்கொண்டு போய்விட்டதாம்! அவ்வளவுதான் சமாசாரம்.

நயவசநன்:—ஈதென்னே? வேடிக்கையா யிருக்கின்றதே! நிஜந்தானோ?

மூன்றாங்கனவான்:—ஆம். நிஜந்தான்! அதற்குஞ் சந்தேகமுண்டோ?

முதற்கனவான்:—இப்படி யெல்லாம் அநியாயஞ் செய்தால் தெய்வந்தான் பொறுக்குமோ? (பாடுகின்றான்)

மங்கை பாகனார் மாமதி வேணிய
ரெங்க ணும்விழி யேய்ந்த விறைவனார்
பொங்கு றும்மநி யாயத்தைப் போக்கிலார்
தங்கி நிற்பர்கொல்? தண்ணரு ளில்லர்கொல்? (எஅ)

மூன்றாங்கனவான்:—அதுதான் தெய்வமும் பொறுக்கவில்லை!

நயவசநன்—அப்படியாயின், நான் அரண்மனைக்குப் போய்த் தெரிந்துகொண்டு வருகின்றேன்.

முதற்கனவான்:—சரி. இப்போதெனக்கும் போகவேண்டும்,

மூன்றாங்கனவான்:-நானும் வருகின்றேன். இரும். போகலாம்.

நயவசநன்:—நீங்கள் எல்லாரும் இன்றை யிரவு வாருங்கள். எல்லாம் பேசுவோம் நான்போய்ச் சகல சங்கதிகளையும் பற்றி விசாரித்துக்கொண்டு வந்துவிடுகின்றேன்.

மற்றையிருவரும்:—சரி. அப்படியே செய்வோம்.

[யாவரும் போகின்றனர்.]

---

## மூன்றாங்களம்

இடம்:—பாண்டியனரண்மனை

காலம்:—பிற்பகல்

பாத்திரங்கள்:—சூரசேநன், சுசீலன்

சுசீலன்:—அஃதொன்றும் நாம் பதறக் கூடாது. கொஞ்சம் அமைதியோ டிருக்கவேண்டும்.

சூரசேநன்:—இஃதென்னை? நம்பக்கூடாததா யிருக்கின்றதே! இராத்திரிப் படுக்கையறையி லிருந்தவளைப் பொழுது விடிந்து பார்த்தாற்காணோ மென்றால் எவ்வளவு ஆச்சரியமா யிருக்கின்றது! யாரைக் கேட்டாலும் "ஆ அப்படியா?" என்று சொல்லுகின்றார்களே யொழிய வேறொன்றுஞ் சொல்லுகின்றார்களல்லர். ஏன்? சுசீலரே இதற்கென்ன செய்யலாம்?—இந்தவூரார் விஷயத்தில் நியாயமென்பதே பார்க்கப்படாது. இருக்கட்டும். எல்லாவற்றிற்குஞ் சொல்லுகின்றோம் அவர்களுக்கு!

சுசீலன்:—தேடிக்கொண்டு வரப்போன சேவர்கள் வரட்டுமே! எல்லாச் சங்கதியுந் தாமே தெரியும். பதறுவானேன்?

சூரசேநன்:—ஓ! சுசீலரே! எமக்குத் தோன்றுகிற மட்டில்,

இந்த ஊரிலேதான் யாராவது இராத்திரியில் அவள் தூங்கும்போது அவளைத் தூக்கிக்கொண்டு போய் எங்கேயாவது கொன்று புதைத்து விட்டார்களோ என்று சந்தேகமா யிருக்கின்றது. இதுமாத்திர முண்மையென்று தெரிந்தால், தெரிந்த அந்த விநாடியிலேயே ஊர் முழுவதையும அக்கினிபகவானுக்கிரையாக்கி விடுவோம்.

சுசீலன்:—தாங்கள் சந்தேகப்படுகிறபடியே சில கொலைகாரப் பயல்கள் இந்த காரியஞ் செய்திருந்தாலும், அரசரா யிருக்கிற தங்களுக்கு ஊர் முழுவதையும் பொசுக்கிவிடுவது அழகன்றே! தாங்கள் குற்றவாளிகளைத் தாமே தண்டிக்கவேண்டும்.

சூரசேநன்:—எமக்குக் கொடுங்கோன் மன்னன் என்று பேர் வந்தபோதிலும் பாதகமில்லை. அவர்களைக் கொல்லாமல் விடமாட்டோம். சந்தேகப்பட்டவர்களை மாத்திரஞ் சித்திரவதை செய்வோம்.

[நயவசநன் வருகின்றான்.]

சுசீலன்:—அதோ நயவசநர் வருகின்றார்.

சூரசேநன்:—ஏ! சேவகா!

நயவசநன்:—மகாராஜா அவர்களுக்கு அடியேன் நயவசநன் வந்தனம்.

சேவகன்:—மகராசா! சித்தம்.

சூரசேநன்:—இந்த நயவசநப் பயலைப் பிடித்து அடித்துக் கட்டி விலங்கிட்டுச் சிறைச்சாலையிலே யிடு. நயவசநனாம்! இவன் நயவஞ்சகன்!

சேவகன்:—நயவசநரையா?

சூரசேநன்:—ஆம்! இந்த நயவஞ்சகப் பயலைத்தான்!

[நயவசநனை உதைக்கின்றான்.

சுசீலன்:—(தனக்குள்) இஃதென்னை? விநோதமா யிருக்கின்றதே!

நயவசநன்:—அப்படி மகாராஜா அவர்களுக்கு விரோதமாக அடியேன் ஒன்றுஞ் செய்யவில்லையே! அப்படி யிருக்க என்னை வீணே தண்டிப்பானேன்?

சூரசேநன்:—என்னடா! சேவகா! சும்மா நிற்கின்றாய். இவன் இப்படித்தான் பேசுவான். நீ உன் காரியத்தைப் பாரடா

[சேவகனை யுதைக்கின்றான்.]

சேவகன்:—இதோ! உத்தரவுப்படி செய்கிறேன் மகராசா!

[நயவசநனை அடித்து விலங்கிடுகின்றான்.]

நயவசநன்:—ஐயோ! அடியேன் ஒரு பாவமும் அறியேனே!

சுசீலன்:—ஈதென்னை! நிஜந்தானா? நான் இதுவரையிலும் விளையாட்டிற் காயினுஞ் செய்கிறீர்க ளென்றன்றோ நினைத்தேன்! என்ன? இப்படி இவ்விடத்திலேயே விபரீதஞ் செய்ய ஆரம்பித்தல் சரியானதாகத் தோன்றவில்லையே!

சூரசேநன்:—ஓ! சுசீலரே! தாங்கள் இந்த விஷயங்களிலெல்லாந் தலையிடாம லிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். கொண்டுபோ சிறைச்சாலைக்கு. அப்புறம் இதைக் குறித்து விசாரித்துக் கொள்வோம்.

சுசீலன்:—(தனக்குள்) அரசனுக்குப் பெண்ணைக் காணாமையாற் பைத்தியம் பிடித்துவிட்டதுபோலும். இப்பொழுதே யிப்படியிருந்தால் அப்புறம் சேவகர்கள் வந்து காணோமென்று சொல்லிவிட்டால் அப்போது அரசனுடைய குணம் எப்படியிருக்குமோ? ஈசனே! இதுவுமுன் லீலா விசேஷமோ?

சூரசேநன் :—சீக்கிரங் கொண்டுபோ. தாமதஞ் செய்யாதே!
[நயவசநனைச் சேவகன் சிறைக்குக் கொண்டுபோகின்றான்.]
கேட்டீரா? சுசீலரே! உமக்கொன்றுந் தெரியாதே இந்தப் பயலுடைய வஞ்சகங்களெல்லாம்! தினந்தோறும் தன்னுடைய வீட்டில் இரண்டு மூன்று கனவான்களோடு தானுமிருந்துகொண்டு நம்மைக் கொலைசெய்வதற்கு யுக்திகளெல்லாம் யோசிக்கின்றானாம். இரண்டு மூன்று நாளாய்க் கேள்விப்பட்டேம். அஃது இன்று காலமேதான் ஸ்பஷ்டமாய்த் தெரிந்தது. அதுமுதல் இவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம். இவனே ஒருவேளை என்மகளைத் தூக்கிக்கொண்டு போய்க் கொலை செய்திருப்பான்!

சுசீலன் :—அப்படியிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை.
[சேவகன் வருகின்றான்.]

சேவகன் :—மகாராசா! புத்தி.

சூரசேநன் :—என்ன? அவனைக் கொண்டுபோய்ச் சிறையிலடைத்து விட்டாயா?

சேவகன் :—ஆமாம். மகாராசா! சிறைகாவக்காரரிடம் ஒப்பிச்சிட்டு வந்தேன். மகராசா! தேடிக்கிட்டு வரப்போன சேவகங்க வந்திருக்கிறாக. இது விசயஞ் சமுகத்திலே தெரியப்படுத்தினேன்.

சூரசேநன் :—எல்லாரையு முள்ளே வரச் சொல்லாமல் அவர்களில் முக்கியமானவனை மாத்திரம் வரச்சொல், போ.

சேவகன் :—சித்தம்.
[சேவகன் போகின்றான்.]

சுசீலன் :—அவன் வரட்டும். இதோ கேட்போம்.
[சேவகர் தலைவன் வருகின்றான்]

சேவகர்தலைவன் :—மகாராசா அவகளுக்கு அடியேன் அநேகங் கோடி தெண்டம்.

சூரசேநன் :—என்ன! சொல்லு, சீக்கிரம்.

சேவகர்தலைவன் :—மகாராசா! நாங்க எட்டுப்பேர் தேடப் புறப்பட்டோம். மூலைக்கொருவராய்ப் போனோம். நாங்க எல்லாரும் இப்பத்தான் வந்து கூடினோம்.

சூரசேநன்:—என்னடா! சொல்லு. போனசங்கதி யென்னவாயிற்று!

சேவகர்தலைவன் :—மகாராசா! நாங்கள் போய்த் தேடிப் பாத்ததில் அகப்படவில்லை. விசாரித்த இடங்களிலுந் தெரியாது தெரியாது என்கிறாக.

சூரசேநன் :—நன்றாய்த் தேடினீர்களா?

சேவகர்தலைவன் :—ஆமாம். நல்லாத் தேடினோம். மகாராசா!

சூரசேநன் :—சரி, நீ போ.— [சேவகர் தலைவன் போகின்றான்.] (தனக்குள்) இருக்கட்டும். சந்தேகப்பட்டவர்களைப் பிடித்து அடித்துக் கேட்டால் உண்மை தானே வெளிப்படுகின்றது.—சுசீலரே! கேட்டீரா சமாசாரத்தை?

சுசீலன் :—ஆமாம், கேட்டேன்.—எல்லாவற்றிற்கும் நம்முடைய சேர ராஜ்யத்திற்கும் ஓராளை யனுப்பி அங்கும் விசாரித்தாலென்ன?

சூரசேநன் :—அதுதான் அவளைக் காணோமென்ற சமாசாரங் கேட்டவுடன் அனுப்பியிருக்கின்றேனே!

சுசீலன் :—ஆனால் சரிதான்.

சூரசேநன் :—உள்ளே அந்தப்புரத்திலே இவர்கள் தேடப் போனது முதல் ஆவலாயிருக்கின்றார்கள்.—அவர்களுக்கு யாம் போய் மனவருத்தப் படாதிருக்கும்படி ஆறுதல் சொல்லிவிட்டு வருகின்றேம்.

**சுசீலன்** :—ஆனால் யானும் கிருகத்திற்குப் போய்வருகின்றேன்.

**சூரசேநன்**: —சரி. [சூரசேநன் போகின்றான்]

**சுசீலன்**:—(தனக்குள்) யான் இச்சூரசேநனிடத்தில் மந்திரியாயிருப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கவே கூடாது! சற்குணவழுதியாரிடத்திலே மந்திரியாயிருந்த பிறகும்வேறொருவனிடம் அமைச்சனாயிருப்பது சரியன்றுதான். ஆயினும் ஜனங்களினுடைய நன்மையினைக்கருதியும், இவன்றானே வந்து என்னை வேண்டிக்கொண்டமையினைக் கருதியுமே யான் இயைந்தது. அஃது அப்படியிருக்க, இவன் வந்து சின்னாள்வரை யென் சொற்படியேகேட்டு நடந்து வந்தான். அப்பொழுது எல்லாஞ் செவ்வையாய் நடந்து வந்தன. இப்பொழுதோ எதுவுந் தனக்குத் தோன்றிய படிசெய்கின்றானே யன்றி ஒன்றிலும் என்னுடைய சொற்படிகேட்டு நடக்கின்றானல்லன். அநியாயங்களோ ஒன்றன்மேலொன்றாய் நடக்கின்றன! நம்முடைய வழுதிமகன் சுந்தராநந்தனைத் தானே கொன்றுவிட்டுச் சுவரேறிக் குதித்து ஓடுகையில் நிகழ்ந்த சச்சரவிற் கொலையுண்டானென்று பொய்க்காயினும் பறையறைவித்தான். விசாரணையென்பது ஒன்று மில்லாமல் தனக்கு யார்மீதேனும் அற்ப சந்தேகமிருக்குமாயின் அவர்களைக்கொன்று விடுகின்றான்! தன்மகள் காணமற்போனால் அதற்கு நயவசநரோ பிணைப்பட்டார்? இவ்வருமன் செய்வனவெல்லாம் நியாய விருத்தமேயாம். யான் இவனுக்கு மந்திரியாயிருத்தலே பெருந்தவறு! ஆயினும் என் செய்வது?

(பாடுகின்றான்)

மேற்கொண்ட தொழிலொன்று வெறுத்தக்கதாத லேப்பின்
பாற்கண்டு கடமையினைப் பாதியினில் விடலாமோ? (எக)
கரிசுடைய னுனுலுங் காசினியைக் காவல்செயு
மரசனுக்குப் பிறிதுசெய லம்மம்ம தீதன்றோ? (அ0)

யான் எப்பொழுது ஒன்று செய்வதாக ஒத்துக் கொண்டேனே அப்பொழுதே முதல் யான் அதனைச்செய்யக் கடமைப் பட்டவனுகின்றேன்! ஆகவே யான் எதில் தவறினும் கடமையில் தவறலாகாது. ஆதலின் இவ்வரசனுக்கு உறுதி பயப்பனவற்றையே செய்யப்புகுவேன்!

[சுசீலன் போகின்றான்.]

## நான்காங்களம்

இடம்:—சோமனரண்மனை
காலம்:—பிற்பகல்
பாத்திரங்கள்:—சுந்தரன், சுரூபன்

சுந்தரன்:—எனது சுரூபத்தையலே! நாமும் இத்தஞ்சைமாபுரிக்கு வந்து ஏறக்குறைய மூன்றுவார மாய்விட்டன. என்னுடைய தாய் தந்தையரால் நாம் இன்னரென்று கண்டு கொள்ளவுங் கூடவில்லை. பார்த்தனையா?—

சுரூபன்:—எனது சுந்தரக்குரிசிலே! நாம் இவ்வாறு எத்தனை நாள் ஒளித்துக்கொண்டிருப்பது? அவர்கள் நம்மையின்னரெனத் தெளியுமுன்னர் நாமே வெளிப்படுதல் நல்லதன்றோ?

சுந்தரன்:—எனது மகிழ்கூர் மடந்தையே! சற்றே பொறுத்துக்கொள். நாம் நம்மை வெளிப்படுத்திக் கொள்ளுங் காலம் இஃதன்று. எதுவுஞ் சமயம் அறிந்து செய்ய

வேண்டும்! மற்றைப்படி நீ சேரநாடு, பாண்டிநாடு, சோழ நாடு ஆகிய இந்த மூன்று தமிழ் நாடுகளையும் ஒருவாறு பார்த்திருக்கின்றாயே! இந்த மூன்று நாடுகளுக்குள்ளே எது மிகச்சிறந்தது? சொல். கேட்போம்.

சுரூபன்:—ஒவ்வொருநாடும் ஒவ்வொரு விஷயத்தில் உயர் வாய்த்தான் இருக்கின்றது. கல்வி செல்வங்களிலும் அழகிலும் பாண்டி நாடும், நற்குண நற்செய்கைகளிற் சேர நாடும், நிலவள நீர்வளங்களிலும் தெய்வபக்தியிலுஞ் சோழநாடும் சிறந்து விளங்குகின்றன.

[சற்குணனுஞ் சுந்தரியும் வருகின்றனர்.]

சுந்தரன்:—சமுகத்தில் அடியேன் சுந்தரன் நமஸ்காரம்.

சுரூபன்:—அடியேன் சுரூபனும் நமஸ்காரம்.

சற்குணன்:—ஓ! சுந்தரரே! என்ன? ஏதாவது விசேஷமுண்டோ? ராஜா வீரேந்திரர் என்னசெய்து கொண்டிருக்கின்றார்?

சுந்தரன்:—அப்படியொன்று மதிக விசேஷமில்லை. வீரேந்திர சோழமகாராஜா அவர்கள் தங்களை யழைத்து வரும்படி சொன்னார். வேறொன்றுமில்லை. ஏதோ நமது மதுரா புரிக்குத் தூதனுப்ப வேண்டுமாம்.

சற்குணன்:—அதுதானே! வேறொன்றுமில்லையே?

சுந்தரி:—ஏ! பிராணேசா! நேற்றைக்குச் சோமவாரம் என்று நாம் பஞ்சநத க்ஷேத்திரஞ்சென்று அவ்விடத்திற் கண்ட காட்சியை யென்னென்று சொல்வேன்?

சற்குணன்:—எனது பிரியசுந்தரி! நம்முடைய ஆலாசியக்ஷேத்திரத்துப் பிராமணர்களிற் பெரும்பாலார் ஸ்மார்த்தர் களே யொழியச் சைவர்களல்லர். அவர்கள் நம்முடைய சுந்தரேசரது ஆலயஞ்சென்று தரிசனஞ் செய்தபோதி

னும் ஆண்டுள்ள சிவபெருமானோடு அபேதமாய்க் கலந் தருளிய நாயன்மார் அறுபத்து மூவரையும் வணங்கு கின்றார்களல்லர். ஆனால் இவ்விடத்திலோ அந்தணாளரி லனேகர் சைவரேயாவார். இவர்கள் யாவரும் ஏகலிங்க சிவார்ச்சனஞ் செய்யும் மகா சாம்பவர்கள்! இத்தகைய பெரியோரைக் காணுதற்கு நாமென்ன புண்ணியஞ்செய் தோமோ? பார்! ஈங்குள்ள வேதியர்கள் நாடோறும் நட ராஜ சந்நிதியில், தாங்களுந் தங்கள் மாணாக்கர்களும் சிவ பெருமான் நடித்துக் காட்டியருளிய அஷ்டோத்தரசத தாண்டவங்களையுஞ் செய்து வருகின்றார்கள்' இவர்க ளது சிவபக்தி யிவ்வளவினதென்று யாவரா லுரைக்கற் பாலது? இவர்கள் செய்யும் பாவனைகளைக் காணிற் கல் லுங் கரைந்துருகுமன்றோ?

சுந்தரி:—ஆம். சந்தேகமில்லை. எங்கே! சுந்தரரே! நம் சொக்க லிங்கேசர்மீது நம்மூர் வித்தியாசாகரப் புலவர் செய்த பாட்டில் ஏதாவது உமக்குத் தெரிந்தாற் சொல்லும். கேட்போம். நீரும் அவரிடம் கல்வி கற்றுக்கொண்டதா கச் சொன்னீரே!

சுந்தரன்:—ஆகுக அப்படியே. இதோ சொல்லுகின்றேன் கேளுங்கள். (பாடுகின்றான்)

(6) இராகம் - மோகனம், தாளம் - ஆதி.

**பல்லவி**

அரனருள் நாடி யாடுவோய் பாடி

**அநுபல்லவி**

அருமையா யிலகுமெந்த மறிவேடீ யன்புடனே (அரனருள்)

**சரணங்கள்**

கூடலம் பதியுட் கோமள மதியைச்
சூடிய சொக்கலிங்க சுந்தர மூர்த்தியெங்கள் (அரனருள்)

மலபரி பாகம் வந்தது யோகம்
நலமுறச் செய்திடுவாய் நஞ்சொல்நீ கேட்டிடுவாய் (அரனருள்)
சத்திய கிரியைச் சார்விளாச் சேரி
வித்தியா சாகரர்க்கு வித்தக சற்குருவாம் (அரனருள்)

சற்குணன்:—வித்தியாசாகரர் வாக்கே வாக்கு! ஆகா! எவ்வளவு நன்றாயிருக்கின்றது!

சுரூபன்:—இதேபாட்டை யான் பலமுறை தங்கள் குமாரன் சுந்தராநந்தனிடம் கேட்டிருக்கின்றேன்.

சுந்தரி:—ஓ! சுந்தராநந்தா! எனது அருமை மகனே! உன்னை மறுபடியுங் காணக் கிடைக்குமோ?

சற்குணன்:—சரி. அஃது அப்படியிருக்கட்டும். நம் சுந்தராநந்தனுடையகுரலும் இந்தச் சுந்தரருடையகுரலும் ஏறக்குறைய ஒரேமாதிரியா யிருக்கின்றன! கவனித்தாயா?

சுந்தரன்:—அரசர் வீரேந்திரர் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பார்!

சற்குணன்:—ஆமாமாம். வெகுநேரமாய்விட்டது. யான் அவரிடம்போய்ப்பேசிவிட்டுச்சீக்கிரமாய் வந்துவிடுகின்றேன்.

சுந்தரி:—ஆனால் நானும் அந்தப்புரத்திற்குப் போகின்றேன்.

சற்குணன்:—சரி.

[சற்குணனுஞ் சுந்தரியும் போகின்றனர்.]

சுரூபன்:—எனது இன்பமே! இறைவனே! நீ யுன்பகற்பொழுதையெல்லாஞ் சோழன் அவைக்களத்தே கழிக்கின்றாயேயன்றி ஈண்டு யானிருக்கும் விடுதிக்கு விசேடமாய் வருகின்றாயல்லை!

சுந்தரன்:—என் அன்பே! அமுதே! ஆருயிரே! நீ யென்மீது கோபிக்கப்படாது. ஏனென்றால், அரசவைக்கு நீயோ விசேடமாய்ப் போகின்றதில்லை. யானும் போகாதிருப்பே

ளையின் நம்மை இன்னர் என்று அவர்கள் கண்டுகொள்ளக் கூடும். அதுபற்றியன்றே யான் அவ்விடத்தில் அதிகமாய் ஊடாடுவது! முத்தமிடுகின்றான்.

சுரூபன்:—எனது சுந்தரத்தோன்றலே! நீ யுரைத்தது சரிதான். மற்றைப்படி நேற்று நாமிருவரும் நின்பெற்றோர்களோடு திருவையாற்றிற்குச் சென்றபோழ்து ஆங்கே போந்திருந்த ஒருபாரத்தையினை நீ சற்றேயுற்று நோக்கினாய். அப்பொழுதே நின்மனம் அவள்பாற்சென்றதென்றறிந்து கொண்டேன்!

[தன்மேலிருந்த தலைவன்கையைத் தள்ளுகின்றான்.]

சுந்தரன்:—என் கண்ணே! காதற்கிழத்தி! ரூபாவதி!

சுரூபன்:—ஆமாம். சரிதான். அவள்தான் நினக்கேற்ற காதற் குமரி! யான் கிழத்திதான்!

சுந்தரன்:—என்காதற்கொடியே! அப்படி நினையாதே!—

சுரூபன்:—நன்று. நின்கருத்து இன்னதென்று வெளிப்பட்டது!ஆமாம் நான்கொடியேன்தான்! அவள்நல்லள்தான்!

சுந்தரன்:—என்காதற்கிளியே! நீ என்னோடு இத்தனைநாட் பழகியிருந்தும் இவ்வாறு கூறுதல் நினக்கு ஏற்புடைத்தாகுமோ?—

சுரூபன்:—ஏன்? அங்ஙனங் கூறுதல் உண்மையாயிருந்தால் ஏற்புடைத்தாகாமலென்ன? பார்! உன்மனத்தில் நிகழ்வதை நீ சொல்லுஞ்சொற்களே வெளிப்படுத்துகின்றன! 'என்காதற்கிளியே' என்கிறாயே! யான் உன்காதற்கு இளிக்கின்றேன் என்பதுபற்றியோ நீயவ்வாறு கூறினை?

சுந்தரன்:—என் அற்புதத்தலைவியே! நீ இன்னும் இங்ஙனங் கூறுவையேல் ஆற்றேன்!—

[முத்தமிடச்சுரூபன் தடுக்கின்றான்.]

சுரூபன்:—இதுகாறும் நீ யென்னைக் 'காதற்கிழத்தி' 'காதற் கொடியே' 'காதற்கிளியே' என்று நீ காதல்கொண்டவனாகவாயினும் அழைத்தனை! இப்பொழுது உனக்கு என்மீதுள்ள அன்பு திரிந்து விகாரப்பட்டதோ? என்னை 'அற்புதத்தலைவி, என்றனையே!

சுந்தரன்:—(பாடுகின்றான்)

* "குற்றமேதெரிவார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வரால்"; (அக)

என்றதுபோல; யான் எது சொன்னாலும் அதற்கெல்லாம் விபரீதப்பொருள் படுத்துகின்றனையே! (பாடுகின்றான்)

உள்ளந் திரிந்திலே னுத்தமச்செம் பொற்கொடியே
யுள்ள படியே யுரைக்கின்றே னுன்னையன்றிக்
கள்ளம் பயின்றுபிற காரிகைமார் தம்மையினிக்
கொள்ளுங்கொ ளீமகிழ்ந்து கொண்டுறையுமென்மனனே?

என்னுயிர்த்துணைவி! நீயே என்னைத் தள்ளுவையேல் எனது முறைப்பாட்டினை இனி யார்பாலுரைப்பேன்? எங்ஙனம் ஆற்றுகிற்பேன்? எனதருமைத்தலைவியே! என் மீது கருணைபுரிவாய்! (வணங்குகின்றான்)

சுரூபன்:—எனது ஆனந்த முகிலே! உன்னையுந் தள்ளுவலோ?

(இருவருந் தழுவி முத்தமிடுகின்றனர்.)

சுந்தரன்:—எனது அழகிய மயிலே! நீ யென்னை நோக்கி ஆடும் பொருட்டன்றே என்னை 'ஆனந்த முகிலே' என்று அழைத்தனை?

சுரூபன்:—எனது ரசிக சுந்தரனே! எனது பாக்கியமன்றோ உன்னை யான் என் தலைவனு யடையப் பெற்றது!

---

* கந்தபுராணம்

தரன்:—நாம் இப்படியே பேசிக்கொண்டிருப்பது நேரிதன்றே! என்னை அரசர் வீரேந்திர சோழர் தேடுகிற்பாரே!

ன்:—அப்படியானால் நாம் போவோம்.

[யாவரும் போகின்றனர்.]

---

## ஐந்தாங்களம்

இடம்:—பாண்டிய னரண்மனை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—சூரசேநன், சுசீலன்

சூரசேநன்:—எதெது எப்படியிருந்தாலுஞ் சரி. "இந்த நயவசநப் பயலைச் சிறைச்சாலையிலிருந்து விட்டுவிட வேண்டும்" என்கிற பேச்சை மாத்திரம் எடாதீர். அவன் இதுவரைக்குஞ் செய்துகொண்டு வந்திருக்கிற சமாசாரமெல்லாம் மகா ராஜத் துரோகமேயாம் என்பதற்குச் சந்தேகமே யில்லை.

சுசீலன்:—மகா ராஜா அவர்களிடத்திலிருக்கும் ஒற்றன் முன்பு நயவசநரிடமிருந்தவன். அவர் அவனைத் துர் நடக்கையுள்ளவனென்று வேலையினின்றுந் தள்ளி விட்டார். அதுபற்றி அவர் பேரில் அவனுக்குக் கொஞ்சம் குரோத புத்தியுண்டு. ஆகையால் தாங்கள் அவன் சொல்லியதை நிஜமென்று நம்பி யிவ்வாறு செய்தது உசிதமெனத் தோன்றவில்லை.

சூரசேநன்:—உசிதமோ உசிதமில்லையோ? அந்த நயவசநன்பேரில் எமக்கு வெகு நாளாய்ச் சந்தேகமுண்டு. அவன் பேசும்போதெல்லாம் மனத்திலொன்றும் வெளியிலொன்றுமாய்ப் பேசுவான். (பாடுகின்றான்)

* "கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு" (அ௲)

என்பது நீவி ரறியாததன்று. இஃது இப்படி யிருக்கட்டும். பாரும் சுசீலரே! இப்போது உமக்காகத் தாமே சும்மா இருக்கின்றோம். இல்லாவிட்டால் ஊர்முழுவதும் அப்பொழுதே தொம்ஸம் பண்ணிவிடுவோம். நீர் ஒரு மாதம் பார்க்கலாம் என்று கேட்டுக்கொண்ட தவணைக்கு இன்னும் ஆறே நாள் தாமே யிருக்கின்றன. பார்த்துக் கொள்வோம். அதற்குள்ளே என் மகள் ரூபாவதியைப் பற்றி ஒன்றுந் தெரியாதிருக்குமாயின் அப்புறம் எமதிஷ்டப்படியே தான் செய்வோம். நீர் அப்பொழுது ஒன்றுஞ் சொல்லக்கூடாது. அடே சேவகா! என்ன செய்தி?

[சேவகன் வருகின்றான்.]

**சேவகன்:**—மகாராசா! நம்முடைய யரமனை வாசலிற் சோள நாட்டிலிருந்து ஒரு தூதன் வந்திருக்கிறான். அவன் பெயர் **தந்திரதீரனாம்.**

**சூரசேநன்:**—தூதேன்? சுசீலரே!—இருக்கட்டும். சேவகா! நீ போய் அவனை வரச்சொல். [சேவகன் போகின்றான்.] சுசீலரே! பார்த்தீரா? எல்லாம் நினைத்தபடியே முடிகின்றன. சோழன் வீரேந்திரன் படையெடுத்து வருவான் என்று நாம் எண்ணினதற்கேற்ப ஒரு தூதனும் வந்திருக்கின்றான்!

**சுசீலன்:**—எல்லாவற்றிற்குந் தூதுவன் சொல்லப் போகின்றதையுங் கேட்போம். சற்றே பொறுங்கள்.

[தந்திரதீரன் வருகின்றான்.]

---

* திருக்குறள்

தந்திரதீரன்:—வாழ்க ! வாழ்க ! சேர மன்னவ !
கடல்புடை சூழ்ந்த காசினி யதனு
ளோங்நாட் டினுமிக நன்றெனப்பெறூஉஞ்
சோணாட் டிறைவன் றூய குணத்தினன்
பூணார் மேனியன் புண்ணியச் செல்வ
னரைசர்க் கரைச னளவிலா வெற்றிபெற்
றுரைசெயற் கரிய வுயர்வா கையினன்
பாரேந் துறூஉம் பாந்தள் வேந்தன்
சீரேந்து கல்விச் சிறப்பு நிறைந்தவன்
வீரேந் திரனெனும் மேதக வுடையோன்
விடுத்த தூதன்யா னேவேன்.—

சூரசேனன்:—அடுத்துநீ வந்த வலுவ லென்னையோ ? (அச)

தந்திரதீரன்:—பன்னருஞ் சற்குண பாண்டிய னாட்டை
யின்னாப் போர்செய் திறைவனைக் காட்டிற்
றுரத்தி விட்டுத் தோமுறக் கவர்ந்தனை ;
அதனா லெங்கோன் கதனுற விஞ்சிப்
பாண்டியற் காக வீண்டுப் படைகொடு
வருவான். நாட்டினை மாண்புற விடுதியேன்
மருமலர்த் தாரினோன் மனம்பொறுத் தருளும்.

சூரசேனன்:—அல்லா விட்டால் ?

தந்திரதீரன்:— பொல்லாப் போருறும்.

சூரசேனன்:—அவ்வளவு தானே ! அன்றிவே றுண்டோ ! (அரு)

தந்திரதீரன்:—ஆம். அவ் வளவுதான். ஆயினும் போரில்
வெல்லுநர் யாரோ வெந்நது காட்டிச்
செல்லுநர் யாரோ ? தெரிந்தில தரசனே ! (அசு)

சூரசேனன்:—சரிதான். தந்திர தீர நீசென்
றுரையாய் சேரர்கு லோத்தமன் போர்க்குச்
சன்னத்த னாகவே தானுள னென்றே. (அஎ)

**தந்திரதீரன்**:—தந்திர தீரன் றந்தேன் வந்தனம். (அ.அ)

[தந்திரதீரன் போகின்றான்.]

**சூரசேநன்**:—கேட்டீரோ சுசீலரே! முற்றிலும்? ஆதிமுதற் கொண்டு நாம் சொல்லவில்லையா?—சரி. நாம் இனிமேல் ஒருநிமிஷமேனுந் தாமதஞ் செய்தல்கூடாது.ஏ! சேவகா!

[சேவகன் வருகின்றான்.]

**சேவகன்**:—மகராசா!

**சூரசேநன்**:—நீ சென்று நம்முடைய சேனைத் தலைவனிடம் "சோழன் நாம் அடித்துத் துரத்திய பாண்டியனுக்காகப் படையெடுத்து வஞ்சிமாலைசூழ வருகின்றானம்; ஆதலிற் போர்வீரரோடு இன்று முதல் எந்த நிமிஷத்திலும் ஆயத்தமா யிருக்கவேண்டும்" என்பது மகாராஜா அவர்கள் உத்தரவு என்று சொல்லிவிட்டுவா. (சேவகன் போகின்றான்.) ஏ! சேவகா!

**சேவகன்**:—(திரும்பி) மகராசா!

**சூரசேநன்**:—நம்முடைய சேரநாட்டிற்கும் இந்த க்ஷணமே ஓராளனுப்பி ஆங்குள்ள போர்வீரரையுங் கூடிய சீக்கிரத்தில் வரவழைக்கும்படியும் நாம் உத்தரவு செய்தனமென்று சேனைத் தலைவனிடஞ் சொல்.

**சேவகன்**:—ஆணை! [சேவகன் போகின்றான்.]

**சுசீலன்**:—நம்முடைய கருவூரிலிருந்து போர்வீரர் வந்து சேருவதற்கு எத்தனைநாட் செல்லுமோ?

**சூரசேநன்**:—இந்தத் தந்திரதீரன் போய்ச் சோழனிடம் தெரிவித்து அதன் பிறகு அவன் தன்னுடைய சேனைத்தலைவனுக்கு உத்தரவு செய்து அதன்மேல் அவன் போர்வீரரை ஆயத்தப்படுத்திப் படையெடுத்து வருவதற்குள்

இவர்கள் வாராமற் போகிறார்களா? மேலும் தஞ்சைக்குக் கருவூர் சமீபமன்றோ?

சுசீலன்:—ஆம். சமீபந்தான். ஆனாலும் ஒருவேளை நம்முடைய கருவூர்ப் போர்வீரர் வருகிறதற்குமுன் சோழன் படையொடு வந்துவிட்டா லென்னசெய்கிறது? அதையும் நாம் யோசிக்கவேண்டும்.

சூரசேநன்:—நீர் சொல்லுவது சரிதான். ஆனால் இவர்கள் வருகிறதற்குமுன் அவன் வரக்கூடுமோ?

சுசீலன்:—ஏன் வரக்கூடாது? என்னவோ? யார் கண்டார்கள்? எல்லாவற்றிற்கும் நம்முடைய வெளிநாட்டொற்றர்களை விசாரித்தீர்களோ?

சூரசேநன்:—இதோ விசாரிப்போம்.

சுசீலன்:—சகலத்திற்கும் நான் கிருகத்திற்குப் போய் வெகு சீக்கிரத்தில் திரும்பி விடுகிறேன். அதற்குள் தாங்களும் ஒற்றர்களை யழைத்து விசாரியுங்கள்.

சூரசேநன்:—ஆம். அப்படியே செய்வோம்.

[யாவரும் போகின்றனர்.]

## ஆறாங்களம்

இடம்:—சோழனரண்மனை

காலம்:—பிற்பகல்

பாத்திரங்கள்:—வீரேந்திரன், சற்குணன்

வீரேந்திரன்:—ஓ! சற்குணவழுதியாரே! கேட்டீர்களோ ஒரு சமாசாரம்?

சற்குணன்:—என்ன? தெரியாதே!

வீரேந்திரன் :—உங்களுடைய குமாரன் சுந்தராநந்தனைச் சூரசேநன் கொன்றுவிட்டபிறகு அவனுடைய மகளை ஏதோ பூதமோ பேயோ அடித்துக்கொண்டு போய்விட்டதாம்.—

சற்குணன் :—இப்பொழுது சூரசேநன் மகளைப் பூதங்கொண்டு போனாலென்ன? பேய்கொண்டு போனாலென்ன? நம்முடைய குமாரன் சுந்தராநந்தன் போன பிறகு நமக்கு இராஜ்யாதிகாரமும் வேண்டுமோ?

வீரேந்திரன் :—இல்லை, இல்லை. தாங்கள் அப்படிச் சொல்லவே கூடாது. அந்தப்பயல் சூரசேநன் செய்த அநியாயங்களுக்கெல்லாம் நம்முடைய பஞ்சநதேசரே தண்டிக்கின்றார்! பாருங்கள்! தெய்வத்திற்குக் கூட அவனுடைய கொடுமை பொறுக்கமுடியயில்லை! ஆகையினாலேதான் சூரசேநன் தன்பெண்ணை யிழந்தான்!

சற்குணன் :—நாம் அவன்மீது படையெடுத்துச் செல்லப் போகின்றோமென்பதை உணர்ந்தபிற்பாடுதான் அவன் எனது மகன் சுந்தராநந்தனைக் கொல்லுதற்கு யோசனை செய்தானும். இதுசமாசாரம் சேரநாட்டிலேயே பிறந்து வளர்ந்து சூரசேநனுக்கு வேண்டியவனாயிருந்து இப்போது இவ்விடத்தில்வந்து அடைக்கலம் புகுந்திருக்கின்ற சுருபன் என்பவனைக் கேட்டால் தெரியும்.

வீரேந்திரன் :—என்னவோ? நாம் நம்முடைய ஒற்றர்கள் சொல்லியதைக் கேட்டதில் உம்முடைய புத்திரன் சுந்தராநந்தன் ஒருநாளிராத்திரிச் சிறைச்சாலையினின்றும் மதிலேறிக் குதித்து ஓடினனென்றும், உடனே காவலாளர் துயிலொழிந்து கூட ஓடிப் பிடித்தனரென்றும், அப்போது,உமது மகனுக்கும் அவர்களுக்கும் நேர்ந்த

சச்சரவில் சுந்தராநந்தன் கொல்லப்பட்டனனென்றும் சூரசேநன் நகர் முழுதும் பறையறைந்து சாற்றினுனென்பது தெரிகின்றது. ஆனுல் ஜனங்கள் இதை நம்பவில்லையாம்.

சற்குணன் :—சுந்தராநந்தனைப்பற்றித் தெரிந்தவர்கள் சூரசேநன் சொல்லுங் கதைகளையெல்லாம் பொய்யென்று விடுப்பார்களே யொழிய ஒருநாளும் நிஜமென்று நம்பமாட்டார்கள்.

[சுந்தரன் வருகின்றுன்.]

சுந்தரன் :—உபயமகாராஜா அவர்களுக்கும் அடியேன் சுந்தரன் வந்தனம்.

வீரேந்திரன்:—சுந்தரரே! ஏதாவது விசேஷமுண்டோ?

சுந்தரன் :—நம்முடைய பாண்டிநாட்டிற்குத் தூதுசென்ற தந்திரதீரரைத் திரும்பி வரும்போது சூரசேநனுடைய ஆட்கள் அடித்து மிகவுந் துன்பப்படுத்தி விட்டார்களாம். இது சங்கதி ஒரு சேவகன் முன்னே சீக்கிரமாயோடிவந்து தந்திரதீரர் சொல்லச் சொன்னுரென்று கூறினுன். தந்திரதீரர் பின்னே வருகின்றுராம்.

வீரேந்திரன் :—எமது தந்திரதீரரையா சூரசேநப்பதர் ஆள்விட்டடித்தது? கேட்டீர்களோ சற்குணவழுதியாரே! இந்தக்கயவன் எமது தூதனை யடிக்கும் நிந்தைமட்டும் பொறுப்பேமா? இதோ இந்த நிமிஷத்திலேயே போர்வீரரைப் படையெடுப்புக்கு ஆயத்தப்படுத்தும்படி சேனைத்தலைவனுக்குச் சொல்லியனுப்புகின்றேம்.

சற்குணன் :—எல்லாவற்றிற்குந் தூதுசென்ற தந்திரதீரரும் வரட்டுமே! வந்தபிறகு தூதிற்குச் சூரசேநன் உத்தரமெ

ன்ன சொன்னுனே அதையுங் கேட்ட பிற்பாடு சேனைத் தலைவனுக்கு உத்தரவு கொடுக்கலாமே?

**வீரேந்திரன்** :—இவன் தூதனை யடித்த போதே யிவனுடைய நீதி யெல்லாம் வெட்டவெளிச்சமாய் விட்டனவே! இந்த வஞ்சகன் நியாயமென்ற வூரிலேயே குடியிருந்தறியாதவன் போலும்! இவன் தூதிற்கு உத்தரமென்ன சொல்லி யிருக்கப் போகின்ருன்? இவன் என்ன சொல்லி யனுப்பி யிருந்தபோதிலும், எம்முடைய தந்திரதீரரை யடித்ததனுற் படையெடுத்துச் சென்று அவனுடு போர்புரிந்தே தீர்ப்பேம்.

[தந்திரதீரன் வருகின்ருன்.]

**சுந்தரன்** :—அதோ! தந்திரதீரரும் வந்துவிட்டார்!

**வீரேந்திரன்** :—தந்திரதீரரே! என்ன சங்கதி? உம்மை ஆள் விட்டடித்த சூரசேநன் உயிரோடிருக்கிறமட்டும் சும்மா இருப்போமா?

**தந்திரதீரன்** :—அவன்ருன் இவர்களை ஏவினுனே அல்லது இவர்கள் திருடர்களேயோ? தெரியவில்லை. அடியேன் அடிபட்டது என்னவோ உண்மை!

**சுந்தரன்** :—உம்மையடித்த அந்தக் கயவர்கள் பேச்சினின்றும் அவர்கள் சேரநாட்டாரோ அல்லது பாண்டிநாட்டாரோ என்று தீர்மானித்திருக்கலாமே?

**தந்திரதீரன்** :—அஃதென்னையோ? அவர்கள்பேச்சை யான் நன்ருய்க் கவனித்திலேன்.

**வீரேந்திரன்** :—சரி. இருக்கட்டும். அந்தப்பயல் சூரசேநன் தூதிற்கு என்ன வுத்தரங் கொடுத்தான்?

**தந்திரதீரன்** :—சூரசேநன் தான் பாண்டிய நாட்டை விடுவதில்லை யென்றும், யுத்தத்திற்குச் சன்னத்த னென்றும்

உத்தரஞ் சொல்லி விடுத்தான். அவ்வளவுதான். வேறொன்றும் அவன் சொல்லவில்லை.

சற்குணன் :—தந்திரதீரரே! நீவிர் சென்று தூதுரைத்தபோது சூரசேநனொடுகூட இருந்தவர் யாவர்.

தந்திரதீரன் :—யாரோ? மந்திரிபோலும்! நான் தூதுரைத்த போது அவர் ஒன்றும் பேசவில்லை

சுந்தரன் :—யார்? சுசீலரோ?

சற்குணன் :—ஆமாம். சுசீலர்தாம்.

வீரேந்திரன் :—உங்களிடத்தில் மந்திரியா யிருந்தவர் தாமே?

சற்குணன் :—ஆமாம். அவர்தாம்.

வீரேந்திரன் :—சுந்தரரே! நீர்போய் நமது சேனைத் தலைவனிடம் போர்வீரரை ஆயத்தப் படுத்திக்கொண்டு மதுரை மாநகரை நோக்கி வஞ்சி மாலை சூடி வஞ்சக வஞ்சியானொடு வஞ்சிப்போர் செய்வதற்கு இப்பொழுதே புறப்பட்டுச் செல்லவேண்டும் என்று சொல்லும். நீருங் கூடவே இருந்து சேனைத்தலைவற்குப் படைவகுப்பதில் உதவிசெய்யும். நீருமொரு வியூகத் தலைவராயிருந்து சேனையை நடத்தும். சீக்கிரம். தாமதஞ் செய்யாதீர்.

[சுந்தரன் போகிறான்.]

வீரேந்திரன்:—என்? சற்குண வழுதியாரே! நாமும் புறப்பட்டுப் போவதற்குத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டாமா?

சற்குணன்:—ஆம். செய்யவேண்டும்.

[யாவரும் போகின்றனர்.]

நான்காம் அங்கம் முற்றிற்று

# அங்கம்-ரு

## முதற்களம்

இடம்:—பாண்டியனரண்மனை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—சூரசேநன், சுசீலன்

சூரசேநன்:—சுசீலரே! சந்தேகமேன்? நாமனுப்பிய சேவகன் கருவூர்சென்று அவ்விடத்தில் நம்முடைய மந்திரி இராசோபாயரிடம் ஓலை கொடுத்துப் போர்க்கு வேண்டியன வெல்லாம் முடித்துக்கொண்டு, போர்வீரரைச் சமரேசன் என்னும் நம்முடைய சேரசேனைத்தலைவன் அழைத்துக்கொண்டு மதுரை வரவேண்டு மென்றுசொல்லி, ஏற்படுத்திவிட்டு வருவதற் கையமில்லை.

சுசீலன்:—நம் சேவகனால் ஒரு தடையுமில்லை. அவன்போய் மந்திரி இராஜோபாயரிடம் திருமுகங் கொடுத்துச் சமரேசன் தலைவனுகச் சேனைவந்து சேருவதற்குந் தடையில்லை. ஆனால் என்னுடைய கருத்தெல்லாம் காலதாமதமின்றி வந்து சேரவேண்டுமே யென்பதுதான்.

சூரசேநன்:—அதற்கும் ஐயமுண்டோ? இதோ வந்துவிடும். பார்த்துக் கொண்டிரும்.

சுசீலன்:—வந்தால் நலந்தான். இதுநிற்க. சோழன் தூதுவன் தந்திரதீரனைத் திரும்பிப் போகும்போது நம் கருவூராட்கள் வழியில் அடித்துத் துன்பப்படுத்தி விட்டார்களாம். அவர்கள் அப்படிச்செய்தார்களென்று கேட்டதுமுதல் என்மனம் வருத்தப்படுகின்றது. தூதுவனை யடித்தல் மகாபாவமென்று நீதிநூல்கள் முறையிடுகின்றன. அவ்

வாறிருக்க அவர்கள் செய்தது சுத்த அநியாயமேயாம். ஆகையால் அதை விசாரித்துத் தண்டிக்க வேண்டுவது தங்களுடைய தவறாக் கடமையாம்.

சூரசேநன்:—ஆம். அப்படித்தான் நாமும் கேள்விப்பட்டுவிசாரித்துக்கொண்டு வருகின்றோம். அடித்த பயல்கள் இன்னாரென்று இன்னுந் தெரியவில்லை. தெரிந்த பிற்பாடு அவர்களுக்குத் தக்கபடி தண்டனை விதிப்போம்.

சுசீலன்:—மேலும் தாங்கள் தாம் தந்திரதீரனை ஆட்கள் விட்டடித்ததாக ஊர் முழுவதும் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்கள் அவ்வெண்ணத்தை யொழிக்கும்படியாகத் தாங்கள் தூதர் தந்திரதீரரையடித்த பயல்களைக் கண்டு பிடித்துக் காட்டிக் கொடுப்பவருக்கு வெகுமதி கொடுக்கப்படும் என்று பறையறைவிக்க வேண்டும். இது கேட்டுச் சனங்கள் தங்கண்மீதுள்ள தவறெண்ணத்தை நீக்கிவிடுவார்கள்.

சூரசேநன்:—அப்படியே செய்துவிடுவோம். அதற்கொன்றும் ஆக்ஷேபமில்லை. மற்றைப்படி. கருவூருக்கு நம்முடைய மந்திரி இராசோபாயரிடஞ் சென்ற சேவகன் என்ன இது வரையிலும் வரக்காணோம்? ஏன்? சுசீலரே!

சுசீலன்:—என்ன காரணமோ? தெரியவில்லை.—சரி. இருக்கட்டும். அந்தச் சேவகன் போய் எத்தனை நாளாயின?

சூரசேநன்:—அவன் சோழன் தூதுவன் வந்துபோன அன்றைக்கு, அதாவது ஞாயிற்றுக்கிழமை மாலைசென்றான்.

சுசீலன்:—ஞாயிற்றுக்கிழமை மாலை நல்ல ராகுகாலமாயிற்றே! அப்பொழுதா அனுப்பினீர்கள்?

சூரசேநன்:—ஆம். என்ன செல்கிறது? காலதாமதஞ் செய்யக்

கூடாதென்பது பற்றி உடனே அப்பொழுதே அனுப்பி னேம். அதனு லென்ன ?

சுசீலன்:—அதனு லொன்றுமில்லை. ஆயினும் பெரியோர்கள் கைகூடா தென்பதுபற்றி அக்காலங்களில் ஒன்றுஞ் செய்யக்கூடா தென்பார்கள். அதுதான். வேறொன்று மில்லை.

சூரசேநன்:—சரிதான். அவன்போய் இன்றைக்கு ஐந்தாவது நாளாயிற்றே! ஏன் இன்னும் வரவில்லை ?

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகாராசா அவர்களுக்கு அடியேன் சேவகன் தெண்டம். நம்முடைய வையாளி வீதி ஆசாரவாசக் காப்பான் வந்து வெளியே நிக்கிறான்.

சூரசேநன்:—அடே! அவனை இப்பொழுதே இவ்விடம் வரச் சொல்.

[சேவகன் போகின்றான்.]

என்? சுசீலரே! ஒருநாளும் வாராதவையாளிவீதி ஆசார வாசற் காப்போன் முருகன் தன் காவற்றொழிலை விட்டு இன்று இவ்விடம் வந்திருப்பது ஏதாவது புதிய செய்தி சொல்லுதற்குப் போலும்!

[முருகன் வருகின்றான்.]

முருகன்:—அடியேன் முருகன் மகராசா அவக சமுகத்திலே தெண்டம்.

சூரசேநன்:—ஏ! முருகா! என்ன விசேஷம் ?

முருகன்:—மகாராசா! இன்னிக்குக் கோளி கூவையிலே யொரு சமாசாரம் கேட்டபிறகு காவலைக்கூட விட்டிட் டில்லே இங்கே சமுகத்லே தெரியப்படுத்தணுமிண்டு ஓடி யாந்தேன்.

சூரசேநன்:—அப்படி யென்ன அவசரமான சமாசாரம்? எங்கே? சொல்லு. கேட்போம்.

முருகன்:—மகாராசா! தஞ்சாவூர் வீரேந்திர சோள ராசாவும் முன் சிறந்த மலையிலே தங்களோடு நடந்த சண்டையிலே தோத்துப்போன நம்ம சற்குணவளுதியும் படையெடுத்துக்கிட்டுவந்து இந்த ஊருக்குக் காதவளித்தூரத்திலே தங்கியிருக்காகளாம். இன்னிக்குப் பொளுது மறையும் வேளைக்குள்ளே இங்கனே வந்திடுவாகளாம். பலத்த சேனைபோடேவந்திருக்காகளாம். மகாராசா! இவைகளையெல்லாம் பாத்துக் கிட்டிருந்த பக்கத்தூர்க் குடியானவன் ஒருத்தன் மேல் மூச்சுக் கீள்மூச்சு வாங்கிக்கிட்டு வெகு அவசரமாய் ஓடியாந்து சொல்லிட்டுப் போனான். இதுகேட்டது முதல் என்காலுக அங்கனே தரிக்கலே மகராசா! அதுதான் இங்கனே பெசமான்களிடத்திலே சொல்லிட்டுப் போலாமிண்டு வந்தேன்.

சுசீலன்:—சரிதான். முன்னொரு காலத்துக் காடு வெட்டிய சோழ மகாராஜாவந்து தங்கியிருந்த சோழன் வந்தான் என்னும் கிராமத்திற்குச் சமீபத்திலே இவர்கள் வந்து தங்கியிருக்கின்றார்கள் போலும்!

முருகன்:—ஆமாம். அப்படித்தான் சொன்னான். மகராசா!

சூரசேநன்:—ஹாம் (பெருமூச்செறிந்து கொண்டு) சரிதான். முருகா! நீபோ. [முருகன் போகின்றான்.]

கேட்டீரோ சுசீலரே! சமாசாரத்தை? சகலமும் நமக்குக் கெடுதலாகவே நடந்துவருகின்றன! பார்த்தீரா! கருவூர் போன சேவகனோ இன்னும் வரவில்லை. பாண்டியனும் சோழனுமோ படையெடுத்து வந்துவிட்டார்கள்! இதற்கென்ன செய்யலாம்?

சுசீலன்:—கருவூருக்குப் போன சேவகனும் வருகிற சமயந் தான். பதறாதிருங்கள். வந்துவிடுவான். இது கிடக்கட்டும். நம்முடைய சேனைகளெல்லாம் இப்போது ஆயத்தமா யிருக்கின்றனவே யல்லவோ?

சூரசேநன்:—ஆம். அது மூன்று நாளைக்கு முன்னேயே ஆயத்தமாயிருக்கின்றது. ஆயினும் அதுகொண்டு நாம் யுத்தந் தொடங்குவது சரியன்று. அப்படியன்றிப் போர்செய்யத் தொடங்கினேமோ தோல்வி யடைவது நிச்சயம். முன் சற்குணவழுதியுடன் திருப்பரங் குன்றத்தருகே நாம் புரிந்தபோரில் வெகுகஷ்டத்தின் மேலன்றோ நாம் வெற்றிபெற்றது? அதுவுங் கருவூர்ச்சேனையுஞ் சேர்ந்திருந்த போதன்றோ? அப்படியிருக்க நாம் கருவூரிலிருந்து சேனை வருமுன் யுத்தமாரம்பிப்பது யுக்தமன்று. அஃது இப்பொழுதே வருமாயின் இந்த நிமிஷயத்திலேயே போர் தொடங்குவோம். அதற்குத் தடையொன்றுமில்லை.

சுசீலன்:—போர் என்னவோ வந்துவிட்டது. நாம் இனிமேற் சும்மா இருக்கக்கூடாது. ஆகையால் நகர் முழுவதுஞ் சனங்களறியும்படி பறையறைய உத்தரவு செய்யவேண்டும். எதிரிகளுக்கு நாம் பயந்தவர்களாகக் காட்டிக்கொள்ளல் கூடாது. ஆகையாற் போர்முரசமும் அரண்மனை வாயிலில் முழங்கட்டும். இதற்கிடையில் கருவூர்ப்படை வருமாயின், பகைவர் எதிர்சென்று காஞ்சிமாலை சூடிப் போர் செய்வோம். அஃதல்லாமற் பகைஞர்கள் நமது கோட்டையை வளைந்துகொண்டு உழிஞைமாலை சூடிப் போர் செய்வார்களாயின் நாம் அதற்கேற்பக் கோட்டை

யைக் காத்துக்கொண்டு நொச்சிமாலை சூடிப் போர்செய்வோம்.

[சேவகன் வருகின்றான்.]

சூரசேநன்:—சரி. என்னடா சங்கதி?

சேவகன்:—மகராசா! நம்ம கருவூருக்குப் போயிருந்த சேவகன் வந்திட்டான்.

சூரசேநன்:—போய் உடனே வரச்சொல்.

[சேவகன் போகின்றான்]

சுசீலரே! கருவூர்ச் சேவகனும் வந்துவிட்டான்! கட்டாயமாய் நம்முடைய சேனை வந்திருக்கும்! இனிமேல் நாமொன்றற்கும் பயப்பட வேண்டுவதேயில்லை! சோழன் வீரேந்திரன் சேநாபலத்தையும் சமர்க்களத்தில் ஒருவாறு அறிவோம்!

[கருவூர்சென்ற சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகராசா! அடியேன் தெண்டம்.

சூரசேநன்:—அடே! என்ன சங்கதி? சீக்கிரமாய்ச் சொல்.

சுசீலன்:—(தனக்குள்) ஓகோ! சேவகன் முகக்குறியைப் பார்க்குங்கால் ஏதோ தீங்கு நேரிட்டிருக்கும்போலத் தோன்றுகின்றதே! எல்லாவற்றிற்குங் கேட்போம்.

சேவகன்:—மகராசா! கருவூர்ச் சமாசாரத்தை யென்னெண்டு சொல்லட்டும்?

சூரசேநன்:—என்ன? என்ன? கருவூரிலென்ன?—

சேவகன்:—மகராசா! முன்னிருந்த சற்குணவதியின் மாமன் வீரமார்த்தாண்டத் தொண்டை ராசா தாங்க பாண்டிநாட்டைச் செயிச்சுக் கவந்துக்கிட்டு வளுதியாரைக் காட்டிலே துரத்திட்டிய எண்டு கேட்டு நம்மசேர நாட்டின்மேலே படையெடுத்துக் கிட்டுவந்து இப்பொளுது

யுத்தம் வெகு மொம்மரமா அங்ஙனே நடக்குது. ஆகை யினாலே சேனை யனுப்புறது அசாத்தியமிண்டு மந்திரி இராசோபாயர் சொல்லீட்டாக. இன்னார் செயிச்சாக எண்டு இன்னுந் தெரியல்லே. இரண்டு பக்கத்திலேயும் பல பேர் மாண்டுபோனாக. எல்லாத்துக்கும் சமாசாரம் நாளைக்கு வருமிண்டு சொன்னாரு.

சூரசேநன்:—அவ்வளவு தானே! இன்னும் ஏதாவதுண்டோ?

சேவகன்:—அம்பிட்டுத்தான். மகராசா!

சூரசேநன்:—சரிதான். நீ போ. [சேவகன் போகின்றான்.]

என்ன? சுசீலரே! நாம் இப்படியெல்லாம் வருமென்று கனவிலும் நினைக்கவில்லை. எமக்கு இம்மதுரைக்கு வந்த பிறகு நேரிட்ட மனவருத்தத்திற்கோ அளவில்லை! இவற்றையெல்லாம் பார்க்கும்போது, கடவுள் இல்லையென்றே சொல்லிவிடலாம்! பாரும்! நாம் மதுரை வந்தபிறகு நம் சொக்கேசருக்கு எவ்வளவோ அருச்சனைகளும் அபிஷேகங்களும் செய்து, கணக்கற்ற காணிகள் திருக்கோயில் உபயோகத்திற்கு அளித்திருக்கிறோம்! அப்படியிருந்தும் நம் சோமசுந்தர மூர்த்திக்கு எம்மீது கருணை பிறக்கவில்லை!

சுசீலன்:—(தனக்குள்) ஒருவனுக்கு அந்தரங்கத்திற் பக்தியில்லாவிட்டாற் பகிரங்கத்தில் எவ்வளவு செய்தபோதிலும் அவை யொருநாளும் பயன்படாவாம்!

(பாடுகின்றான்)

வெளியுற வுலகினில் வேடங் கொண்டெனை
யளிநிறை கடலெனு மமல னார்பதத்
துளியுயர் பத்தியொன் றுறுத புன்மகன்
றெளியறி விலன்பெருந் தீய னென்பவே. (அக)

(அரசனை நோக்கி) என்ன செய்கிறது? மற்றைப்படி இப்போது யுத்தந் தொடங்குவமா? என்ன?

சூரசேநன்:—அதுதான் அப்பொழுதே சொன்னமே!

சுசீலன்:—அப்போ தென்னவோ குறிப்பாய்க் கூறினீர்கள். தற்காலத்தில் இன்னது செய்வோமென்று தீர்மானமாய்ச் சொல்லுங்கள். பகைஞரோ வந்துவிட்டார்! நாம் இனிமேற் சும்மா இருப்பது சரியன்று.

சூரசேநன்:—என்ன? ஐயா! சுசீலரே! முந்திப் பரங்கிரிச் சண்டையில் நாமொரு பக்கமும், சற்குணவழுதி யொருபக்கமுமாகப் போர்செய்தோம். இப்போதோ நாமொரு பக்கமும், சற்குணவழுதி, வீரேந்திரன், வீரமார்த்தாண்டன் ஆகிய இம்மூவரும் ஒருபக்கமுமா யிருந்தலிறைற் சமர்செய்வது சரியன்றென்பது தோன்றுகின்றது. அப்படியன்றிச் சமர்புரிந்தோமோ நாம் தொலைவுண்டு போவதற்குத் தடையொன்று மில்லை!

சுசீலன்:—ஆகையால் இப்போது தங்களுக்கு அவர்களோடு சமாதானமாய்ப் போவதற்குச் சம்மதம் போலும்.

சூரசேநன்:—ஆம். பின்னை யென்ன செய்கிறது?

சுசீலன்:—அவையெல்லாம் சரியே. அவர்கள் சமாதானத்திற்கு இணங்குகின்றார்களோ அல்லரோ? இவ்வளவு தூரம் படையெடுத்து வந்துவிட்டு யுத்தமில்லாமற் சும்மா போகிறதா என்ற ஆலோசனையினாலும், வழுதிமகன் சுந்தராநந்தன் கொல்லப்பட்டதற்காகப் பழிவாங்கு மெண்ணத்தினாலும், சமாதானத்திற்கு வரமாட்டோம் என்று சொல்லிவிட்டால் நாமென்ன செய்கிறது? இதையும் யோசிக்கவேண்டாமா? சமாதான மென்றாலும், அதுவுமுடனே ஆகக்கூடியதா? என்ன? அதிலு மெத்தனை

யோ விஷயங்களெல்லாங் கவனிக்கப்படவேண்டும். முன்னமே தூதன்வந்தபோதென்ருல், இருதிறத்துக்கும் நேராகப் போயிருக்கும். இப்போதே அவர்கள்கை உயர்வும் நமது கை தாழ்வுமா யிருக்கின்றதே! மேலும் அப்படியே சமாதானஞ் செய்து கொள்வதற்கு அவர்களுமிணங்கினுலும், உடன்படிக்கையின் நிபந்தனைகள் நம்முடைய மனத்திற்குப் பொருந்தக் கூடியனவாயுமிருக்க வேண்டுமே! அவ்வாறில்லையாயின் என்செய வல்லேம்?

சூரசேநன்:—ஓ! சுசீலரே! நீர் என்ன செய்வீரோ? அஃது எமக்குத் தெரியாது. எப்படியாவது ஏறக்குறைய நம் மனத்திற்கேற்கும்படி உடன்படிக்கை செய்துவிட வேண்டியது நுமது தவருக் கடன்பாடேயாம்.

சுசீலன்:—அப்படியாயின் இப்பொழுது எனக்கு உத்தரவு கொடுங்கள். போய் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்கிறேன்.

சூரசேநன்:—கட்டாயமாய் உடன்படிக்கைதான் செய்யவேண்டும்.

சுசீலன்:—சரி, சரி. (தனக்குள்) எப்போதும் இந்தச் சூரசேநன் இப்படித்தான் கெஞ்சினுல் மிஞ்சுகிறதும் மிஞ்சினுற் கெஞ்சுகிறதும் வழக்கம். இவனை நம்பினுல் நாசமடைவதற்குச் சந்தேகமில்லை! நாமொருவருக்குந் துரோகஞ் செய்யவேண்டாம்! சகலத்திற்குங் கடவுள் ஒருவரிருக்கின்ருர்! [சுசீலன் போகின்ருன்.]

சூரசேநன்:—நாமும் அந்தப்புரத்திற்குப் போவோம்.

[சூரசேநன் போகின்ருன்.]

அன்பளிப்பு

## இரண்டாங்களம்

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR
TIRUVANMIYUR, MADRAS

இடம்:—அரசியினந்தப்புரம்
காலம்:—மாலை
பாத்திரங்கள்:—கோமளவல்லி, செவிலி

கோமளவல்லி:—நாம் கருவூரைவிட்டு மதுரை வந்தது முதல் நமக்குத் துன்பங்கள் ஒன்றன்மே லொன்றாய் வந்துகொண்டிருக்கின்றன! நம்முடைய ராஜரோ இவ்வூராரிடங் கொடியவரெனப் பட்டம் பெற்றுக்கொண்டார். பிறகு நமக்கு நம்முடைய செல்வமகள் ரூபாவதியை யிழக்குந் தெளர்ப்பாக்கியஞ் சம்பவித்தது! போதாக்குறைக்கு யுத்தமும் வந்திருக்கிறது! இஃது எப்படி முடியுமோ? தெரியவில்லை—தெய்வமே! எங்களை இப்படித் துன்பத்திற்கு ஆளாக்குவது சரியோ?

செவிலி:—அம்மையே! கொஞ்சமிருங்கள். ஏதோ தாரையினொலியும் காளத்தினொசையுங் கேட்கின்றனவே! எதிரிகளினுடைய சேனைகளெல்லாம் வையையாற்றின் வடகரையிலே வந்து தங்கி யிருக்கின்றனவோ!

கோமளவல்லி:—ஐயோ! என்னசெய்வோம்? தெய்வமே! எங்கள்மீது உனக்கு இரக்க மில்லையோ?

செவிலி:—தாயே! நாம் இப்படிப் புலம்புவது நியாயமில்லை. மேலும் தாங்கள் அரசன் தேவியாரா யிருந்துகொண்டு இந்தமாதிரி பயப்படக்கூடாது! எல்லாவற்றிற்கும்சுவாமி யொருவர் இருக்கின்றார்! சரி! ஈதிப்படியிருக்கட்டும். இன்னொரு சங்கதி சொல்லுகின்றேன். கேளுங்கள். நான் நேற்றிராத்திரி யொருகனவு கண்டேன். எப்போதும் நம்முடைய ரூபாவதியின் ஞாபகமா யிருக்கிறதனாலே

தானே என்னவோ? தெரியவில்லை. அவள் என்னிடம் வந்து, "நீஏன் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறாய்? உன் வருத்தத்தை யெல்லா மொழித்துவிடு. நான் நாளைக்குத் திரும்பி வந்து விடுகின்றேன்" என்று சொல்லி விட்டுப் போனாள்! உடனே விழித்துக் கொண்டேன். என் மனமும் ஏதோ கொஞ்சம் ஆறுதலடைந்திருந்தது!

கோமளவல்லி:—ஐயோ! நீ செய்த பாக்கியம் நான் செய்யவில்லையே! உன் கனவில் வந்து பேசுகிறவள் பெற்றவளாகிய என்னிடம் ஒரு நாளாவது கனவிலேனும் வந்தாளல்லளே! நான் என்ன பாவஞ் செய்தேனோ? அவள் என்னைக் கனவிலுங் காணமாட்டேன் என்கின்றாள்!

[சூரசேநன் வருகின்றான்.]

செவிலி:—அதோ! மகாராஜா அவர்கள் வருகிறார். நாமொன்றும் இப்பொழுது பேசப்படாது. தாயே! நான் போகின்றேன்.

[செவிலி போகின்றாள்.]

சூரசேநன்:—அடி! பிராணவல்லி! பகைவருடைய சேனையோ வந்து விட்டது! நாம் இன்றுகாலை சுசீலரோடு சொல்லி யுத்தமொன்று மில்லாமற் சமாதானமாய்ப் போவதற்குத் தக்க ஏற்பாடுகள் என்னவோ அவற்றைச் செய்யும்படி திட்டம் பண்ணி யிருக்கின்றோம்.

கோமளவல்லி:—ஏ! பிராணவர்மா! எல்லாஞ் சரியே. ஆயினும் நாமே வலியப் போய்ச் சமாதானம் பேசுவதென்றால் அது சுத்த வீரர்க்கு அழகாகுமோ?

சூரசேநன்:—அரசர்க்குரிய நால்வித உபாயங்களில் இது முதலாவதாகிய சாமோபாயமன்றோ?

கோமளவல்லி:—அப்படி யானாற் சரிதான். அஸ்தமித்துப்

போயிற்று. ஆகையினாலே நான்போய் நம்முடைய அரண்மனைக் குலதேவதையைப் பூஜித்து வருகின்றேன். சற்றேறயிருங்கள்.

[கோமளவல்லி போகின்றாள்.]

சூரசேநன்:—இவ்வளவு இடையூறுகளையும் நாம் அநுபவிக்கவே வேண்டும் என்ற எண்ணத்தோடு தானோ நம்மைக் கடவுள் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வழுதியை வெல்லுமாறு தூண்டினார்? குடிகளிடங் கொடியரெனும் பெயர் பெற்றோம்! ஓ! அதுமட்டோ? குடிகளுமெம்மைக் கொல்லத் தலைப்படுகின்றார்கள்! இந்த நாட்டார் யாவர்க்கும் நாம் அரசாள்வதில் விருப்பமில்லை போலும்! இந்நாட்டுள் எவ்விடந் திரும்பினாலும் எமக்குப் பகைவர்கள் காணப்படுகின்றார்களே யொழிய நண்பர் ஒருவரையாவது காணோம்! இவ்வாறு நம்மேற் பிரியமில்லாக் குடிகள் வாழும் நாட்டைப் படைகொண்டு அடக்கி ஆள்வதிற் பயன்றான் என்னையோ? (மௌனம்) பரம்பரையாயுள்ள சேர நாட்டையும் இழந்து விடுவேமோ? போரினாற் பெற்ற பாண்டி நாட்டை இழத்தல் திண்ணமேயாம். அந்தோ! என்ன எண்ணமெண்ணுகின்றேம்!—(மௌனம்) ஏ! வர்மா! இத்தனை துன்பங்களையும் அநுபவித்துக் கொண்டாவது நீ உயிர் வாழ வேண்டுகின்றாயோ? உன்னை நேசிப்பார் ஒருவரும் இல்லையே! உனக்கு அரசாட்சியும் வேண்டுமோ?-(மௌனம்) இதற்கு முன் எனது அருமை மகள் ரூபாவதியை இழந்து விட்டேன்!—ஓ! ரூபாவதி! உன்னை யிழந்த பிறகும் நான் அரசுபுரிய இச்சிப்பது என்ன அறிவின்மைகாண்! அது கள்ளிக்கொம்புக்கு வெள்ளிப்பூண்

கட்டத் துணிந்ததுபோ லாகுமன்றோ? எனக்கோ உன்னைத் தவிர்த்து வேறு சந்ததிகளில்லை. நீ காணாமற் போனது முதல் எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை! ஐயோ! இவ்வூர்ப் பேய்ச் சனங்களுக்கு உன்னைப் பலி கொடுத்த கொடும்பாதகனேனும்வாழவேண்டுமோ!(மௌனம்) எனது பாதகச் செயல்களோ கணக்கற்றன! நன்னடக்கையே வடிவெடுத்து வந்தாற் போன்ற சற்குணவழுதியையும், அழகு நிறைந்த அவரது மனைவியையும் சிறையிலிட்டுக் காட்டிற்றுரத்தினேம்! சிவபிரான் அவர்களை அவ்விடத்துங் கருணைபுரிந்து காத்தருளினுர்!— இன்னும் வழுதிமகன் சுந்தராநந்தனை, ஒருபாவமு மறியாதவனை, கலையெலாமுணர்ந்த கட்டழகுடையவனை, சாந்தமே யுருவமாயிருந்தவனைச் சிறைச்சாலையிலிட்டு வருத்திக் கொன்றுவிட்டோம்! ஓ! கொலைப்பாதகச் சூரசேநா! நீ உயிர்துறந்து விண்ணுடு புக்கு ஆங்குள்ள சுந்தராநந்தனிடம் பொறுக்கும்படி கேட்டுக்கொள்ளுதலே தகுதி!—(மௌனம்) ஐயோ! தெய்வமே! மகளையிழந்து, உணவையொழிந்து, மானமழிந்து, கொலைகள் புரிந்து, வீரமிழந்து, பகைவர்கள் பாதத்தில் விழுந்து, அவரொடு சமாதானமாகி மனமொவ்வாத நிபந்தனைகள் அடங்கிய உடன்படிக்கை செய்துகொண்டு உயிர் வாழ்ந்திருத்தலைக் காட்டினும், தற்கொலைசெய்து கோடல் நல்லதன்றோ?—(மௌனம்) நான் செய்த கொடுஞ்செயல்களுக்குப் பிராணனை விடுவதே மேலானது! இனி யொருக்ஷணமேனும் தாமதியேன். இதோ இந்தவாளின்மீது பாய்ந்து உயிர்விடுவேன்! (வாளை நேர்நிறுவுகின்றான்.) சிவபெருமானே! சோமசுந்தர

மூர்த்தியே! சொக்கலிங்கவள்ளலே! நீயே யெனக்குக் கதி! இதோ நின்பாதாரவிந்தங்களை வந்து கடிதிற் சேருவேன்! என்னைக் கருணைக் கண்ணாற் பார்த்து ஆண்டருளுவாய்! (இறைவனைப் பாடுகின்றான்.)

*" ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் பொற்றி தமியனேன் றனிமை தீர்த்தே." ()

*" தீர்ந்தவன் பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி [போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
யார்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி." ()

[கோமளவல்லி வருகின்றாள்.]

கோமளவல்லி:—ஐயோ! பிராணநாதா! இஃதென்னை விபரீதம்! விபரீதம்!! என்னை இவ்வாறு தமியளாய் விட்டு விட்டு நீ உயிர் துறத்தல் நியாயமேயோ?

[கோமளவல்லி சூரசேநன் பாதங்களில் விழுந்து பிடித்துக் கொள்ளுகின்றாள்.]

சூரசேநன்:—ஓ! இஃதென்னை புதுமை! சிவபெருமானே! அடியேன் நின்னுடைய பாத நிழலைச் சேருதற்கும் நினக்குப் பிரிய மில்லையோ? என்ன செய்வேன்? தெய்வமே

கோமளவல்லி:—எனது பிராணேசனே! நான் சொல்லுகின்றதைக் கொஞ்சங் கவனமாய்க் கேட்பாய். எல்லாவற்றிற்கும் நாளைவரைக்கும் பொறுத்துக் கொள்வாய்' அதற்குட் சுசீலரும் வந்துவிடுவார். எதிரிகள் சமாதானத்திற்கு இணங்கிவிட்டாற் சரிதான். அப்படி

* திருவாசகம்

இல்லையாயின் இவ்விடத்தில் வாளிற்பாய்ந்து உயிர் விடு வதைக் காட்டிலும் போர்க்களஞ்சென்று சாவது மேன்மையாம். ஆகையால் என்னருமை நாயகனே! நீ என்னை வேண்டியாவது நாளைவரைக்கும் பொறுத்துக் கொள்வாயாக!

சூரசேநன் :—ஏ! பிராணவல்லி! நீ கூறுவதும் நியாயமேயாம்' என்ன செய்வேம்?

கோமளவல்லி :—ஏ! பிரியநாயகா! எல்லாவற்றிற்கும் நாம் இவ்விடத்தில் இருக்கவேண்டாம். போவோம். வருவாயாக.

சூரசேநன்:—விடு, விடு. வருகின்றேம்.

[யாவரும் போகின்றனர்.]

---

## மூன்றாங்களம்

இடம்:—சோழன் பாசறை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—சுந்தரன், சுரூபன்

சுந்தரன் :—என தருமைத் தலைவியே! நாமும் நமது மதுரை மாநகர் வந்து சேர்ந்தோம்! இதோ பார்! இப்பக்கம் வையைநதி யோடாநின்றது. அப்பக்கங் காணப்படுவது திருவாப்பனூராம். எமது கருணையங் கடலாகிய சிவ பெருமானார் அடியார்களுய்யும்பொருட்டுத் திருக் கோலங் கொண்டெழுந்தருளும் பெற்றியராதலின் சோழாந்தகப் பாண்டியன் பொருட்டு அவ்விடத்து ஆப்பு வடிவமாய் அமர்ந்து காட்சி கொடுத்தருளினர்! அம் மான்மியம் பற்றியன்றே அஃது ஆப்பனூரென்னும்

பெயர்த் தாயிற்று. நாம் மீட்டும் நமது சுந்தரேசப்பெருமானைத் தரிசிக்கும் பாக்கிய மடைந்தோம்! ஆயினும் இனிமேல் வரும் போரிற்கு நீ யஞ்சுகின்றாயோ?

சுரூபன்:—எனது பிரிய சுந்தரா! யான் நின்னை அடைந்த பிறகும் போர்க்குப் பயப்படுவேனோ? ஒருவேளை என் தந்தையார் யுத்தகளத்தில் இறக்கும்படி நேரிடுமாயின் வருந்துகிற்பேன் என்றெண்ணினையோ? அப்படி வருந்தப்படும் தன்மையை யுடையளாயின் யான் நின்னுடன் போக ஒருப்பட்டிரேனே! நீ ஒன்றாக்கும் யோசிக்க வேண்டுவதில்லை. கடவுள் செய்கிறபடி செய்யட்டும்!

சுந்தரன்:—சரி. அப்படியாயின் நாம் நம்முடைய நண்பர்களை மீண்டும் காணலாம். எனது ஆசிரியர் வித்தியாசாகரப் புலவர் என் செய்கின்றாரோ?

சுரூபன்:—ஏது? ஆசிரியர் ஞாபகம் அகத்தை விட்டகலாது போலும்.

சுந்தரன்:—(பாடுகின்றான்)

தலைமேல் விறகுடையான் றக்க படியா
விலைதா னடைந்தவுடன் வீழ்த்திப்போ மாறு
கலையாய்ந்த வாசானைக் கற்றபின்னை விட்டுப்
புலையார் பொதுமகள்போற் போவார்க்குய் வுண்டுகொலோ?
ஆசாற் பணியவெள்கு மன்பிலாப் போலிகளுந்
தேசார் குருபாதஞ் சிந்தியாத் தீயர்களும்
கூசார் புறங்கூறுங் குண்டுணிப்பேய் மாக்களும்
பேசாத மூங்கையராய்ப் பீடழிந்து மாய்வரந்தோ! (கஙு)
ஆசான் றனைமறந்த வன்பிலாப் புன்மகன்றான்
மாசார் படிற்றொழுக்க மாபா தகனலனோ?
மாசார் படிற்றொழுக்க மாபா தகனவனைக்
கூசாது கூற்றங் குறுகுமெனற் கையமின்றே! (கசா)

ஆதலின் என்னுயிர்போலுந் தேசிகரை மறத்தலியலு மோ? மற்று, எனது பிரியநேசர்களாகிய சுகுமாரனுஞ் சந்திரமுகனும் என்செய்கின்றார்களோ? அவர்களுக்கு விவாகமும் நடந்துவிட்டனவோ?

சுரூபன்:—அநேகமாய் அம்புஜாட்சிக்கும், கநகமாலைக்கும் கல்யாணம் நடந்திருக்குமென்று நினைக்கின்றேன்! இஃது இருக்கட்டும். எனது ஆனந்தத்தலைவனே! யான் என் தோழியரோடு பண்டு விளையாடுவது அப்பூஞ்சோலை தானே!

சுந்தரன்:—ஆமாம். அதுதான் நாமிருவரும் கண்டு காதல் கொண்ட பூஞ்சோலை! பார்! அஃது நீ இல்லாமையி னால் இலக்குமியில்லா இல்லத்தினையுஞ் சான்றோரில்லாச் சபையினையும் மதியமில்லா வானத்தினையும், நாயக னில்லா நங்கையினையும் போலாகின்றது!

சுரூபன்:—சரி. அஃதிருக்கட்டும். எனது சுந்தர வள்ளலே! நீ உனது கானரசத்தினால் என்னை ஆனந்தப்படுத்திச் சுந்தரானந்தன் என்று நினக்கிட்ட பெயர் சாலுமென்று காட்டுவாயாக.

சுந்தரன்:—ஆ! அப்படியே என் பெயரெனக்குச் சாலுமென் பதை நிலைநிறுத்திக் கொள்கின்றேன்! கேட்பாயாக.

[பாடுகின்றான்]

சதாசிவ பராபரா தயாநிதே மகாகுரோ
சிதானவா சுகாகரா திவாகரப் ரகாசனே
யுதாரமா குணாத்மனே யுகாரரூ பியேநினைச்
சதாமனத் திருத்துதுஞ் சபாபதீ யுமேசனே. (கரு)

மார்பினு நாவினு மாண்பறி யார்த மனைக்கிழத்தி
மார்தமை வைத்து வருத்துநர் தம்மை மதிக்கிலே
மேர்கிளை ரில்லா டனக்கிணை யென்றுத னின்னுடலி
னேர்பெறப் பாதி யளித்தானை நித்த நினைக்குதுமே. (கசு)

வாரேனுங்கும் பொழில்புடைசூழ் மாமதுரைத் தேவை
வளரெழில்சேர் சொக்கேச வள்ளலைநம் மரசைக்
கூகினுங்கும் பிறைமுடித்த பிஞ்ஞகனை மனமே
கூடிநிதம் பாடியினி தாடுகநீ வாராய். (கஎ)

நறைமுடிக்கார்க் குழலுமைசேர் நம்பனைச்செம் பொருளை
நஞ்சுண்டு தேவருயிர் நல்கமுதை யடியார்
குறைமுடிக்குங் கோமானைக் குருமணியை மனமே
கூடிநிதம் பாடியினி தாடுகநீ வாராய். (கஅ)

நலவிமல நாதனைத்தன் னன்பருளத் தாடு
நடராசப் பெருமானை நண்ணுமுயிர்க் குயிரைக்
குலவிமறை கலவிநனி யுறைபொருளை மனமே
கூடிநிதம் பாடியினி தாடுகநீ வாராய். (ககூ)

[சேவகன் வருகின்றான்.]

அடே! சேவகா! என்ன செய்தி?

**சேவகன்:**—ஐயா! சேரராசன் மந்திரி சுசீலர் வந்திருக்கிறார்.

**சுரூபன்:**—அப்படியா! அவர் வந்திருக்கிறாரா! சரிதான். நாம் அரசனிடம் தெரியப்படுத்துகின்றோம். நீ போ.

[சேவகன் போகின்றான்.]

**சுந்தரன்:**—சரி, நீ உள்ளே போய்விடு. நான் மாத்திர மிவ்விட மிருக்கின்றேன். அரசர்கள் வருகிற சமயமாயிற்று.

[சுரூபன் போகின்றான்.]

இன்னுஞ் சிறிது நேரத்திற் கெல்லாம் சமர் தொடங்க வேண்டும். அப்படியிருக்கச் சுசீலர் இப்போது இவ்வி

டம் வந்ததன் காரணம் என்னே? ஒருவேளை வர்மனுக்குத் தெரியாமல் எந்தை சற்குண வழுதியாரைக் காண வந்தனரோ? தெரியவில்லை. எல்லாம் அரசன் வந்த பின்றைச் சுசீலர் சொல்லும்போது கேட்போம்.

[வீரேந்திரன் வருகின்றான்.]

மகாராஜா அவர்களுக்கு அடியேன் சுந்தரன் வந்தனம்.

**வீரேந்திரன்:**—சுந்தரரே! என்ன சமாசாரம்? உம்முடைய நண்பர் சுரூபரெங்கே காணோம்?

**சுந்தரன்:**—ஏன்? இதுவரை அவர் இங்கேயே யிருந்துவிட்டு இப்பொழுதுதானே அந்தப் பக்கமாக வந்தார்!

**வீரேந்திரன்:**—சரி. மற்றைப்படி நம்முடைய படைகளெல்லாம் அணிவகுக்கப்பட் டிருக்கின்றனவா?

**சுந்தரன்:**—ஓ! அவை யெல்லாம் ஒழுங்காய்த்தாம் இருக்கின்றன. அதற்கொன்றுஞ் சந்தேகமில்லை. இது நிற்க. சேரன் மந்திரி சுசீலர் ஏதோ காரியமாய் வெளியில் வந்திருப்பதாகச் சேவகன் சொன்னான்.

**வீரேந்திரன்:**—என்ன! நிஜந்தானா?

**சுந்தரன்:**—ஆம். நிஜந்தான், மகாராஜா!

**வீரேந்திரன்:**—அப்படியாயின் நமது சற்குணவழுதியா ரெங்கே? இன்னும் இங்கே வரவில்லையோ?

[சற்குணன் வருகின்றான்.]

**சுந்தரன்:**—ஏன்! அதோ அவர்களும் வந்து விட்டார்களே?

**வீரேந்திரன்:**—வந்தனம் வழுதியாரே! வாருங்கள். இப்படி வீற்றிருங்கள். கேட்டீர்களோ ஒரு விசேஷம்?

**சற்குணன்:**—வந்தனம். வந்தனம். அப்படி யென்ன விசேஷம்? தெரியாதே. ஏன் சுந்தரரே! நிற்கின்றீர்? இப்படி யுட்காருமே?

சுந்தரன்:—அதற்கென்ன? பாதகமில்லை. நான் இதோ இப்படி யுட்காருகின்றேன்.

வீரேந்திரன்:—சேரன் மந்திரி சுசீலனென்பவன் ஏதோகாரியமாய் வந்திருக்கின்றானாம்!

சற்குணன்:—ஆ! அப்படியா? ஆனால் அவரை யுள்ளே வரச் சொல்லி என்ன சமாசாரமென்று கேட்கலாமே?

வீரேந்திரன்:—ஏ! சேவகா!

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகாராசா! ஆணை!

வீரேந்திரன்:—நீ போய் வெளியில் வந்திருக்கும் சேரன் மந்திரி சுசீலனை யுள்ளே வரச்சொல்.

[சேவகன் போகின்றான்.]

சற்குணன்:—அவர் முன் நம்மிடத்து இருந்த வராகையினாலே யொருவேளை நம்மைப்பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்திருப்பார். சகலமுங் கேட்டால் தாமே தெரிகின்றன.

[சுசீலன் வருகின்றான்.]

சுசீலன்:—அடியேன் சேரன் மந்திரி சுசீலன் உபய மகாராஜா அவர்களுக்கும் வந்தனம்.

சற்குணன்:—சுசீலரே! இப்படி யுட்காரும். என்ன சமாசாரம் சௌக்கியமா யிருக்கின்றீரா? ஊர்முழுதும் இனிது வாழ்கின்றதா?

சுசீலன்:—ஆம். நம் சுந்தரேசர் கிருபையினால் அடியேன் சௌக்கியமாய்த் தானிருக்கின்றேன். மற்றைப்படி யான் வேறு இராஜகாரியமாய் வந்திருக்கின்றேன்.

வீரேந்திரன்:—மந்திரியாரே! நீர் வந்த ராஜகாரியமென்ன? சீக்கிரஞ் சொல்லும். நாம் போர் தொடங்கவேண்டும்.

சுசீலன்:—அடியேன் தாங்களும் சேரனும் பொருதாற் பலர் மாளவேண்டுமே யென்னும் நோக்கத்தோடு வெகு கஷ்டத்துடன் சேரராஜன் சூரசேநனைத் தங்களுடன் சமாதானமாய்ப் போகும்படி இணக்கி யிருக்கிறேன். ஒருவேளை தாங்களு மெளியேன்மீது கருணைகூர்ந்து சமர் நிறுத்தி எல்லாருஞ் சேர்ந்து ஒருடன்படிக்கை செய்து கோடல் கூடாதா என்னும் எண்ணத்தோடு அடியேன் இவ்விடம் வந்தேன்.

வீரேந்திரன்:—என்ன? ஐயா! வழுதியாரே! சுசீலர் சொல்லுகிறதைக் கேட்டீர்களோ?

சற்குணன்:—அப்படியாயின் சுசீலரே! நாம் தந்திரதீரரைத் தூதனுப்பியபோது சேரன் இரங்கி யிருக்கலாமே!

வீரேந்திரன்:—அதுவுமன்றி நந் தந்திரதீரரைச் சேரன் தன் ஆள்விட்டடித்தது நீதியாகுமோ?

சுசீலன்:—இவ்வாறு தந்திரதீரரை யாரோ சிற்சில கயவர்கள் இடைவழியில் அடித்துவிட்டார்கள் என்பதை எங்கோன் சூரசேநன் உணர்ந்து நகர்முழுதும் அவர்களைக் கண்டு பிடித்துத் தருபவர்கட்கு வெகுமதி கொடுப்பதாகப் பறையறைவித் திருக்கின்றான்.

சற்குணன்:—அப்படியாயின் சரிதான்.

சுந்தரன்:—எல்லாவற்றிற்கும் உம்முடைய அரசன்சூரசேநனை இவ்விடம் அழைத்துக்கொண்டு வம்மின்!

வீரேந்திரன்:—ஆமாம். சுந்தரரே! நன்றாய்ச்சொன்னீர்! சரிதான். சுசீலரே! தாங்கள் சென்று சேரனை அழைத்து வந்து உடன்படிக்கை செய்துகொண்டு போகலாம்.

சுசீலன்:—ஆனால் அடியேன் போய் வருகின்றேன்.

**சற்குணன்:**—சரி, சரி. போய்வாரும். [சுசீலன் போகின்றான்.]

**வீரேந்திரன்:**—ஏன்? வழுதியாரே! இப்பொழுது இங்கே வந்துபோன சுசீலரென்பவர் நிஜமாகவே சமாதானம் பேசவந்தவரோ அல்லது நாம் என்ன செய்கிறோம் என்று வேவுபார்க்க வந்தவரோ? தங்களுக்கு இதைக் குறித்து ஏதாவது தெரியுமோ?

**சற்குணன்:**—இல்லை, இல்லை. அப்படி வேவுபார்க்க வந்தவரா யிருக்கமாட்டார்.

**வீரேந்திரன்:**—இல்லாவிட்டால் நல்லதுதான். எமக்கென்னவோ ஆச்சரியமா யிருக்கின்றது! இதுவரையிலும் நாம் போர்தொடங்குந் தருணமட்டும் சமர்செய்யச் சன்னத்தனுயிருந்தவன் இப்போது உடன்படிக்கைக்குவருவதை யோசித்துப் பார்க்குமிடத்து ஏதாவது எதிர்பாராத செய்தி நிகழ்ந்து தானிருக்கவேண்டு மென்பது தோன்றுகின்றது.

**சுந்தரன்:**—மகா ராஜா அவர்கள் எனக்குக் கொஞ்சம் உத்தரவு கொடுக்க வேண்டும். யான் நம்முடைய சேனைத் தலைவனிடம் போகவேண்டும்.

**வீரேந்திரன்:**—சரி. சீக்கிரமாக வந்து சேரும். வர்மனோடு நாம் உடன் படிக்கை செய்கையில் நீரும் இருக்க வேண்டும்.

[சுந்தரன் போகின்றான்.]

ஓ! வழுதியாரே! தாங்கள் கவனித்துப் பார்த்திருக்கிறீர்களோ நம் சுந்தரரைப் பற்றி? மகா புத்திமானு யிருக்கிறார்! இராஜ தந்திரங்களும் போர்செய்ய முறைகளும் வெகு நன்றாகத் தெரிந்தவர் போலக் காணப்படுகிறார்! மேலும் மிகவும் கல்வி கற்றிருக்கிறார்

இவ்வளவு இளமைப் பருவத்திலே இவர்போலுங் கல்வி மான் யாளெங்குங் கண்டதில்லை !

**சற்குணன்:**—யான் முன்னொருமுறை தஞ்சையிலிருந்தபோது அவரோடு சம்பாஷித்திருக்கின்றேன். அப்பொழுது அவர் பேசியதினின்றும் அவர் அரசாட்சி முறையிலும் நீதி நூல்களிலும் இசை நூலிலும் விசேஷப் பயிற்சி யுள்ளவரென்று தெரிந்து கொண்டேன்.

**வீரேந்திரன்:**—இன்னும் அவருடைய தோழர் சுரூபரென்ப வர் மிகுதியாய்ப் பேசுகிறதில்லை. அப்படியே அவர் பேசத் தொடங்கிவிட்டால் அவர் பேச்சினும் மதுர மானது வேறொன்றுமில்லை !

**சற்குணன்:**—ஆம். அவர் இனிய குரலுள்ளவர்; மிக மென் மைத் தன்மையும் அழகுமுடையவர்! அதிகமாய் யாவ ரோடும் ஊடாடிப் பேசுகிறவரு மல்லர். நானும் இரண் டொரு முறை கவனித்திருக்கிறேன். மற்றைப்படி நம் முடைய படைகளையும் பார்த்துக்கொண்டு வருவோம் வாருங்கள்.

[யாவரும் போகின்றனர்]

---

## நாங்காங்களம்

**இடம்:**—மதுரைமாநகரிலொரு வீதி

**காலம்:**—காலை

**பாத்திரங்கள்:**–வித்தியாசாகரப்புலவர், சில கனவான்கள்

**முதற்கனவான்:**—ஓய் ! புலவரே! மந்திரி சுசீலர் நம் வழுதியா ரோடு வர்மன் பொருட்டுச் சமாதானம் பேசப்போயிருக் கிறாராமே ! அதென்ன மெய்தானா ?

புலவர்:—மெய்யோ! பொய்யோ! அதனை யாம் அறிந்திலேம். இது நிற்க. யாமொன்று செய்யவுன்னினேம். அஃதென்னை யென்பீரேற் கூறுதும். (பாடுகின்றார்)

அருவுருவ மானபர மானந்தத் தனிக்கடவுண்
மருவுலுறு மெழில்வையை மணியாற்றின் வடகரைக்கண்
வருமனொடு சமர்புரிய வந்தவிரு பெருவேந்தர்
கருமமுற் றுகவென்றி பெறுகவெனக் கவிசெய்வான். (௧00)

மனங்கொண்டு பல்விதமாம் வாழ்த்துசெய்யுண் மகவியற்றிக்
கனங்கொண்டு சிறப்புற்றுக் கழறருபட் டம்பெற்றி
யினங்கொண்டு நன்மணியி னினங்கொண்டு களிப்புடனே
தினங்கண்டு தனங்கொண்டு சீர்மேன்மைத் தனங்கொண்டு ()

முதற்கனவான்:—ஓய்! ஓய்!! புலவரே! போதும்! போதும்!! போதும்!!! நிறுத்தும்! நிறுத்தும்!!

புலவர்:—என்ன! என்ன!! அப்படிச்செய்தாலென்ன!

இரண்டாங்கனவான்:—நன்று! நன்று! நுமது வெள்ளறிவு இன்னதென்று பொள்ளெனப் புலப்பட்டதே!

புலவர்:—ஏயே! (பாடுகின்றார்)

கற்றுணர்ந்த நல்ல கவிவாணனென் றனக்குக்
குற்றங்கற் பித்த குணமிலியிச்—சிற்றறிவை
யெவ்வயினீ கற்றா யெவர்கொலுப தேசித்தார்
செவ்வியிலாப் புன்மையினுய் செல். (௧0௨)

இரண்டாங்கனவான்:—சரிதான். புலவருக்குப் பித்தம் அதிகமாய் விட்டது போலும்! அதுதான் வாய்க்குவந்தபடியெல்லாம் பிதற்றுகின்றார்!

புலவர்:—எனையா!

இரண்டாங்கனவான்:—ஆமாம். உம்மைத்தாம்!

புலவர்:—யானே பிதற்றினேன் கொலோ? அன்றி நீவிர் பிதற்றினீர் கொலோ? நன்னராலோசித்துக் கூறுதிர்.

இரண்டாங்கனவான்:—ஓய்! புலவீர்! இதுகாறும் நும்மைப் புல்வாய்ப் புலவரென்றுகருதியிருந்தேன்! இப்பொழுது நீவிர் பெருவாய்ப் புலவராயினீரே!

புலவர்:—கேட்டீர்! கேட்டீர்! அவர்கிளத்தலை.

இரண்டாங்கனவான்:—ஓய்! உமக்குக் கிழத்தலையா? எமக்குக்கிழத்தலையா!

முதற்கனவான்:—அதுமட்டுமா? அவர் பணவாசைகொண்ட பிணம்!

புலவர்:—யாவர்?

இரண்டாங்கனவான்:—நீர் தாம்!

புலவர்:—நீவிர் வாளா திருத்திர்! யாம் உம்மோடு பேசுகின்றிலேம்.

இரண்டாங்கனவான்:—ஆமாம்! சரியாய்ச் சொன்னீர்! "பணவாசை கொண்ட பிணம்!" நும்வாய்க்குச் சர்க்கரையிடவேண்டும்.

புலவர்:—வெற்றுரை! வெற்றுரை!!

இரண்டாங்கனவான்:—வெற்றுரையா! கேளும் யான் சொல்லுகின்றேன். நீர் முன் சற்குணவழுதியார் அரசராயிருக்குங்காலத்து அவர் வாயில்வித்வானயிருந்து அவர் மீது புகழ்ச்சிக்கவி பாடினீர்! இதுவரைக்கும் வருமனைப்புகழ்ந்தீர்! இப்பொழுதோ சோமனையும் வழுதியையும் புகழவெண்ணினீர்! இவ்வளவும் அந்தப் பணப்பேராசையினலோ அன்றோ?

புலவர்:—ஓகோ! யாம் முன்னர் வன்மனைப்பாடிய கவியுட் புகழ்ந்தன மெனக் கருதினீரோ! அது வசைக்கவியென்

பது மறியீரோ? மங்கல முதன்மொழி யல்லாத 'நிம்பம்' என்னுஞ் சொல்லைப் பிரயோகித்ததனால் மங்கலப்பொருத்த மின்மையும், சிறப்பில் சொல்லாதலின் சொற்பொருத்த மின்மையும் ஒற்று உட்பட நான்கெழுத் தாதலின் எழுத்துப்பொருத்த மின்மையும், இன்னும்பிறபொருத்த மின்மையும் நீவிர் உணர்கிலீரோ? அன்றியும் 'நிமிடத்தினிற்றொலைய' என்பதனை 'நிமிடத்தில் நின்றொலைய' என்று பிரித்து 'அவன்' என்பதனை யெழுவாயாக்கி 'உறும்' என்ற பயனிலையொடு முடித்து வேறுபொருள் கண்டிலீரோ?

முதற்கனவான்:—நீர் சொன்ன கவியிலே முதற்சொல் வழுதிக்கு அடைமொழியா யிருப்பதனாலே இவ்வமங்கலம் வழுதியைப் பற்றாதோ?

இரண்டாங்கனவான்:—இப்பொழுது நாம் கேட்டால் இந்த மாதிரியும் வருமனுக்கு வேண்டியவன் யாருங்கேட்டால் அது வழுதியைச் சேருமென்றும் தமக்குத் தோன்றிய படி யெல்லாம் கூறித்திரியும் புலவர் பெருமானல்லரோ? இதைக் கருதியன்றோ சோழனுங் கம்பரை நோக்கிப்,

"போற்றினும் போற்றுவர் பொருள்கொ டாவிடிற்
றூற்றினுந் தூற்றுவர் சொன்ன சொற்களை
மாற்றினு மாற்றுவர் வன்க ணாளர்கள்
கூற்றினும் பாவலர் கொடிய ராவரே" (சoஙு

என்று சொல்லியது?

[மூன்றாங்கனவான் வருகின்றான்.]

மூன்றாங்கனவான்:—ஓய்! புலவரே! உமக்கொரு சமாசாரம் தெரியாதே!

புலவர்:—என்ன? என்ன?

முதற்கனவான்:—அவர் சொன்னதற்குச் சமாதானஞ் சொல்லாமற் புதுச் சமாசாரம் விசாரிக்கப் புகுந்தீரே!

இரண்டாங்கனவான்:—சொல்லத் தெரிந்தால் உடனே சொல்லமாட்டாரோ! சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்!

புலவர்:—அவை யெல்லாம் நம் வயிற் பொருந்தா. சற்றே பொறுத்திர். இவர் சொல்வதைச் செவிக் கொண்ட பின்றை நுமக்குச் சமாதானம் சொல்லுகின்றும்.

மூன்றாங்கனவான்:—இப்பொழுது தான் பார்த்தேன். மந்திரி சுசீலரும் இந்த வஞ்சகவர்மனும் சில மெய்காப்பாளருடன் சோழன் பாசறைக்குப் போகிறார்கள்! ஏதோ சமாதானம் பேசுகிறதற்காம்!

புலவர்:—கேட்டீரோ அவர் கூற்றினை? யாம் அவ்வருமன் மீது இவ்வசைக் கவிபாடிய ஞான்று தொட்டு அவன் எய்திய இடுக்கண்களும் இப்போழ்ததத்து அவன் நம் வழுதியார் தாட்டுணையில் வீழ்ந்து சமாதானம் பேசி உயிர் தப்பிப் பிழைக்க எண்ணுதலுமே அவ்வசை சூரசேநனையே பற்றியதென்பதற்குத் தக்க சான்று பகரும். அஃதான்றியும் வழுதியார் மாட்டு எமக்குள அன்பு அளவிட்டுரைக்கற் பான்மையதன்று. எமது மாணாக்கருட் சிறந்தவனாய சுந்தராநந்தன்றனக்கு என் மீதிருந்த அன்பையும் எனக்கு அவன் மேலிருந்த ஆதரத்தையும் பற்றி நும்மிடத் துரைப்பதென்னே! அந்தோ! இத்தகைய மாணாக்கனைக் கொலைக்களம் படுத்த வருமன் தலைக்கண் உருமுறுதோ!

முதற்கனவான்:—சரி. இவரிப்படித்தான் என்னவாவது சள சள வென்று பேசிக்கொண்டிருப்பார்!

இரண்டாங்கனவான்:—ஆமாம். நாமும் வையையாற்றின் தென்கரைக்கண் ஒளித்திருந்து வர்மன் சமாதானம் செய்துகொண்டு வரும்பொழுது பார்ப்போம். வாரும்.

முதற்கனவான்:—இரும், இரும். என்ன போர்முரசம் முழங்குகின்றதோ? சரிதான். யுத்தந் தொடங்கப் போகிறார்கள் போலும்.

மூன்றாங்கனவான்:—போம், ஐயா! போம். யுத்தமாவது நடக்கவாவது! இவன்போய் வழுதியார் காலிலே வீழ்ந்து 'ஐயா அப்பா' என்று கெஞ்சப் போகிறான்! அவர் இரக்கப்பட்டு இவன் குற்றத்தை மறப்பாரே யன்றிப் போர் புரியார்!

புலவர்:—யாமிதை? குறித்து இப்பொழுது பேசிக்கொண்டிருத்தலெவன்கொல்? போகுதும். வம்மின்.

[யாவரும் போகின்றனர்.]

## ஐந்தாங்களம்

இடம்:—சோழன் பாசறை

காலம்:—காலை

பாத்திரங்கள்:—சற்குணன், வீரேந்திரன்

வீரேந்திரன்:—ஏன்? வழுதியாரே! படைகளையெல்லாம் நன்றாய்ச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தீர்களா? போர் வீரர்கள் யாவரும் யுத்தசந்நத்தரா யிருக்கிறார்களா?

சற்குணன்:—நன்றாய்த்தான் பார்த்தேன். தார்ப்படை தூசிப்படை முதலிய யாவும் போர்தொடங்க நம்முடைய கட்டளையினைத்தாம் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்றன.

[சேவகன் வருகின்றான்.]

வீரேந்திரன்:—அடே! சேவகா! அந்தச் சுசீலனும், சூரசேநனும் வந்திருக்கிறார்களோ?

சேவகன்:—ஆமாம். மகராசா!

வீரேந்திரன்:—ஆனால் நீ சென்று அவர்களை வரும்படி சொல்லு.

[சேவகன் போகின்றான்]

(சுசீலன், சூரசேநன், மெய்காப்பாளர் இவர்கள் வருகின்றனர்)

சூரசேநன்:—வந்தனம்.

(சற்குணனும் வீரேந்திரனும் எழுகின்றனர்)

வீரேந்திரன்:—வந்தனம், வந்தனம். தாங்கள் இப்படி வந்து வீற்றிருந்தருளலாமே.

சூரசேநன்:—இல்லை. இப்படி யுட்காருகிறோம்.

வீரேந்திரன்:—அவ்விடத்து இஷ்டம் எப்படியோ அப்படியே!

சற்குணன்:—ஏன் நிற்கிறீர்கள்? இப்படி யுட்காருங்கள்.

சுசீலன்:—அதற்கென்ன? உட்காருகிறோம்.

வீரேந்திரன்:—எங்கே நம்முடைய சுந்தரர்? இன்னும் வரக் காணோம்.

சற்குணன்:—இதோ வந்துவிடுவார். அவர் ஒருநாளும் காலதாமதஞ் செய்யமாட்டார். ஒருவேளை தம்முடைய ஆன்ம நேசராகிய சுரூபரையுங் கூட்டிக்கொண்டு வருவார்.

வீரேந்திரன்:—இது நிற்க. யாம் தங்களுடைய மந்திரியார் சுசீலர் மூலமாய்த் தாங்களும் யாமும் சாமோபாயத்தை நாடி நடத்தல் நலமென்பது பற்றித் தங்களுக்கு எம்முடன் சமாதானமாய்ப் போவதற்கு இஷ்டந்தான் என்

பதை யுணர்ந்து கொண்டோம். அஃது எமக்கும் இஷ்டமேயாமாயினும் எமது வழுதியார் இஷ்டம் எப்படியோ? அவருக்குத் துணைவலியாய்ப் போந்தாம்.

சீலன்:—இதற்குமுன் என்ன வித்தியாசங்கள் நடந்திருந்த போதிலும், அவற்றை யெல்லாம் மறந்துவிட வேண்டும். மற்றைப்படி நாமெல்லாம் இன்று நட்பாளாராயினோ மென்று எண்ணிக்கொள்ள வேண்டும். இவை தாம் யான் சொல்லவிரும்பினவை.

சூரசேநன்:—ஆம். அந்தப்படியே செய்வதற்குத் தடை யொன்றுமில்லை.

சற்குணன்:—அவையெல்லாம் சரிதாம். சுசீலர் சொல்வது எமக்கும் உடன்பாடேயாம். (பாடுகின்றான்)

சந்தன நறுமரந் தன்னை வீழ்த்திய
வுந்துவாட் படையிற்கு முதவு நன்மணஞ்
சிந்தையி னிதைநன்கு தெளிகி லாரம்ம
தந்தம நலமும்போய்ச் சாத லென்கொலோ? (கoச)

வீரேந்திரன்:—அப்படியாயின் யாம் உடன்படிக்கையின் நிபந்தனைகள் இன்னின்னவெனத் தீர்த்துக்கொண்டு பொழுது போக்கின்றி எழுதத் தொடங்கவேண்டியது தான்.

சுசீலன்:—ஆம், அப்படி இன்னின்னவெனத் தீர்க்கவேண்டிய நிபந்தனைகள் என்ன இருக்கப்போகின்றன?

சற்குணன்:—எமது நாட்டை எம்மிடம் ஒப்பித்துவிட்டு அவர் தம்முடைய சேர நாட்டிற்குப் போகவேண்டியது தான். மற்றைப்படி வேறென்ன?

சூரசேநன்:—ஆம். யாம் வழுதியார் நாட்டை அவரிடமே யொப்பித்து விடுகின்றோம். அதற்கு ஆக்ஷேபமொன்று

மில்லை. பிறகு எமது சேரநாட்டை யாம் பெறுவதற்கு ஏற்ற ஏற்பாடுகள் நீவிர் செய்ய வேண்டும்.

வீரேந்திரன்:—அதற்கென்ன? நீர் உமது நாட்டைப் பெறுவதற்குத் தடையென்ன?

சுசீலன்:—ஐயோ! அது தெரியாதோ தங்களுக்கு? நமது வழுதியாருடைய மாமனார் வீரமார்த்தாண்டத் தொண்டைராஜர் சேரநாட்டின் மீது படையெடுத்துச் சென்று கருவூரில் இப்போது யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது!

சற்குணன்:—இஃதென்னை? ஆச்சரியமாய் இருக்கின்றதே! நாம் முன்பு பரங்கிரிப் போர்க்கு அவரிடம் உதவிகோளாமைபற்றியும், பிறகு தம் நகராகிய காஞ்சிக்குப்போகாது தஞ்சைக்குப் போனமை பற்றியும் உண்டாகிய கோபத்தினுலெம்மிடந் தெரிவியாது தாமே படையெடுத்துச் சென்றிருக்கிறார் போலும்! இதுவும் ஒரு விநோதமே மற்றைப்படி, கடம்பவனப் பெருமான் கருணையினால் மீட்டும் இராஜ்யாதிகாரம் பெற்றேன்! பெற்றும்பயனென்னை?—ஓ! என்னருமைச் சுந்தராநந்தனே! இனி இந்நாட்டினை ஆள்பவர் யாவர்? நீயும் உயிர்விடுத்தாயே!

(கண்ணீர் சொரிகின்றான்.)

சூரசேநன்:—ஓ! வழுதியாரே! எளியேன் எவ்வளவோ தவஞ் செய்து புத்திரபாக்கிய மின்றி வருந்துங் காலத்து மகாதேவனருளால் ஒரு மகளுதித்தனள்! அவளையும் இழக்குந் தெளர்ப்பாக்கியம் சம்பவித்தது! இனிஅவளை இழந்த பிறகு எனக்கு அரசாள விருப்பமில்லை. ஆகையால் நீரே அந்தச் சேரநாட்டையுங் கைக்கொள்ளும்.

(பெருமூச்செறிகின்றான்.)

[சுந்தரானந்தனும் ரூபாவதியும் தங்கள் மாறுவேடம் நீங்கி வருகின்றனர்.]

சுந்தரானந்தன்:—எனது அருமைத் தந்தையாரே! தங்கள் குமாரன் அடியேன் சுந்தரானந்தன் நமஸ்காரம்!

(வணங்குகின்றான்)

ரூபாவதி:—எனது பிரியமுள்ள தகப்பனாரே! தங்கள் புதல்வி ரூபாவதி தெண்டனிடுகின்றேன்! (வணங்குகின்றாள்)

சற்குணன்:—(கண்ணீர் சொரிந்து) அப்பா! எனதருமை மகனே! சுந்தரானந்தா! மதிகுலந் தழைக்க வந்த மாணிக்கமே! இன்னுமுளையோ? இன்று தான் உன்னைப் பெற்றெடுத்தேன்! (தழுவிமுத்தமிடுகின்றான்.)

சூரசேநன்:—(கண்ணீர் சொரிந்து) அம்மா! என் கண்ணே! ரூபாவதி! என்குலம் விளங்கவந்த கோகிலாமணியே! நீ இன்னும் உயிரோடிருக்கிறாயோ? நீ இதுவரையிலும் எங்கிருந்தாயோ?

(தழுவி முத்தமிடுகிறான்.)

சற்குணன்:—சோமசுந்தரேசப் பெருமானே! எளியேம் மீதும் நின்னுடைய அருளிருந்தவாறு என்னே! என்னே!!

(இறைவனைத் துதித்துப் பாடுகின்றான்.)

*"தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க

* திருவாசகம்

சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க." (கO௫)

**சூரசேநன்:**—காணாமற் போன எனது அருமை மகளைப்பெற்றேன்! இனிமேல் என்னெனக்கு அரியதேயோ! சந்திரசேகரருக்கு எம்பிரான் கருணை பிறந்தது இன்று தானோ?
(இறைவனைத் துதித்துப் பாடுகின்றான்.)

* "ஆடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்குங் குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி" (கOசு)

**வீரேந்திரன்:**—நம்முடைய நாட்டிற் சுந்தரராயும், சுரூபராயும் இருந்தவர்கள் இவர்தாமோ? ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஏன்? வழுதியாரே! உமது மகனுடைய அடையாளம் உமக்குந் தெரியாமலா போயிற்று? ஆனாற் சுரூபரைப் பார்க்கும்போதெல்லாம் எனக்குக் கொஞ்சம் சந்தேகம் இருந்துகொண்டே யிருந்தது.

**சுசீலன்:**—பரமசிவாக்ஞை இப்படி யெல்லாம் முடியவேண்டும் என்று இருக்கும்போது, யார் என்ன செய்தாலும் முடியுமோ?

**சூரசேநன்:**—என் கண்மணியே! ரூபாவதி! நீ சற்குணவழுதியார் மகன் சுந்தரானந்தகன் மீது காதல்கொண்டு உடன் போயினையோ? இனி ஒரு கணமேனும் தாமேல்! ஓ! சுசீலரே! நீர் இப்பொழுதே சென்று மணமுரசஞ் சாற்றச் சொல்லுவீர்! நன்முகூர்த்தம் பார்த்து நம்பெண்மணி ரூபாவதிக்குஞ் சுந்தரானந்தனுக்கும் விவாகம் நடத்தி விடுவோம்! ஏன்? தாங்களெல்லோரும் அரண்மனைக்கு

* திருவாசகம்

எழுந்தருளலாமே! பகவான் சிவபெருமானுடைய கடாட்சத்தாற் சகலமும் இனிமையாய் முடிந்தன!

[சுசீலன் போகின்றான்.]

சற்குணன்:—ஆ! அப்படியா! இதோ புறப்பட்டோம்.

வீரேந்திரன்:—தாங்கள் முன்னர்ப்போங்கள். இதோ யாமும், சேனைத்தலைவர் முதலாயினோர்க்கு மணமுரசமார்க்கும்படி உத்தரவு செய்துவிட்டு வருகின்றோம்.

சூரசேநன்:—இல்லை, இல்லை. யாராவது சேவகர் மூலமாய்ச் சொல்லி யனுப்பிக்கொள்ளலாம். வாருங்கள் போகலாம்.

(கைதொட்டீர்க்கின்றான்)

சற்குணன்:—நம் அந்தப்புரத்திற்குப் போய் ஆங்குள்ளவர்களையும் அழைத்துக்கொண்டு செல்வோமே!

சூரசேநன்:—அவர்களை அழைத்து வருவதற்கு எமது பட்டமகிஷியைப் பரிவாரங்களோடு வாத்தியகோஷங்களுடன் அனுப்புகின்றோம். நீங்கள் வாருங்கள்.

வீரேந்திரன்:—ஆனாற்சரி, வாருங்கள். வழுதியாரே! போகலாம். நீங்களிருவரும் சம்பந்திகளாய் விட்டீர்கள்! இனிமேல் உங்களுக்கு ஒருகுறையுமில்லை.

[யாவரும் போகின்றனர்.]

---

## ஆறுங்களம்

இடம்:—பாண்டியனரண்மனை

காலம்:—முற்பகல்

பாத்திரங்கள்:—கோமளவல்லி, செவிலி

கோமளவல்லி:—சமாதானஞ் செய்துகொண்டு வரப்போன தலைவரும் சுசீலரும் யாது காரணத்தினாலோ இதுவரையினும்வரவில்லை? ஏதேனும்விபரீதம் விளைந்துவிட்டதோ?

செவிலி:—அம்மையே! தாங்க ளெண்ணுகிறபடி அவ்வாறொன்றும் நடந்திருக்கமாட்டாது என்று எண்ணுகிறேன். ஏனெனில் அரசர்களா யிருப்பவர்கள் அத்தன்மையான வஞ்சகப்போர் ஒன்றும் மிலேச்சர்களைப் போலச் செய்யவே மாட்டார்கள். ஆகையால் தாயே! இதைக்குறித்துக் கவலைப்பட வேண்டாம்.

[சுசீலன் வருகின்றான்.]

சுசீலன்:—அடியேன் மந்திரி சுசிலன் அரசியாரவர்கட்கு வந்தனம்.

கோமளவல்லி:—என்? சுசீலரே! போனகாரியம் என்னுயிற்று? எல்லாஞ் செவ்வையாய் முடிந்தனவோ? எங்கே மகாராஜா அவர்கள்? இன்னும் வரக்காணோம்!

சுசீலன்:—தாயே! எல்லாம் நம் மதுரேசர் கிருபையினாலே இனிமையாய் முடிந்துவிட்டன! காணாமற்போன மகள் நமது ரூபாவதியும் வருகின்றாள்!

கோமளவல்லி:—(கண்ணீர் சொரிந்து கொண்டு) ஓ! ரூபாவதீ! இன்று தான் நீ என்வயிற்றிற் பிறந்தாய்! மீனாட்சீ! உன்னை வேண்டிக்கொண்டதன் பலனை யடைந்தேன்! நீ தான் இந்தக் கலியுகத்தில் உண்மையான தேவதை! உன்னை நம்பினோர்க்குக் குறையு முண்டாமோ?

செவிலி:—எனது கண்மணி ரூபாவதி இதுவரையில் எங்கிருந்தாள்? என்? சுசீலரவர்களே!

[ரூபாவதியையும், சுந்தராநந்தனையும் சூரசேநன் பிடித்துக்கொண்டு வாராநிற்பச் சற்குணனும் வீரேந்திரனும் வருகின்றனர்.]

சுசீலன்:—அதோ நமது மகாராஜா அவர்களும் வழுதியாரும், சோழராஜாவும் வருகிறார்கள்! நீங்களிருவரும் சற்று உள்ளே போங்கள்.

[கோமளவல்லியுஞ் செவிலியும் போகின்றனர்.]

சூரசேநன்:—தாங்களெல்லாரும் இப்படி வீற்றிருந்தருளுங்கள்.—அப்பா! எனது கண்ணே! சுந்தராநந்தா! இப்படி வா. (முத்தமிடுகின்றான்) ஓ! சுசீலரே! நீர் இவ்விடமிருந்து இவர்கள் அனைவருந் தங்குவதற் கேற்ற வசதியான இடம் அமைப்பீராக. நாம் எனது கண்டெடுத்த நிக்ஷேபம்போலும் பெண்மணி ரூபாவதியையும் எமது அழகொரு வடிவமாய் அமைந்து நின்ற அருமை மருகன் சுந்தராநந்தனையும் இட்டுக்கொண்டு அந்தப்புரஞ் சென்று அவ்விடத்திலுள்ள எமது தலைவி முதலாயினோரும் இவ்விருவரது காட்சியினாற் போதரும் ஆனந்தத்தை யநுபவிக்குமாறு செய்து வருகின்றோம். இதற்குட் சேவகா!

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகாராசா! ஆணை!

சூரசேநன்:—நீ சென்று சிறையிலுள்ள நயவசநனைச் சீக்கிரமாய் இங்கழைத்து வா. போ. தாமதஞ் செய்யாதே!

[சேவகன் போகின்றான்.]

[சூரசேநனும், சுந்தராநந்தனும் ரூபாவதியும் போகின்றனர்.]

வீரேந்திரன்:—வழுதியாரே! நாம் படையெடுத்து வரும்போது என்ன எண்ணத்தோடு வந்தோம்! அஃது எப்படி முடிந்தது! பார்த்தீர்களா! இதுவன்றோ சிவபெருமான் செயலென்பது!

சற்குணன்:—நம் அழகீசரது அருட்பிரேரகம் அவ்வாறிருக்கும்போது * "படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றி" மாயும் மனிதர் செயலென்னே!

சுசீலன்:—இவை யெல்லாம் நம் ஆலாசியநாதர் ஆனந்தம்பூத்தயராகிற்குந் திருவருள் விளையாடல்களே யல்லவோ!

* நாலடியார்

சற்குணன்:—ஆம். அதற்குமோ ஐயமுண்டோ?

[சூரசேநன் வருகின்றான்.]

சூரசேநன்:—தமிழ் வேந்தர்காள்! அடியேன் இதுகாறுந் தங்கள் இருவரையுந் தனியே இவ்விட மிருத்தி விட்டுச் சென்ற பிழையைப் பொறுத்தருளுவீர்!

வீரேந்திரன்:—அதனாலொன்றும் பாதகமில்லை. வீற்றிருந்தருளுங்கள்.

[நயவசநன் வருகின்றான்.]

நயவசநன்:—ராஜ சமுகத்தில் அடியேன் நயவசநன் வந்தனம்!

சூரசேநன்:—எமது பிரிய நேசராகிய நயவசநரே! எளியேம் உண்மையை விசாரியாது நுமக்கிழைத்த பெருந் தீங்கினைக் குறித்து மிகவும் விசனப்படுகின்றோம். ஆதலினெம் பிழையைப் பொறுத்தருளுவீரென்று நம்புகின்றோம்.

(நயவசநனை வணங்குகின்றான்.)

நயவசநன்:—இவையனைத்தும் பழவினையின் பயனேயாம்! ஆதலின் அவற்றிற்காக நாம் மனவருத்த முறுவதென்னையோ! இறைவனே! கருவூர் காவலா! எழுந்தருளுவாய்! நின்மீது தவறொன்றுமில்லை!

(அரசனெழுகின்றான்; நயவசநன் வீற்றிருக்கின்றான்.)

வீரேந்திரன்:—என் தாமதஞ் செய்யவேண்டும்? சோதிடம் வல்லாரை விளித்து ஒரு நல்ல சுப முகூர்த்தம் வைத்து மணவினையைக்கூடிய சீக்கிரத்தில் முடித்துவிடுவோமே?

சூரசேநன்:—ஆ! அப்படியே செய்வோம்! ஏன்? சுசீலரே! உம்முடைய குமாரி அம்புஜாட்சியின் விவாகத்தையும் இதனொடு சேர்த்து நடத்திவிட்டாலென்னை?

சுசீலன்:—ஆம்! அதற்கென்ன? அவ்விடத்து இஷ்டப்படியே செய்துவிடுவோம். அது விஷயத்தில் எனக்கு ஆக்ஷேப

மொன்றுமில்லை. மற்றைப்படி நமது நயவசநர் குமாரன் சந்திரமுகனுடைய விவாகத்தையுஞ் சேர்ந்து நடத்தி விடலாமோ என்று நினைத்தேன். ஆனால் சமுகத்தின் எண்ணம் எப்படியோ!

சற்குணன்:—என்? அதையுஞ் சேர்த்தே செய்துவிடலாம். அதைக்குறித்து ஒரு யோசனையுமில்லை. 'எங்கே எதிலும் மூன்று சேர்ந்து நடத்தலாகாது என்பார்களே யென்று நாம் நினைக்கப் போகிறோமோ?' என்று அவ்விடத்தில் ஏதேனும் யோசனையுண்டோ?

சூரசேநன்:—அஃதொன்றுமில்லை! அஃதொன்றுமில்லை!! நம்முடைய சமஸ்தானத்து வித்துவான் வித்தியாசாகரப் புலவருடைய சஷ்டியப்த பூர்த்தியும் இப்பொழுதுதான் வருகிறதாம். அதற்கென்னை? அதையுஞ் சேர்த்து இவற்றுடன் நடத்திவிட்டாற் போகிறது. சேவகா!

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—மகராசா! உத்தரவு!

சூரசேநன்:—நீ போய் நயவசநர் குமாரன் சந்திரமுகனையும், மந்திரியார் மருகன் சுகுமாரனையும் அழைத்துக்கொண்டு வா.

[சேவகன் போகின்றான்.]

ஓ! சுசீலரே! நீர் சென்று நமது சமஸ்தானத்துக் குருமூர்த்தி ஜோசியரைக் கேட்டு ஒரு நன் முகூர்த்தம் வைத்துக்கொண்டு விரைவாய் வாரும்!

சுசீலன்:—ஆகுக. அப்படியே! [சுசீலன் போகின்றான்.]

[சேவகன் வருகின்றான்.]

சேவகன்:—இதோ அவர்களும் வந்துவிட்டார்கள்!

[சேவகன் போகின்றான்.]

[சுகுமாரனுஞ் சந்திரமுகனும் வருகின்றனர்.]

சுகுமாரன்:—ராஜசந்நிதியில் அடியேன் சுகுமாரன் வந்தனம்

**சந்திரமுகன்:**—அடியேன் சந்திரமுகன் வந்தனம்.
**வீரேந்திரன்:**—இப்படி வாருங்கள் சமீபத்தில்.
**சூரசேநன்:**—வாருங்கள்!—சேவகா!

[சேவகன் வருகின்றான்.]

**சேவகன்:**—மகராசா!
**சூரசேநன்:**—நீ நம் அந்தப்புறஞ் சென்று, நமது மகளையும் மருகனையுஞ் சீக்கிரம் இங்கு அழைத்துவா!

[சேவகன் போகின்றான்.]

**சற்குணன்:**—வையை யாற்றின் வடகரையில் நமது பாசறைக்கு ஆளனுப்பி யாயிற்றோ?
**சூரசேநன்:**—ஓ! அப்பொழுதே எமது தலைவியும் பரிவாரங்களுஞ்சென்றிருக்கிறார்கள். இதற்குள் வந்திருப்பார்கள்.

[சுந்தராநந்தனும் ரூபாவதியும் அம்புஜாட்சியுங் கநகமாலையும் வாரா நிற்பச் சுசீலனும் வருகின்றான்.]

(சுந்தராநந்தனுஞ் சுகுமாரனுஞ் சந்திரமுகனும் பேசிக்கொள்ளா நிற்ப ரூபாவதி தன் தோழிமாரொடு பேசுகின்றாள்.)

**சற்குணன்:**—என்ன? சுசீலரே! என்றைக்கு முகூர்த்தம் வைத்தார்?
**சுசீலன்:**—இன்றைக்கு எட்டாநாட் குருவாரம் மகா வித்துவான் வித்தியாசாகரப்புலவருடைய சஷ்டியப்தபூர்த்தி வருதலின் அதற்கும் ஏற்ப அன்றைக்கு மிதுனலக்கினத்தில் வைத்திருக்கிறார்! அன்றைக்குச் சகலமும் நன்றாயிருக்கின்றன வென்று சொன்னார்.
**சூரசேநன்:**—சரி. அதே முகூர்த்தம் மற்றைய மூன்று விவாகங்களுக்கும் பொருந்துகிறதோ? அதைக் கேட்டீரா?
**சுசீலன்:**—ஆம். அஃது அந்த மூன்றுக்கும் பொருந்துகிறது என்று தான் சொன்னார்.

நரசேநன்:—ஆனால், நமது குமாரி ரூபாவதியின் விவாகத் தொடு மந்திரி சுசீலர் புத்திரி அம்புஜாட்சியின் விவாகமும் நயவசநர் குமாரன் சந்திரமுகன் விவாகமும் புலவர்சஷ்டியப்தமும் நடத்தப்படும். வழுதியாரே! தங்களுடைய மாமனார் வீரமார்த்தாண்டத் தொண்டை ராஜருக்கு நிருபம் எழுதிக் கூடிய சீக்கிரத்தில் அவரை வரவழையுங்கள். நாமும் எமது மந்திரியார் இராஜோபாயரை வரவழைக்கிறோம். சரி. வெகுநேரமாயிற்று. நாம் இனிச் சென்று சற்று இளைப்பாறுவோம். வாருங்கள்.

சற்குணன்:—சரி. போகலாம்.

(இறைவனைத் துதித்துப் பாடுகின்றான்.)

உளமென்று மாலயத் துன்னைவைத் துப்பணியு
முத்தமப் பத்தராவார்
தளர்கின்ற காலத்தி லூன்றுகோ லாகியவர்
தம்மைப் புரந்துமவர் தம்
வளரன்பு விதைகொண்மன வயலதனு ளல்லின்ப
மழைபொழியு மெழிலியாகி
யொளிர்சச்சி தானந்த மூர்த்தியே யெவ்வண்ண
முனதருளை வாழ்த்துகேனே. (௧௦௭)

"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே" (௧௦௮)

[யாவரும் போகின்றனர்.]

ஐந்தாம் அங்கம் முற்றிற்று

* திருவாசகம்

# பின்னுரை

சுந்தரானந்தன்:—எங்கணும் வியாபியாகி இன்பமும் இரக்கமு முடைய எல்லாம் வல்ல ஈசனது அருள்பெற்றுக் கல்வி கற்றுப் பொருளூற்றுச் சீர்த்தி வாய்ந்து, இணக்க முள்ள மனைவியை யடைந்து நன்மகவுச் செல்வம் பொருந்தித் தற்காலத்துப் பிறர்நன்மை நாடி வாழுதலே மாந்தரியல்பாம். ஆதலின் இயற்கை விரோதமாகிய நெறியினிற் செல்லுதலொழிந்து, இயற்கை யொழுங் கின் முறை வழுவாது ஒழுகுவேமாக. பிறர்பொருளை வெஃகுதலும் பிறர்க்குக் கேடு சூழ்தலுந் தனக்கே துன்பந் தருதலைக் கண்கூடாகக் கண்டனமாதலின் அவற்றினின்றுந் தவிர்வேமாக. மணவினையின் மூலமா யுள்ளது மெய்யன்பேயாம். ஆதலின், அதனைக் கேவலம் உடற்கூட்டமாக எண்ணுகின்ற மாந்தர்மதி யென்னே! உளத்தோடு உளஞ் சென்று ஒன்றலே காதல்! அதுவே மெய்யன்பு அதுவேஉண்மை நேசம்! இல்வாழ்க்கையே நல்லொழுக்கங் கற்பிக்கும்உத்தமக்கல்லூரியாம். ஆகவே அகிலத்துள்ள ஆன்மகோடிகளை வெறுத்துத் துறவறம் பூண்டுஉடல்வற்றி மெய்ந்நிலை தவறி வாழுநர் போலாது, அன்பினுற் கட்டுண்டு இல்லறம் பூண்டு மனித சமூகத் தில் இருந்து பிறர்க்குப் பயன்பட்டு வாழ்வேமாக.

(வாழ்த்துப் பாடுகின்றான்.)

என்னை யாளு மாமதுரை
மீச னருளாற் பொய்த்தலின்றி
யென்று மெழிலி செறிந்துமழை
யினிதிற் பொழிக வாடவர்தாங்

கன்னற் சாற்றைப் பாகுதனைக்
கண்டை வென்ற மொழியுடனே
கழற வரிய வழகுடைய
கற்புக் கரசா மாதர்தமோ
டின்னல் சிறிது மெய்தாம
லெனது பிரானை மனநிறுவி
யில்ல றத்தி னியல்வழுவா
திருந்தெஞ் ஞான்று மின்புறுக
நன்னர் மகிப ரரசாள்க
ஞானந் தழைத்து விளங்கியிந்த
ஞாலத் துள்ளார் யாவருமே
நன்மை யடைந்து வாழியவே. (௪௦௬)

(போகின்றான்

## ரூபாவதி நாடகம்
## முற்றிற்று

## பரதவாக்கியம்

### நேரிசை வெண்பா

இன்னமிழ்துங் கைப்ப வினிக்குந் தமிழ்மொழியும்
பொன்னுமருள் புந்திப் புலவோரு—மன்னியெற்குச்
செந்தமிழ்கற் பித்தகலைச் செஞ்சொற் சபாபதியுஞ்
சந்ததமும் வாழியவே தாம். (௧௧௦)

## வாழ்த்து

### கலிவிருத்தம்

சுந்த ராநந்த வள்ளற்குச் சோபன
மந்த வாணகை மாதுரு பாவதி
யெந்த நாளினு மெய்துக சோபன
நந்த நாடக நண்ணுக சோபனம். (௧௧௧)

திருச்சிற்றம்பலம்

# செய்யுள் முதற்குறிப்பகராதி

[உடுக்குறியுற்றன மேற்கோட்பாக்களாம்]


| முதற்குறிப்பு. | பக்கம். | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| ங்கயற்க ... | 108 | என்னோநின் ... | 44 |
| ஞ்சுகமே ... | 117 | என்னையாளு ... | 186 |
| துலகித் ... | 108 | ஐயோமறந் ... | 120 |
| ருவுரு ... | 169 | * ஒருவனே ... | 159 |
| ண்புகுடி ... | 119 | ஒழுகுநமி ... | 75 |
| அன்னையெனுஞ் ... | 28 | ஒற்றுமையின் ... | 123 |
| ஆசாற்பணி ... | 161 | கரிசுடைய ... | 131 |
| ஆசான்றனை ... | 161 | கரும்பிழிசா ... | 58 |
| * ஆடகமது ... | 178 | கலையெலாந் ... | 38 |
| ஆம். அவ்வ ... | 139 | கற்றுணர்ந்த ... | 169 |
| ஆவலொடென் ... | 108 | * கனவினுமின் ... | 138 |
| ஆனேறினி ... | 64 | கன்னிகைரு ... | 119 |
| இராப்பாடிப் ... | 107 | கன்னிருபா ... | 22 |
| இராமனுனி ... | 51 | காஞ்சியிடை ... | 107 |
| இறைவன்வந் ... | 62 | * குற்றமேதெரி ... | 136 |
| இன்பமேயி ... | 105 | கூடைகயே ... | 107 |
| இன்பவனப் ... | 75 | * கோடுங்கோன்ம ... | 89 |
| இன்னமிழ்துங் ... | 188 | கோட்டையினைச் ... | 119 |
| உமையவடன் ... | 119 | சதாசிவ ... | 162 |
| உருக்கியிட்ட ... | 119 | சந்தனநறு ... | 175 |
| உலகமென்னு ... | 22 | சம்போசாம ... | 64 |
| உலவுசெனு ... | 22 | சரிதான். தந் ... | 139 |
| உளமென்னு ... | 185 | சுத்தவீரர் ... | 51 |
| உள்ளந்திரிந் ... | 136 | சுந்தரபாண ... | 106 |
| எத்தனையோ ... | 117 | சுந்தரானந்தனெ ... | 108 |
| என்றனது ... | 74 | சுந்தரானந்தவ ... | 188 |
| என்னருமை ... | 107 | செம்மையுள்ள ... | 64 |
| என்னினிய ... | 120 | சொல்லுவார் ... | 4 |
| என்னுடன்பி ... | 26 | சோலைதன்னிற் ... | 75 |
| என்னுடைய ... | 107 | தந்திரசீரன். ... | 140 |

# செய்யுண் முதற்குறிப்பகராதி


| முதற்குறிப்பு. | பக்கம் | முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| தந்தையேயின் | ... 28 | போதன்வந் | ... 61 |
| தந்தையையுந் | ... 28 | * போற்றினும் | ... 171 |
| தலைமேல்விற | ... 161 | மங்கைபாக | ... 124 |
| தலைவன்வந் | ... 62 | மத்தகோகிலந் | ... 28 |
| தாயாரு | ... 119 | மந்தநகை | ... 79 |
| திங்களெனு | ... 116 | மழகளிறே | ... 61 |
| * தீர்ந்தவன் | ... 159 | மனங்கொண்டு | ... 169 |
| தென்றலே | ... 107 | மாரன்மலர்க் | ... 74 |
| * தொண்டவுழ | ... 177 | மார்பினுநா | ... 163 |
| தோகைமா | ... 54 | மாருகக் | ... 108 |
| நலவிமல | ... 163 | * மின்னிகரா | ... 53 |
| நறைமுடிக்கார்க் | ... 163 | * முற்பகற்செய் | ... 88 |
| * நன்றிமறப் | ... 68 | மூவாமுன்ன | ... 65 |
| நன்றேநும | ... 123 | மேகமே | ... 107 |
| நிம்பமலர் | ... 85 | மேற்கொண்ட | ... 131 |
| * நுண்ணறிவு | ... 103 | வள்ளலும்வந் | ... 62 |
| பட்சமுடன் | ... 107 | வனப்புடையா | ... 75 |
| பண்களிகூர்ந் | ... 58 | வாரல்சகோ | ... 80 |
| பன்னருஞ்சற் | ... 139 | வாழ்க ! வாழ்க ! | ... 139 |
| புகழ்ந்துநீர் | ... 27 | * வானுகி | ... 185 |
| புண்கொண்ட | ... 79 | வானேங்கும் | ... 163 |
| பூஞ்சோலைக் | ... 107 | விண்ணிடத்துச் | ... 107 |
| பூமகளே | ... 79 | வெளியுறவுல | ... 152 |
| பெருமான்வந் | ... 61 | வேலையின்றிப் | ... 83 |
| போற்புறுரு | ... 22 | வையமேத்து | ... 64 |
| பொன்னனைய | ... 116 | வையையே | ... 107 |

## இந்நூலாசிரியர் இயற்றிய

# நூல்கள்

1. கலாவதி **2 0 0**

இஃது ஒரு புதிய தமிழ் நாடகம். எழங்கமுள்ளது. ஸ்ரீமான். டி. ராமகிருஷ்ண பிள்ளை. B. A. F. M. U., F. R. H. S., அவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. பி. ஏ. பரீக்ஷைக்குப் பாடமானது.

2. ரூபாவதி **1 4 0**

இஃது ஓர் புதிய தமிழ் நாடகம். ஐந்து அங்கமுள்ளது. இண்டர் மீடியிட் பரீக்ஷைக்குப் பாடமானது.

3. தமிழ் மொழியின் வரலாறு **1 0 0**

இது தமிழ்ப் பாஷையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, வேறுபாடு, சிறப்பு, சீர்திருத்தம், சரித்திரம் முதலியன கூறும் ஓர் அரிய தமிழ் நூல். யாவரும் எளிதில் அறிந்து கொள்ளத் தக்க செந்தமிழ் வசன நடையில் எழுதப் பெற்றுளது. தமிழர் எவர்க்கும் இன்றியமையாதது. பி. ஏ. பரீக்ஷைக்குப் பாடமானது.

4. மான விஜயம் **1 0 0**

இது ஓரங்கத்தில் முடிந்துள்ள ஒரு தமிழ் நாடகம். முழுதும் செய்யுளாகவே அமைந்துள்ளது. சுதேச மித்திரன் ஆசிரியர் காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய முகவுரையுடன் கூடியது. அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர். ந. பலராம ஐயர் எழுதிய உரையுடன்கூடியது.

5. பாவலர் விருந்து. **1 0 0**

(முதல் நாள்) இனிமையும், புதுமையும், வாய்ந்த அநேக சிறிய செய்யுள் நூல்க[illegible]கொண்டது. பண்டிதரும் பாமரரும் படித்துணர்ந்து பயன் பெறத் தக்கது. அண்ணாமலை. சர்வ கலாசாலைத் தமிழ்பண்டிதர் ந. பலராம ஐயர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

6. தனிப் பாசுரத் தொகை. **1 0 0**

(முதல் வரிசை) இது 43 தனிப்பாசுரங்களடங்கிய தோர் உறுதிநூல். மாணுக்கர் யாவர்க்கும் பெரிதும் பயன்

படத்தக்கது. கனம்பொருந்திய ஜீ யூ. போப்பை யிரவர்க ளால் ஆங்கில பாஷையிலுஞ் செய்யுளாக மொழி பெயர்க்கப் பட்டுளது. அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ரா. பலராம ஐயர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

7. நாடகவியல் **1 0 0**

இது நாடகத் தமிழிலக்கண நூல்; நாடகவமைதியை நன்கு விளக்கி, இனிமை தோன்றக் கூறுவது. தமிழ் மொழி யின்பீது ஆர்வமுடையார் யாவருக்கும், நாடகாசிரியர்க்கும் இன்றியமையாதது. மிகவும் புதுமையாக அமைக்கப்பட் டுளது. அண்ணாமலை சர்வ கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ரா. பலராம ஐயர் எழுதிய விரிவுரையுடன் கொண்டது.

8. மதிவாணன். **0 12 0**

இது மிகவும் உயரிய செந்தமிழ் நடையில் இயன்றுளது. புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை. தமிழுலகில் இணை யற்றது. இதனைப் படிப்பவர் எவரும் இதனைக் கைவிடார் என்பது திண்ணம். தமிழில் நற்பயிற்சி யுண்டாக்கும் கதா ரத்தினம்.

9. தமிழ்ப் புலவர் சரித்திரம். **0 8 0**

இது பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்த தமிழ்ப் புல வர்களைப் பற்றியும், புகழேந்தி, செயங்கொண்டான் முதலி யோரைப் பற்றியும் கூறுவது.

10. தமிழ் வியாசங்கள். **0 5 0**

இது எளிய நடையில் எழுதப்பட்டதோர் அரிய நூல். தற்காப்பு நியமம், பொய்த் தோற்றங்கள், ஜீஹாசிகளின் நானவித வர்ணங்கள், மனவமைதி, சொற்பொருளாராய்ச்சி முதலிய வியாசங்களைக் கொண்டது.

11. ஸ்ரீ. மணியசிவனார் சரித்திரம் **0 4 0**

இது இடையிடையே வடமொழி மேற்கோள்கள் பெய் யப் பெற்றதோர் சரிதம். சைவ மதத்தின் உண்மை பல தெரிவிப்பது. எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

வி. கோ. சுவாமிநாதன், மதுரை.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.